விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2041 கார்த்திகை 20 திங்கட்கிழமை (06.12.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 352

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## இரண்டு நாட்கள் மழை தொடரும்

வங்கக் கடலில் உருவான காற்றழுத்த தாழ்வு நிலை வலுவடைந்து அதே இடத்தில் நிலை கொண்டிருப்பதால் யாழ்ப்பாணம் உட்பட வடக்கு மாகாணத்தில் இரண்டு நாட்களுக்கு மழை பெய்யும் என வானிலை அவதான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன் இடியுடன் கூடிய கனமழை பெய்யும் வாய்ப்புள்ளதாகவும் கடலில் இராட்சத அலைகள் எழக்கூடும் எனவும் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## கடல் மட்டம் உயர்கிறது

# அடாது பெய்கிறது மழை படாதபாடுபடும் மக்கள்

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் கடந்த இரண்டு வாரங்களாக பெய்துவரும் கன மழை காரணமாக சுமார் 7ஆயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

கடந்த இரண்டு வாரங்களாக இடைவிடாது தொடர் மழை பெய்து வருகிறது. இந்நிலையில் தாழ் நிலங்களில் உள்ள மக்கள் மிகப் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கிளிநொச்சி மாவட்டத்தில் இரணைமடு குளம் உட்பட பல குளங்கள் வான் பாய ஆரம்பித்துள்ள நிலையில் மீளக்குடியமர்ந்துள்ள மக்கள் இருப்பிடம் கூட இல்லாத நிலையில் தவிக்கின்றனர். (02ஆம் பக்கம் பார்க்க)

# பயங்கரவாதிகளை மட்டுமே படையினர் கொன்றனர்!

## லண்டன் ரைம்ஸுக்கு ஜனாதிபதி செவ்வி



(லண்டன்)

படையினர் எந்தவொரு தமிழ் குடிமகனையும் கொல்லவில்லை. அவர்கள் புலிப் பயங்கரவாதிகளை மட்டுமே கொன்றனர். எமது அறிவுறுத்தல் எந்தவொரு பொதுமகனையும் தாக்கக்கூடாது. இது ஒரு மனிதாபிமான நடவடிக்கை என்பதாகவே இருந்தது. இவ்வாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ லண்டன் ரைம்ஸ் இதழுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றில் தெரிவித்துள்ளார். (20ஆம் பக்கம் பார்க்க)

## கே.பி.பற்றி வீரவன்சவின் கருத்து கோத்தபாய ராஜபக்ஷ கடும் அதிருப்தி!

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் முன்னாள் வெளிநாட்டு பொறுப்பாளர் கே.பி. தொடர்பில் அமைச்சர் விமல் வீரவன்ச அண்மையில் வெளியிட்ட கருத்து தொடர்பில் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அதிருப்தி கொண்டதாக கூறப்படுகிறது.

வெளிநாடுகளில் அரசாங்கத்துக்கு எதிரான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர்களை அடையாளம் காணவும் விடுதலைப்புலிகளின் வெளிநாட்டு தொடர்புகளை அறிந்துகொள்ளவுமே கே.பியை அரசாங்கம் பயன்படுத்துவதாக விமல் வீரவன்ச குறிப்பிட்டிருந்தார்.

அத்துடன் கே.பி.யை பயன்படுத்தி வெளிநாட்டு புலம்பெயர்ந்த மக்கள் மத்தியில் ஒரு குழப்ப நிலையை (02ஆம் பக்கம் பார்க்க)

## ஜேர்மனி விஜயத்தை ஜனாதிபதி தவிர்த்தார்

(கொழும்பு)

பிரித்தானியாவுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அதன்பின்னர் ஜேர்மனி செல்லத் திட்டமிட்டிருந்தார்.

எனினும் ஜனாதிபதியின் வரவுக்கு எதிராக மிகப் பெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொள்வதற்கு ஜேர்மனியிலுள்ள தமிழ்மக்கள் தயாராகிவருவதாக இலங்கை புலனாய்வுத் துறையினர் தெரிவித்ததை தொடர்ந்து அந்த விஜயம் இரத்து செய்யப்பட்டுள்ளது. (ந-5)

## விக்கிலீக்ஸ் இணையம் அம்பலமாக்கிய தகவல் தமிழ் அரசியல்வாதிகள் மீது சட்ட நடவடிக்கை

(கொழும்பு)

விக்கிலீக்ஸ் இணையத்தளத்தில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அரசியல் தலைவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு இலங்கை அரசாங்கம் தயாராகி வருவதாக அரசாங்க உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இவ் விவகாரத்தில் முக்கிய தமிழ் அரசியல் தலைவர்கள் உட்பட பலருடைய பெயர்கள் இதில் குறிப்பிடப்பட்டுள்ளன.

அரசாங்கத்தைப் பற்றிய தகவல்களை இராஜதந்திரிகளுக்கு வழங்கினார்கள் என்ற அடிப்படையில் அரச புலனாய்வுச் சட்டத்தின் கீழ் இவர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியுமா என்பதையிட்டு அரசாங்கத்தின் உயர் மட்டத்தில் ஆராயப்பட்டு வருவதாகவும் தகவல்கள் வெளியாகியிருக்கின்றது.

இவ்வாறான சட்ட நடவடிக்கை ஒன்றை எடுப்பது என்பது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் நடத்துவதற்கு உத்தேசித்திருக்கும் பேச்சுவார்த்தைகளை பாதிப்பதாக அமையும் எனக் கருதப்படுகின்றது.

அதனால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான பேச்சுக்களுக்கு முன்னதாகவா? அல்லது பேச்சுக் (20ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு புறப்படுவதற்கு முன் தூதரகத்தில் நடந்த சம்பவம்

## கடும் கோபத்தில் இருந்த ஜனாதிபதி மகிந்த

(லண்டன்)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரித்தானியாவை விட்டு வெளியேறுவதற்கு முன்பாக லண்டனில் அமைந்துள்ள இலங்கை தூதரகத்தில் கடந்த 2ஆம் திகதி 300 பார்வையாளர்கள் மத்தியில் உரையாற்றியுள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிரித்தானிய வாழ் தமிழ் மக்கள் நடத்திய தீவிரமான போராட்டத்தால் ஒக்ஸ்போர்ட் ஒன்றியத்தில் அவர் ஆற்றவிருந்த உரை இரத்து செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தங்கியிருந்த நட்சத்திர விடுதியை முற்றுகையிட்ட தமிழ் மக்கள் கடும் குளிரையும் பொருட்படுத்தாது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கைது செய்யும்படி ஆர்ப்பாட்டம் நடத்தியிருந்தனர்.

இந் நிலையில் (20ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கை அரசாங்கத்தை காப்பாற்ற பொக்ஸ் முயற்சி

(கொழும்பு)

இலங்கை அரசுக்கு ஆதரவான கொள்கையை கொண்டுள்ள பிரித்தானியாவின் பாதுகாப்பு செயலர் லியம் பொக்ஸ் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சென்று சந்தித்தது ஆச்சரியமானதல்ல. ஆனால் அவர் மட்டுமே ஜனாதிபதி மகிந்தவைச் சந்தித்த பிரித்தானியா நாட்டின் அரசியல்வாதி என,த கார்டியன் பத்திரிகை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அது மேலும் தெரிவித்துள்ளதாவது, (02ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## கொரியப் போர்ப் பதற்றம்
# இலங்கைக்கான விஜயத்தை கடற்படைத் தளபதிகள் நிறுத்தினர்

(கொழும்பு)

கொரியாவில் ஏற்பட்டுள்ள போர் மூட்டம் காரணமாக இலங்கைக் கடற்படையின் 60ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்ள விருந்த பல நாடுகளின் தளபதிகள் தம்து விஜயத்தை நிறுத்தியுள்ளனர்.

இது குறித்து இலங்கை கடற் படைத்தளபதி வைஸ் அட்மிரல் திசார சமரசிங்க தெரிவிக்கையில்,

எதிர்வரும் 9 ஆம் திகதி நடைபெற வுள்ள கடற்படையின் 60 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொள்ள கொழும்பு வரவிருந்த தென் கொரியா, பிலிப்பைன்ஸ், மலேசியா, இந்தோனேசியா போன்ற நாடுக ளின் கடற்படைத் தளபதிகள் தமது பயணத்தைக் கைவிட்டுள்ளனர்.

கொரியாவில் ஏற்பட்டுள்ள போர்ப் பதற்றத்தை அடுத்தே அவர்கள் இந்த முடிவை எடுத்துள்ளதாகவும் அவர் கூறினார். ஆயினும் அவுஸ ரேலியா, பங்களாதேஷ், இந்தியா, பாகிஸ்தான், ஐக்கிய அரபுக் குடியரசு, மாலைதீவு ஆகியவற்றின் கடற்படைத் தளபதிகள் திட்டமிட்டபடி விழாவில் கலந்து கொள்ளவுள்ளதாக தெரிவிக் கப்பட்டுள்ளது.

அதேவேளை கனடா, சீனா, பிரான்ஸ், இந்தோனேசியா, ஈரான், ரஷ்யா, சிங்கப்பூர், தென்னாபிரிக்கா, தாய்லாந்து, பிரித்தானியா, அமெ ரிக்கா போன்ற நாடுகளின் கடற்படை கள் சார்பில் பிரதிநிதிகள் அனுப்பி வைக்கப்பட உள்ளதாகவும் அறிவிக் கப்பட்டுள்ளது.

இந் நிகழ்வில் கலந்து கொள்வதற் காக சர்வதேச நாடுகளில் இருந்து 300 முதல் 400 வரையான அதிகாரி களும் கடற்படையினரும் இலங் கைக்கு விஜயம் செய்யவுள்ளதாக கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் திசார சமரசிங்க தெவிவித்தார்(ந-5)



## அரச நிறுவனங்களில் தமிழில் உரையாடும் வாய்ப்பு விரைவில்
# அமைச்சர் வாசுதேவ நம்பிக்கை

(கொழும்பு)

எதிர்வரும் சில வருடங்களில் அரசாங்க நிறுவனங்களில் தமிழ் மொழியில் தொடர்பாடக்கூடிய சூழ் நிலை உருவாகும் என தேசிய மொழி அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நாட்டின் சகல பாகங்களிலும் வாழும் தமிழ்மக்கள் அரசாங்க நிறு வனங்களில் தமிழ் மொழியில் தொடர்பாடக்கூடிய சாத்தியம் ஏற் படும் என அவர் நம்பிக்கை வெளி யிட்டுள்ளார்.

சிங்களமொழியுடன்தமிழ்மொழி யையும் அரச கரும மொழியாக அமுல்படுத்துவதற்கான நடை முறைச் சாத்தியமுடைய திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

தமிழ் பேசும் மக்கள் தங்களது கடமைகளை தங்கு தடையின்றி மேற்கொள்ள கூடிய ஓர் நிலை உரு வாக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கடந்த காலங்களில் அரசாங்கங் களுடன் கூட்டணி அமைத்துக் கொண்ட இடதுசாரிக் கட்சிகள் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது குறித்து கூடுதல் கவனம் செலுத்தவில்லை என அவர் தெரிவித்தார். (ந-5)

## கல்வி இளமாணி விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தால் நடத்தப்படும் கல்வி இள மாணி (இயற்கை விஞ்ஞானங்கள்) பட்ட நிகழ்ச்சித் திட்டத்திற்கான விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் விஞ்ஞானமாணி நிகழ்ச் சித் திட்டத்தின் மட்டம் - 3,4/5 ஆகியவற்றைப் பூர்த்தி செய்தவர் களும்,

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்திலிருந்து விஞ்ஞானமாணிப் பட்டம் பெற்றவர்களும் இக் கற்கை நெறிக்கு விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்படிவங்களை 08.12. 2010 முதல் 13.12.2010 வரை இலங் கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப் பாண பிராந்திய நிலையத்தில் பெற்று விண்ணப்பிக்கலாமென இணைப் பாளர் அறிவித்துள்ளார். (ந)

## ஒக்ஸ்போர்ட் மாணவர்களுக்கும் புலிகளுக்கும் தொடர்பு உண்டு
# ஆரூடம் கூறுகிறது ஜே.வி.பி

(கொழும்பு)

பிரித்தானிய ஒக்ஸ்போர்ட் பல்க லைக்கழக மாணவர் அமைப்பிற் கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக் கும் நெருங்கிய தொடர்பு இருப்ப தாக ஜே.வி.பி.யின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித கேரத் குற்றம் சுமத்தியுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரித்தானியாவிலுள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் உரையாற் றுவதற்காகச்சென்றபோது பிரித்தானி யாவிலுள்ள புலம்பெயர் தமிழர்கள் தமது ஆர்ப்பாட்டங்களை முன்னெ டுத்துள்ளனர்.

அவை ஆரம்ப கட்டங்களில் சிறிய அளவில் மேற்கொள்ளப் பட்ட போதும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக் கழகத்தில் உரையாற்றுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் மேற்கொள் ளப்படும் சந்தர்ப்பத்தில் அங்கு வாழ் கின்ற மக்கள் மாபெரும் ஆர்ப்பாட் டங்களை முன்னெடுத்த நிலையில் அவ்வுரை இரத்துச் செய்யப்பட்டது.

இச்சம்பவம் கண்டனத்திற்குரிய தாகும். தமது கட்சி எந்த காலகட்டத் திலும் பயங்கரவாத எதிர்ப்புக் கொள் கைகளில் இருந்து மாறுபடாது என அவர் குறிப்பிட்டுள்ளார். இதேவேளை ஜனாதிபதியின் இலண்டன் விஜயம் தொடர்பில் அரசாங்கத் தரப்பு சரியான மதிப்பீடுகளை மேற்கொள்ள வில்லை என்று அவர் குற்றஞ் சுமத்தினார். (ந-5,7)

## ஐயப்பன் ஆலயத்தில் மகிஷி சங்காரம்

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் சபரீச ஐயப்பன் தேவஸ்தான மஹோற்சவ உற் சவங்களின் 7ஆம் நாள் உற்சவ மான இன்று வேட்டைத்திருவிழா, மகிஷிசங்காரம், பூசைகள் மாலை 5.00மணிக்குநடைபெறும் என ஆல யப் பிரதம குரு கி.அரிகரசுதசிவாச் சாரியார் அறிவித்துள்ளார். (ந-7)

## அடாது பெய்கிறது மழை...

மேலும் பிரமந்தனாறு, சாந்த புரம், பொன்னகர், பன்னங்கண்டி, முரசுமோட்டை, கண்டாவளை, புளி யம் பொக்கணை, கோரக்கண்பட்டு ஆகிய இடங்களை சேர்ந்த மக்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும் பொது இடங்களிலும் தங்கவைக் கப்பட்டுள்ளனர்.

கோரக்கண்பட்டு பிரதேசத்தைச் சேர்ந்த 200 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் இடம்பெயர்ந்து முரசு மோட்டை ரோமன் கத்தோலிக்க பாடசாலையில் தங்கவைக்கப் பட் டுள்ளனர்.

இவ்வாறு தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக வன்னி யில் மீள்குடியேற்றப்பட்ட மக்களின் நிலை பரிதாபகரமாக காணப்படு வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

கரையோர மாவட்டமாகிய மன் னார் மாவட்டத்தின் பள்ளிமுனை மற்றும் தலைமன்னார் பகுதிகளில் கடல்நீர்மட்டமம் உயர்ந்திருப்பதாக வும் வடமேற்கு கரையோரக் கிராமங் கள் அனைத்துமே பாதிக்கபட்டிருப்ப தாக மன்னார் பிரதேச செயலாளர் தெரிவித்துள்ளார்.

கடல்நீர் மக்கள் குடியிருப்புக் குள் வருவதை தடுப்பதற்காக மண் அணை ஒன்றை அமைப்பதற்கு அனர்த்த முகாமைத்துவ திணைக் களத்தின் உதவியோடு மன்னார் மாவட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளைநாட்டில்பெய்துவரும் கடும் மழை காரணமாக இடம் பெயர்ந்தோர்களின் எண்ணிக்கை 62 ஆயிரத்தைக் கடந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.(ந-5,7)

## இலங்கை அரசை...

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணை கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என அனைத்துலக மன்னிப்புச் சபை வேண்டுகோள் விடுத்துள் ளது.

ஆனால் பிரித்தானியாவின் பாதுகாப்புச் செயலர் ஜனாதிபதி யை தனிப்பட்ட முறையில் சந்தித்துள் ளார். இது இலங்கைக்கு சார்பான அவரின் கொள்கைகளை எடுத்துக் காட்டுகின்றது.

இலங்கை அரசைக் காப்பாற்ற பொக்ஸ் முயற்சிகளை மேற்கொள் கிறார். ஆனால் இலங்கை அரசு மேற் கொண்ட மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் மிகவும் அதிகம். இலங்கை மீது சுயாதீன விசாரணைகள் அவசியம் என பொக்ஸ் இன் மேலதிகாரியான பிரதமர் டேவிட் கமரோன் தெரிவித்துள்ளார்.

கடந்த வருடம் பொக்ஸ் மூன்று தடவை இலங்கைக்கு சென்றுள்ளார். அது தவிர அண்மையில் இவர் இரு முறை அங்கு சென்றுள்ளார். ஆனால் அவரின் மூன்று பயணங் களுக்குமான செலவுகளை இலங் கை அரசே முழுமையாகப் பொறுப் பேற்றுக்கொண்டது.

மற்றைய இரு பயணங்களுக் குமான செலவுகளை இலங்கை அபிவிருத்தி நிதியம் என்ற அமைப்பு ஏற்றுக்கொண்டுள்ளது. ஆனால் கூகுள் இணையத்தில் தேடியபோது அவ்வாறான அமைப்பின் தடயம் எவையும் காணப்படவில்லை.

சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் விழாவில் கலந்துகொள்வதற்காக அவர் 2009 ஆம் ஆண்டு நவம் பர் மாதம் அங்கு சென்றிருந்தார். ஆனால் அவர் அங்கு தமிழ் மக் களை சந்திக்கவில்லை.

ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் வெளிநாடு வழங்கும் பணத்தில் வெளிநாட்டுப் பயணங்களை மேற் கொள்வது சட்டத்தை மீறும் செய லாகும்.

2008 ஆம் ஆண்டும் பொக்ஸ் இவ்வாறான செயலை மேற்கொண் டிருந்தார். அவர் நிழல் பாதுகாப்புச் செயலாளராக இருந்த காலத் தில் பாதுகாப்பு நிறுவனம் ஒன்றிடம் இருந்து 50 ஆயிரம் ஸ்ரேலிங் பவுண்ஸ்களைப் பெற்றிருந்ததாக த ரைம்ஸ் என்ற ஊடகம் தெரிவித் திருந்தது என அதில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது. (ந-5)

## கே.பி.பற்றி ...

தோற்றுவிக்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக அவர் தெரிவித்திருந்தார்.

கடந்த மூன்றாம் திகதி கொழும் பில் நடத்திய செய்தியாளர் சந்திப்பு ஒன்றின் போது, இறுதி யுத்த காலத் தில் விடுதலைப்புலிகளின் உறுப் பினர்களை மீட்க முயற்சித்த கே.பி தற்போது அரசாங் கத்திற்கு ஆதரவாக உள்ளமைகுறித்து செய்தியாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும் போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் இந் தக் கருத்துகள் தொடர்பில் பாது காப்புச்செயலாளர் அதிருப்தி அடைந் ததுடன் விமல் வீர வன்சவை எச்சரித் [illegible]


மகளிருக்கான விடுமுறைக்கால 10 நாள் வகுப்புகள்

25 வது ஆண்டில் கலாலயா பயிற்சியகம்

பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

கூந்தல் அலங்காரம் : 50 வகையான கொண்டைகள் போடுதல்.

முடி அயன் செய்தல், (Straightening) முடி சுருட்டுதல், முடி நிறமூட்டுதல், 5 வித முடி வெட்டுதல். எவ்வித சிரமமுமின்றி தமக்குத்தாமே முடி வெட்டுவதற்கான பயிற்சி.

Facials, கைகள், கால்கள், விரல்கள், நகங்கள் அழகு படுத்துதல் Waxing, தலை மசாஜ் செய்தல். எவ்வித சிரமமுமின்றி தமக்குத்தாமே Facial செய்வதற்கான பயிற்சி.

இந்து, கிறிஸ்தவ மணப்பெண் அலங்காரம், வித்தியாசமான முறைகளில் சேலை அணிதல்.

மேற்படி பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

தையல் தெரிந்தவர்களுக்கான சாறிபிளவுஸ், சுரிதார், Skirts சட்டைகள் தைக்கும் சான்றிதழ் அற்ற பயிற்சிகள்

மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது

ஆரம்பம் - 10-12-2010 வெள்ளி காலை 9.00 மணி

மேலும் விபரங்களை பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்துகொள்ளலாம்.








வேலையாட்கள் தேவை

பிரபல கட்டடப் பொருட் கள் விற்பனை நிலையத் திற்கு சகல வேலைகளுக்கும் வேலையாட்கள் தேவை.

தொடர்புகளுக்கு:-

சிற்றி ஹாட் வெயார் & ஸ்ரோர்ஸ், 55,57 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

(3179)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இன்று ஒரு தகவல்

## இளம் பருவம்

“என்ன சேர்..... உங்களுடைய பையன் இப்ப என்ன செய்து கொண்டிருக்கிறான்?'' என்று கேட்டார் ஒருத்தர்.

“அடிக்கடி கண்ணாடி முன் நின்று அழகு பார்த்துக் கொண்டிருக்கிறான்'' என்றார் அப்பா.

“இளம் பருவம்.... இப்படித்தான் இருக்கும்.... அதையெல்லாம் சாதாரணமாக நினைத்துவிடாதீங்க'' என்றார் அவர்.

“என்ன சேர் சொல்றீங்க?கண்ணாடி முன் நின்று நேரத்தை வீணாக்கிக் கொண்டிருக்கிறான். அதை ஒரு பெரிய விஷயமாக நான் நினைக்க வேண்டுமா?'' என்றார் இவர்.

இளம்பருவத்தில் இளைஞர்களுக்கும் பெண்பிள்ளைகளுக்கும் அடிக்கடி கண்ணாடியில் பார்க்க வேண்டும் என்று தோன்றும். அது வெறுமனே அழகு பார்ப்பது மட்டுமல்ல... அவர்கள் தங்களையே தேடிக்கண்டு பிடிக்கும் ஒரு முயற்சி அது. ஒரு மனோதத்துவ விளைவு.

‘‘இதுவரைக்கும் சின்னப் பிள்ளையாக இருந்து விட்டோம். இனி மேல் நாமும் மற்றவர்கள் மாதிரி மனிதர்கள் தான்'' என்ற உணர்வு அவர்களுக்கு வருகிறது.

தங்களுடைய முகம் எப்படியிருக்கிறது? அழகு எப்படியிருக்கிறது? உடம்பின் நிறம் எப்படி இருக்கிறது? தலைமுடி எப்படியிருக்கிறது? என்பவற்றையெல்லாம் கண்டுபிடிக்கிறார்கள். அதன்பின் இன்னொரு ஆணோ, பெண்ணோ தன்னை கவனிக்கவேண்டும் என்று நினைக்கிறார்கள்.

இதெல்லாம் இயற்கை. இதைப் பார்த்துவிட்டு பிள்ளைகள் கெட்டுப் போய்விட்டார்கள் என்று பெற்றோர் நினைக்கக் கூடாது. அவர்களை திட்டிக் கொண்டே இருக்கக் கூடாது. இன்றைக்குப் பல குடும்பங்களில் இதுதான் நடந்து கொண்டிருக்கிறது.

மனித வாழ்க்கையில் இப்படியும் இல்லாத அப்படியும் இல்லாத ஒரு பருவம் இளம் பருவம். 13 வயதிலிருந்து 19 வயதுக்குட்பட்ட ஆண்கள், பெண்கள் இவ்வகையைச் சேர்ந்தவர்களை ரீனேஜ் குறூப் என்கிறோம். இவர்களை சிறியவர்களென்றோ பெரியவர்களென்றோ நினைத்துவிடமுடியாது.

சமூகம் நினைத்தால் இவர்களை நல்லவர்களாகவும் ஆக்கலாம். கெட்டவர்களாகவும் ஆக்கலாம். சிறிது அக்கறை எடுத்துக் கொண்டால் பெரிய பெரிய மேதைகளையும் விஞ்ஞானிகளையும் உருவாக்கலாம்.

ஆனால் என்ன நடக்கிறது தெரியுமா? அநேகமாக இவர்களை யாருமே சரியாக புரிந்து கொள்வதுமில்லை. சரியாக நடத்துவதுமில்லை.

‘‘இதுவரைக்கும் நாமசொல்வதைக் கேட்டுக்கொண்டிருந்தான். இப்பொழுதுதெல்லாம் அவனுடைய இஷ்டத்துக்கு நடக்க ஆரம்பித்து விட்டான்.'' என்று வருத்தப்படும் பெற்றோர்கள் தான் அதிகம். இது வருத்தப்பட வேண்டிய விஷயமில்லை. சந்தோஷப்பட வேண்டிய விஷயம்.

உங்களுடைய பிள்ளை சொந்தமாக யோசிக்க ஆரம்பிப்பதும் நடந்து கொள்வதும் ஒரு தவறான விஷயமா? அவன் கடைசி வரைக்கும் உங்களுடைய பேச்சைக் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும் என்பது எந்த விதத்தில் நியாயம்?

இன்றைக்கு இளைஞர்களை பெரியவர்கள் தவறாகப் புரிந்து கொண்டு தவறாக நடத்துவதனால் தான் அவர்களுக்கு வெறுப்பு, எரிச்சல், மனக்கசப்பு எல்லாம் உண்டாகிறது.

பெற்றோர் சரியாக மதிப்பதில்லை என்ற ஒரே காரணத்தினால் வீணாப்போகும் பிள்ளைகள் இன்றைக்கு அதிகம். சரி, பெற்றவர்களுக்கு இன்றைக்கு என்னதான் புத்தி சொல்ல வருகிறீர்கள்? என்று கேட்கிறீர்களா?

நான் எதையும் சொல்ல வரவில்லை.

அது சம்பந்தமான நிபுணர்கள் சொல்லியிருப்பதை உங்களுடைய காதிலும் போட்டு வைக்கிறேன். அவ்வளவு தான்!

பிள்ளைகளிடம் அன்பு செலுத்துங்கள். குழந்தையாக இருந்த பொழுது எவ்வளவு பாசமாக இருந்தீர்கள். வளர வளர அதை ஏன் குறைத்துக் கொள்கிறீர்கள்? பெற்றவர்களின் அன்பான வார்த்தைகளை ஏற்பவர்கள்தான் இன்றைய இளைஞர்கள்.

அவர்கள் எதைச் சொன்னாலும் அதை அக்கறையாக காது கொடுத்துக் கேளுங்கள். அலட்சியப்படுத்தாதீர்கள். அவர்கள் உங்களிடமிருந்து விரும்புவது மதிப்பு- மரியாதை அங்கீகாரம் இவ்வளவு தான்.

அவர்கள் அவர்களாகவே முடிவுகள் எடுக்கட்டும். அதற்கு நீங்கள் உதவியாக இருங்கள். அது போதும். மற்றவர்களின் முன் முக்கியமாக அவர்களுடைய நண்பர்கள் முன் அவர்களைப் பற்றி மட்டமாகப் பேசாதீர்கள்.

அவர்களிடம் பொய் சொல்லாதீர்கள். நீங்கள் சொன்னது பொய் என்று தெரிந்துவிட்டால் உங்கள் மீது அவர்களுக்கிருக்கும் மதிப்பு போய்விடும். நம்பிக்கை போய்விடும். அவர்களுக்கு முன் நீங்கள் சண்டை போடாதீர்கள். உங்கள் பிள்ளையை எப்பொழுதும் இன்னொரு பிள்ளையுடன் ஒப்பிட்டுப் பேசக்கூடாது.

கூடப்பிறந்தவர்களுடன் கூட ஒப்பிடக்கூடாது.

இப்படி செய்தால் அவன் உங்களிடமோ, அவர்களிடமோ பிரியமாக இருக்கமாட்டான்.

பிள்ளை எங்கே போகிறான்? என்ன செய்கிறான் என்று அவனுக்கு பின்னால் போய் துப்பறிந்து கொண்டிருக்காதீர்கள். இளைஞர்கள் தனிமையை விரும்புகிறார்கள்.

அவர்களை பெட்டியில் வைத்து மூடிப் பாதுகாக்க வேண்டும் என்று நினைக்காதீர்கள். அவர்களை எப்படி பாதுகாப்பதென்று அவர்களுக்கே தெரியும்.

உங்களுடைய பிள்ளை எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்று நீங்கள் எதிர்பார்க்கிறீர்களோ.... அது மாதிரி நீங்கள் நடந்து காட்டுங்கள். அது போதும்.

ஒரு வீட்டில் அம்மாவும் அப்பாவும் கதைத்துக் கொண்டிருந்தார்கள்.

‘‘ என்னங்க.... நம்ம பொண்ணு பெரியவளாகிவிட்டாள். அடிக்கடி கண்ணாடிக்கு முன்னால் போய் நின்று கொண்டிருக்கிறாள். சீக்கிரமா ஒரு பையனைப் பார்த்து கல்யாணத்தை முடிக்காம இப்படி மசமச என்று கல்லுமாதிரி உட்கார்ந்திருக்கிறீங்களே'' என்று சத்தம் போட்டார் அந்த அம்மா.

“அவசரப்படாதே! பார்ப்பதற்கு அழகாக, இலட்சணமாக, புத்திசாலிப்பையன் கிடைக்க வேண்டாமா.... அதுதான் பார்த்துக் கொண்டிருக்கிறேன்'' என்றார் அப்பா.

இதற்கு அந்த அம்மா சொன்னார்: ‘‘எங்க அப்பா இப்படி நினைத்துக் கொண்டு இருந்திருந்தால் எனக்குக் கல்யாணமே ஆகியிருக்காது'' என்றார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# யாழிலிருந்து தீவுப்பகுதிகளுக்கு செல்லும் சகல அரச பேருந்துகளும் தற்காலிகமாக இடைநிறுத்தம்

## யாழ் .பேருந்து நிலைய முகாமையாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.பேருந்து நிலையத்திலிருந்து தீவுப்பகுதிகளிற்கு செல்லும் சகல அரசபேருந்துக்களும் நேற்று காலை 11 மணியிலிருந்து தற்காலிமாக இடை நிறுத்தப்பட்டுள்ளதாக யாழ்.பேருந்து நிலைய முகாமையாளர் யோகநாதன் அறிவித்துள்ளார்.

குடாநாட்டிலிருந்து தீவுப் பகுதிக்கு செல்லும் பண்ணைப் பாலத்தில் ஏற்பட்ட சீரற்ற நிலையே இதற்குக் காரணம் என அவர் தெரிவித்துள்ளார்.தொடர்ந்து பெய்து வரும் கனமழை காரணமாக பாலத்தை மேவிப்பாயும் வெள்ளத்தால் அதனூடாக செல்லும் வாகனங்களுக்கு பாதிப்பு ஏற்படக்கூடும் எனக் கருதியே போக்குவரத்து இடை நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.அவர் மேலும் தெரிவிக்கையில், இது தொடர்பாக யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமாருடன் தொடர்பு கொண்ட போது, மக்களின் நலனை கருத்தில் கொண்டு நடவடிக்கைகளை மேற் கொள்ளுமாறும் அத்துடன் இதற்கான மாற்றுப்பாதை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்குமாறும் ஆலோசனைகளும் அதிகாரமும் வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

இதேவேளை தீவுப் பகுதியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு சென்ற அனைத்து அரச பேருந்துகளும் தீவுப் பகுதிக்கு திரும்ப முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

எனவே மக்கள் இத்தகைய நெருக்கடியான சூழ்நிலையை கருத்தில் கொண்டு செயற்படும் படியும் மக்களின் சொத்துக்களையும் உடைமைகளையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எமக்குள்ளது என்றும் அவர் மேலும் கூறினார்.

இதற்கமைய போக்குவரத்தை இயன்றளவு மேற்கொள்ள தற்காலிக பாதைகள் அமைக்க துரித கதியில் செயற்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# உயர்தர பரீட்சைப் பெறுபேறு இன்று வெளியாகும்

இவ்வருடம் நடைபெற்ற கல்வி பொதுத்தராதர உயர்தர பரீட்சை பெறுபேறுகள் இன்று திங்கட்கிழமை வெளியிடப்பட உள்ளதாக பரீட்சை திணைக்களத்தின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இவ்வருடத்தின் கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சையை இம்மாதம் 13 ஆம் திகதி நடத்துவதற்கான சகல ஏற்பாடுகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும்தெரிவித்தார். (ஸ்ரீ-2)

# பாடல் போட்டியில் வெற்றியீட்டியோர்

(கொழும்புத்துறை)

யாழ் கத்தோலிக்க மறைக் கோட்ட இளையோர் ஒன்றியம் நடத்திய வருடாந்த பாடல் போட்டி நேற்று மறைக்கல்வி நடுநிலையத்தில் நடைபெற்றது.

இதில் யோ.றொக்ஷன் முதலாமிடத்தையும் அ.நிற்மலா இரண்டாமிடத்தையும் நோ.ஜெராட் மூன்றாமிடத்தையும் பெற்றுக் கொண்ட னர்.மேலும் 5 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

திருமறைக்கலாமன்ற இசைத்துறைப் பொறுப்பாளர் இசைத் தென்றல் ம.யேசுதாசன், யோ.ஜெஸ் ரின் ஆகியோர் நடுவர்களாக கலந்து கொண்டு பாடகர்களைத் தெரிவு செய்தனர்.

(ஸ்ரீ-3-51)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 160 |
| உருளைக்கிழங்கு | 60 | 70 |
| பச்சைமிளகாய் | 160 | 180 |
| தக்காளி | 100 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 |
| கோவா | 60 | 70 |
| கரட் | 60 | 100 |
| பூசணி | 50 | 50 |
| புடோல் | 50 | 60 |
| வாழைக்காய் | 40 | 50 |
| சின்ன வெங்காயம் | 140 | 150 |
| பெரிய வெங்காயம் | 150 | 150 |
| பாகற்காய் | 160 | 160 |
| வெண்டிக்காய் | 50 | 70 |
| கருணைக் கிழங்கு | 60 | 60 |
| பயற்றங்காய் | 160 | 140 |
| லீக்ஸ் | 100 | 120 |
| பீற்றூட் | 70 | 70 |
| கறிமிளகாய் | 160 | 160 |
| முருங்கைக்காய் | 250 | - |
| போஞ்சி | 100 | 140 |
| கத்தரிதம்புள்ள | 80 | 120 |
| கீரை - 1 பிடி | 20 | 35 |
| தேசிக்காய் | 100 | 120 |
| [illegible] | [illegible] | 50 |

# இராசி பலன்

*06.12.2010*
*(கார்த்திகை 20, திங்கட்கிழமை)*
*பிரதமை முன்னிரவு 11.25 மணி வரை*
*கேட்டை முன்னிரவு 7.16 மணி வரை*
*இராகுகாலம் 7.47-9.17 மணி வரை*
*சுபநேரம் 12.17-1.47 மணி வரை*
*மூன்றாம் கார்த்திகை சோமவாரம்.*

**மேடம்** குழப்பங்கள் தீர குருவை வழிபட வேண்டிய நாள், உற்றார், உறவினர்கள் வழியில் சுப விரயங்கள் அதிகரிக்கலாம், உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை, அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**இடபம்** சுற்றத்தார் வரவால் சுகம் கூடும், அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.

**மிதுனம்** காலை நேரத்திலேயே கலகலப்பான செய்தி வந்து சேரும் நாள், உடல் நலம் சீராகும் தொழிலில் ஏற்பட்ட கருத்து முரண்பாடு மாறும் பணப்புழக்கம் அதிகரிக்கும்.

**கடகம்** விருந்தினர் வருகையுண்டு, புத்திரர் வழியில் பெருமையான சம்பவங்கள் நடைபெறலாம், உடல் நலம் சீராகும், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு.

**சிங்கம்** தாய்வழி அனுகூலமுண்டு வாகனத்தை மாற்றும் எண்ணம் மேலோங்கும், பணப்புழக்கம் அதிகரிக்கும், சிந்தித்து செயற்பட்டு சிறப்பினைக் காண வேண்டிய நாள், சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**கன்னி** எடுத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், உடன் பிறப்புக்கள் உங்களுக்கு அனுசரணை வழங்குவர், தன்னம்பிக்கை அதிகரிக்கும் நாள், அதிக பிரயாசையுடன் செயற்படுவீர்கள்.

**துலாம்** பெரியோரின் ஒத்துழைப்புண்டு, பொருட் சேர்க்கையுண்டு, புதிய பொறுப்புக்களும் பதவிகளும் வந்து சேரலாம், வாக்கு மேன்மையால் காரியம் சாதிப்பீர்கள்.

**விருச்சிகம்** பண வரவு திருப்தி தரும், எடுத்த காரியத்தை நிறைவேற்ற பாடுபடுவீர்கள், பயணத்தால் பலன் கிடைக்கும், குரு வழிபாடு குதூகலம் தரும்.

**தனுசு** தாராளமாகச் செலவிட்டு மகிழும் நாள், ஊர் மாற்றம் வந்து சேரலாம், திட்டமிட்ட பயணமொன்றில் திடீர் மாற்றம் செய்வீர்கள், சயன சுகக் குறைவுண்டு.

**மகரம்** மனதிற்கினிய சம்பவங்கள் நடைபெறும் நாள், திட்டமிட்டகாரியங்கள் அனைத்தும் சரியாக நடைபெற்று மகிழ்ச்சி அதிகரிக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வீர்கள்.

**கும்பம்** தொழில் நலன் கருதி தீட்டிய திட்டங்கள் வெற்றி பெறும், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் சொத்துவாங்கும் எண்ணம் மேலோங்கும், சுப செய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்** எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் நாள், எதிரிகள் விலகுவர், தொழில் ரீதியான பயணம் அனுகூலம் தரும், கொடுக்கல் வாங்கல் சீராகும், புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள்.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




நீதி மற்றும் சட்ட மறுசீரமைப்பு அமைச்சின் சுனாமியால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை கட்டியெழுப்பும் திட்டத்தின் கீழ் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தினால் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் நிகழ்விற்கு தலைமை தாங்கிய தென்மராட்சிப் பிரதேச செயலர் திருமதி அஞ்சலிதேவி சாந்தசீலன் மங்கல விளக்கேற்றி நிகழ்வினை ஆரம்பித்து வைப்பதனையும் ஓய்வூதியப் பணிப்பாளர் திருமதி அபயவிக்கிரம, 522 ஆம் படைப்பிரிவின் பொறுப்பதிகாரி,மேலதிக பதிவாளர் நாயகம் ந.சதாசிவஐயர் மற்றும் அதிகாரிகள் நிற்பதனையும் நடமாடும் சேவையில் பங்குபற்றிய பொதுமக்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-சாவகச்சேரி செய்தியாளர்)

# வடமராட்சி பிரதேசத்தில் அண்மைக்காலமாக அதிகரித்துவரும் கொள்ளைச் சம்பவங்கள்

(கரவெட்டி)

வடமராட்சி பிரதேசத்தில் கடந்த ஏப்ரல் மாதம் தொடக்கம் நவம்பர் மாதம் வரை அதிகமான கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன என்று புள்ளிவிபரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

கடந்த மேமாதம் கரவெட்டி கட்டைவேலிப் பகுதியிலுள்ள வீடொன்றில் புகுந்த திருடர்கள் அங்கு குடும்பப் பெண்ணை பட்டப் பகலில் துணிச்சலாக படுகொலை செய்துவிட்டு அவரிடம் இருந்த பல இலட்சம் பெறுமதியான தங்க நகைகளையும் ஒரு இலட்சத்து 10 ஆயிரம் ரூபா பணத்தையும் கொள்ளையடித்துச் சென்றனர்.

இச் சம்பவத்துடன் தொடர்புடைய 6 சந்தேக நபர்களை நெல்லியடிப் பொலிஸார் சில மாதங்களின் பின் கைது செய்துள்ளனர்.

மற்றுமொரு சம்பவம் உடுப்பிட்டி இமையாணன் பகுதியில் இடம்பெற்றது. இதில் தனிமையிலிருந்த பெண்ணை கொலை செய்த திருடர்கள் அவரை வீட்டுக் கிணற்றில் வீசிவிட்டு அவருடைய பல இலட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகளையும் வீட்டுப் பொருட்களையும் கொள்ளையடித்துச் சென்றனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய நான்கு சந்தேக நபர்களை வல்வெட்டித்துறைப் பொலிஸார் சில தினங்களுக்குள் கைது செய்தனர்.

பின் நெல்லியடி நகரப் பகுதியில் இரண்டு மாதத்திற்குள் ஏழு கடைகள் இரவு வேளைகளில் உடைக்கப்பட்டு பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் மற்றும் பணம் கொள்ளையடிக்கப்பட்டன. இதுதொடர்பாக எவரும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படவில்லை.

இப்பிரதேசத்தில் ஆங்காங்கே வீடுகளில் கொள்ளைச் சம்பவங்களும் இடம்பெற்றுவருகின்றன.

இவ்வாரத்திற்குள் 3 கொள்ளைச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

துன்னாலை வடக்குப் பகுதியிலுள்ள வீடொன்றில் புகுந்த 8 இற்கும் மேற்பட்ட திருடர்கள் 20 பவுண் நகை மற்றும் இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றனர். இதுபோன்ற சம்பவங்கள் பல இடம்பெற்று வருகின்றன.

எனவே பொதுமக்கள் தமது பிரதேசங்களில் உள்ள பொலிஸ் நிலையங்களுக்கு உடன் அறிவிக்குமிடத்து இது போன்ற சம்பவங்களை முறியடிக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-24)




## மறையாசிரியர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வு

(கொழும்புத்துறை)

யாழ்.மறைமாவட்ட மறையாசிரியர்களுக்கான ஒன்றுகூடல் நிகழ்வும் ஒளிவிழாவும் எதிர்வரும் 11ஆம்திகதி சனிக்கிழமை காலை 9.30 மணிதொடக்கம் கிளிநொச்சி புனித திரேசா பாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வருடாவருடம் யாழ். மாவட்டத்தில் நடைபெறும் ஒன்றுகூடல் இவ்வருடம் வன்னி மக்களின் உணர்வுகளுடன் பங்களிக்கும் நோக்கில் நடைபெறவுள்ளதாக மறைக் கல்வி நடுநிலைய இயக்குநர் அருட் தந்தை எஸ்.ஏ.ஜோர்ஜ் தெரிவித்துள்ளார்.(ஸ்ரீ-3-5)

## கருத்தரங்கு திகதி மாற்றம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீசத்திய சாயி சேவாநிலையத்தின் ஏற்பாட்டில் கல்விப் பொதுத்தராதர (சா/த) மாணவர்களுக்கு இன்று நடைபெறவிருந்த விஞ்ஞான பாட கருத்தரங்கு தவிர்க்க முடியாத காரணத்தினால் எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை நடைபெறும் என மேற்படி நிலையத்தினர் அறிவித்துள்ளனர்.

மேலும் ஏனைய பாடத்திற்கான கருத்தரங்குகள் முன்னறிவிப்பின்படி நடைபெறும் எனவும் அறிவித்துள்ளனர். (ஸ்ரீ-4)

## குடியிருப்புக்களுக்குள் வெள்ளநீர் புகுந்ததால் மக்கள் பெரும் அவலம்

(கரவெட்டி)

அல்வாய் பகுதியில் கலட்டி,கொலனி, பட்டியோடை கிராம மக்கள் மழை காரணமாக வெள்ளநீர் குடியிருப்புகளுக்குள் உட்புகுந்துள்ளமையால் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

அல்வாய் கிழக்கு ஜே/380 கிராம சேவையாளர் பிரிவில் மண்குடிசைகளில் வாழ்ந்து வரும் 75 இற்கு மேற்பட்ட குடும்பங்களைச்சேர்ந்த வறியமக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர்.

இக்கிராமங்களைச் சேர்ந்த மக்கள் அதிகமானோர் கூலித் தொழிலையும், சீவல் தொழிலையும் நம்பி வாழ்ந்து வருகின்றனர்.

மிகவும் பின் தங்கிய நிலையில் உள்ள இவர்கள் அனைத்துத் தரப்பினராலும் தொடர்ந்தும் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர்.

வெள்ளநீரினால் பாதிக்கப்பட்ட சில குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் அல்வாய் பாரதி சனசமூக நிலையத்திலும் தமது உறவினர் வீடுகளிலும் தங்கியிருந்துவிட்டு வெள்ள நீர் வழிந்தோடிய பின் தமது குடியிருப்புக்களுக்கு செல்வதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது. (ஸ்ரீ-3-24)

## வீதிகளில் வெள்ளம்; மக்கள் அசௌகரியம்

(கொழும்புத்துறை)

கொழும்புத்துறை இலந்தைக்குளம் வாய்க்கால் அடைபட்டுள்ளதால் வெள்ளம் வீடுகளுக்குள் புகுந்தது.

இருபதுக்கும் அதிகமான குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இத னால் அப்பகுதி வீதிகளில் நடமாட முடியாத அளவிற்கு வெள்ளம்தேங்கி நிற்கின்றது.

அத்துடன் கொழும்புத்துறையின் ஏனைய பகுதிகளிலும் வெள்ளப் பாதிப்புக்கள் காணப்படுகின்றது.

கொழும்புத்துறை ஏவி வீதி மற்றும் 5 ஆம் குறுக்குப் பகுதிகளிலும் தண்ணீர் தேங்கி நிற்பதால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-3-51)

## அதிபர்களுக்கான மீளாய்வுக் கூட்டம்

(அல்வாய்)

வடமராட்சி கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலை அதிபர்களுக்கான மாதாந்த மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் 9ஆம் திகதி வியாழக்கிழமை காலை 8.30 மணிதொடக்கம் 3.30 மணிவரை யா/புலோலி மெ.மி.த.க. பாடசா லையில் நடைபெறவுள்ளது.

அதிபர்கள் வருகை தரும்போது தர உள்ளீடு தொடர்பான கணக்கு அறிக்கையின் பிரதியை சமர்ப்பிக்க வேண்டும் என வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா அறிவித்துள்ளார்.(ஸ்ரீ-3-19)

## சமூக செயற்பாட்டு மையத்தின் ஏற்பாட்டில் வீதி நாடகம்

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கான வன்முறை ஒழிப்பு வாரத்தை முன்னிட்டு சமூக செயற்பாட்டு மையத்தினால் பெண்களுக்கான விழிப்புணர்வினை ஏற்படுத்தும் விதமாக வீதி நாடகங்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

அந்த வகையில் நாளை செவ்வாய்க் கிழமை சண்டிலிப்பாய் பிரதேச செயலகர் பிரிற்விற்குட்பட்ட ஜே/146, பிரான்பற்று முருகன் கோவிலடியில் பிற்பகல் 2 மணிக்கும் , ஜே/134 புலவர் பொது மண்டபத்தில் பிற்பகல் 4 மணிக்கும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ-4)

## சிறந்த இசைக்கலைஞருக்கான விருது வழங்கி கௌரவம்

(கொழும்புத்துறை)

தேசிய கிறிஸ்தவ இலக்கியக் கழகம் நடத்திய இலக்கிய விழாவில் திறமை மிகு இசைக்கலைஞர்களுக்கான விருது இசைத் தென்றல் ம.யேசுதாசனுக்கு வழங்கப்பட்டது.

அண்மையில் கொழும்பு புனித ஜோசப் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்வில் பிரதமர் டி.எம். ஜயரட்ண இவ் விருதை வழங்கினார்.இதில் மட்டக்களப்பைச் சேர்ந்த கத்தோலிக்க வானொலி புதிய உலகம் நிகழ்ச்சித் தொகுப்பாளர் மலர்வேந்தனுக்கும் சிறப்பு விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-3-51)

## நல்லூர் பண்டாரக்குளம் நிரம்பி வழிகின்றது

(கொழும்புத்துறை)

நல்லூர் பண்டாரக்குளம் நிரம்பி வழிவதால் பிள்ளையார் கோவில் பகுதிகளில் வெள்ளம் தேங்கி நிற்கின்றது.

இப்பகுதியில் வசிக்கும் இருபதிற்கும் மேற்பட்ட குடும்பங்கள் வேறு இடங்களுக்கு தஞ்சம் புகுந்துள்ளனர்.பண்டாரக்குளம் நிறைந்து வீதிகள் மற்றும் வீடுகள் முழுவதும் வெள்ளம் தேங்கி நிற்பதால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

குறிப்பாக நல்லூர் கோவில் உட்பட்ட நல்லூரின் ஏனைய பகுதிகளும் வெள்ளக் காடாகக் காட்சி தருவதை அவதானிக்க முடிகின்றது. (ஸ்ரீ-3-51)

## வீதி புனரமைக்கப்படும் இடங்களில் மின்விளக்குகள் இன்மையால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம்

(கொழும்புத்துறை)

யாழ். பருத்தித்துறை வீதி புனரமைக்கும் பணி மிக வேகமாக நடைபெற்று வருகின்றது. இருந்தும் பாலங்கள், மதகுகள் போன்றவற்றில் இரவுநேரங்களில் பயணிப்போர் விபத்துக்குள்ளாகும் சம்பவம் அதிகரித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

மேற்படி விபத்துக்குள்ளாகக் கூடிய இடங்களில் மின் விளக்குகள் ஒளிச் சமிக்ஞைகள் போதாதுள்ளதால் விபத்துக்கள் ஏற்படும் அபாயம் காணப்படுகின்றது.

குறிப்பாக நேற்று இரவு பருத்தித்துறை வீதியில் புனரமைக்கப்படும் மதகு ஒன்றினுள் வயதானவர் ஒருவர் மோட்டார் சைக்கிளுடன் தடம்புரண்டபோது சகபயணிகள் காப்பாற்றியதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-3-51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு கச்சாய் வீதி சத்தியம்மன் பாடசாலையின் விசேட தேவையுடைய மாணவர்களிடையே வாசிப்பு விழிப்புணர்வை ஏற்படுத்தும் நிகழ்வில் சாவகச்சேரி நகர சபை பொதுநூலக நூலகர்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் நிற்பதனையும் மாணவர்கள் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுவதையும் படங்களில் காணலாம். (படங்கள்:சாவகச்சேரி செய்தியாளர்)

## மேற்கு நாடுகளின் இரட்டை நிலைப்பாடு உலகிற்கு அம்பலப்படுத்தப்படவேண்டும்

### பிரதமர் தெரிவிப்பு

(கொழும்பு)

பயங்கரவாதம் தொடர்பாக சில ஐரோப்பிய மற்றும் மேற்குலக நாடுகள் மேற் கொள்ளும் இரட்டை நிலைப்பாடு உலகிற்கு அம்பலப்படுத்தப்பட வேண்டும் என பிரதமர் டி.எம். ஜயரட்ன நேற்று கூறியுள்ளார்.

லண்டனில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அனுதாபிகளால் கடந்த வாரம் ஜனாதிபதி மகிந்தவுக்கு எதிராக நடத்திய ஆர்ப்பாட்டச் சம்பவம் தொடர்பில் உலகில் எந்தவொரு நாடும் அமைதியாக இருக்கக் கூடாது என அறிக்கையொன்றில் பிரதமர் தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் இலங்கை இத்தகைய பல சூழ் நிலைகளுக்கு முகம்கொடுத்துள்ள தாகவும் அவர் குறிப்பிட்டார்.

இச் சக்திகளை தோற்கடிப்பதற்கு அவற்றை நாம் பலமாக எதிர்கொள்ள வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ-2)

## இலங்கைத் தமிழர்களுக்கான புனர்வாழ்வு பணிகளை அமெரிக்கா கண்காணித்து வருகிறது

### இந்தியாவுக்கான அமெரிக்க தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெயர்ந்த தமிழர்களின் நலனுக்காக அமெரிக்கா இதுவரை 150 கோடி (இந்திய ரூபா) நிதி உதவி வழங்கியுள்ளது.

மேலும் இலங்கையில் தமிழர்களுக் கான புனர்வாழ்வுப் பணிகளைத் தொடர்ந்து அமெரிக்கா கண்காணித்து வருகிறது என இந்தியாவுக்கான அமெரிக்கத் தூதுவர் திமோதி ஜே.றோமர் தெரிவித்துள்ளார்.

சென்னை தரமணியில் உள்ள அமெரிக்காவின் சர்வதேச பாடசாலைக்கு வருகை தந்த அவர் செய்தியாளர்களிடம் கருத்துத்தெரிவிக்கும் போதே இவ்வாறு கூறியுள்ளார்.

அத்துடன் ஊடகவியலாளர் கேட்ட கேள்விகளுக்கு அவர் பதிலளிக்கையில்,

இலங்கைப்பிரச்சினைகள் தொடர்பில் என்னாள் பதிலளிக்க முடியாது.

கேள்வி: ஈராக் நாட்டில் பிரச்சினை ஏற்பட்ட போது அமெரிக்கா தலையிட்டதால் சதாம் ஹூசைன் தூக்கிலிடப்பட்டார். அது போன்று இலங்கையில் இனப்பிரச்சினையில் குற்றவாளியாக கருதப்படுகிற எவருக்கும் தண்டனை வழங்கப்படவில்லையே ஏன்?

பதில்:- அக்கேள்விக்கு பதிலளிக்கும் அதிகாரம் எனக்கு இல்லை. ஏனென்றால் நான் இந்திய நாட்டின் தூதர். இலங்கைத் தூதர் அல்ல. இலங்கையில் புலம் பெயர்ந்த தமிழர்கள் மீண்டும் அவர்களின் சொந்த இடங்களில் மீள் குடியமர்த்த இலங்கையில் உள்ள அமெரிக்க தூதர் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

புலம் பெயர்ந்த தமிழர்களின் நலனுக்காக அமெரிக்கா இதுவரை 150 கோடி இந்திய ரூபாய் நிதியுதவி வழங்கியுள்ளது.

மேலும் இலங்கையில் தமிழர்களுக்கான புனரமைக்கும் பணிகளைத் தொடர்ந்தே அமெரிக்கா கண்காணித்துவருகிறது என்றார். (ஸ்ரீ-2)

## குளம் உடைப்பெடுத்ததால் 150 குடும்பங்கள்இடப்பெயர்வு

திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டைப்பிரதேசத்தில் உள்ள முக்தன் குளம் நேற்று அதிகாலை 7.30 மணியளவில் உடைப்பு எடுத்துள்ளது.

இதனால் இப்பிரதேசத்தைச் சேர்ந்த150 குடும்பங்கள் இடம்பெயர்ந்துள்ளன. இக் குடும்பங் கள் புல்மோட்டை மகாவித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)

## இலங்கையில் இடம்பெற்ற போர்க்குற்றங்கள் தொடர்பில் சுதந்திரமான விசாரணை அவசியம்

### அவுஸ்திரேலிய அமைச்சர் வலியுறுத்து

(கொழும்பு)

இலங்கையில் அரச படைகளினால் தொடர்ந்தும் தடுப்பில் வைக்கப்பட்டிருக்கும் 11 ஆயிரம் தமிழ் இளைஞர்கள் ஜெனீவா சாசனத்தின் அடிப்படையில் நடாத்தப்படுவதுடன் இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின் இறுதி நாட்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பான சுதந்திரமான விசாரணைக்கு ஐக்கிய நாடுகள் சபை அழைப்பு விடுக்க வேண்டும் எனக் கோரும் பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் அவுஸ்திரேலிய அரசாங்கமும் இணைந்து கொள்ளவேண்டும் என நான் கோருகிறேன்.

இவ்வாறு அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான வேர்னியா ஜுட் தெரிவித்துள்ளார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவிக்கையில்,

எனது தேர்தல் தொகுதியிலுள்ள பிரபலமான மக்கள் குழுமம் தொடர்பாக நான் பேசுகிறேன். சிட்னியில் எனது தேர்தல் தொகுதியிலுள்ள எனது சமூகத்திற்கு இந்தச் சிறிய மக்கள் குழுமம் அதிளவிலான பங்களிப்பினைச் செய்கிறது.

இந்தத் தேர்தல் தொகுதியில் வசித்து வரும் தமிழர்கள் உறுதியான குடிமக்கள். கல்வி தொடர்பில் ஈடுபாடு, வேலையே கண்ணாயிருக்கும் மனப்பாங்கு, குடும்ப வாழ்வுக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் மற்றும் தாம் வாழும் சூழலில் சிறந்த சமூகத்தினை உருவாக்குவது எனப்பல சிறந்த பண்புகளை இவர்கள் கொண்டிருக்கிறார்கள்.

எனது தொகுதியிலுள்ள தமிழ் மக்கள் தங்களது நாளாந்த வாழ்விலும் கடமைகளிலும் தொழில் முனைப்புக்களிலும் தங்களது சமூகம் சார் கட்டமைப்புக்களிலும் இந்தப் பண்புகளைத் திறம்படப் பிரயோகிப்பதை அவதானிக்க முடிகிறது.

இந்தத் தமிழர்களின் தாயகமாம் இலங்கையில் இவர்களது உறவுகளுக்கு எதிரான போர்க் குற்றங்கள் இடம்பெற்றிருப்பதை கடுந் துயருடன் நான் அறிந்து கொண்டேன்.

அத்துடன் 2009 ஆம் ஆண்டு போர் முடிவுக்கு வந்ததை தொடர்ந்து அடிப்படை வசதிகள் எதுவுமற்ற நிலையில் இடம் பெயர்ந்தோர் முகாம்களில் தங்க வைக்கப்பட்டிருந்த பல்லாயிரக்கணக்கான மக்கள் மீள்குடியேற றப்பட்டிருக்கின்ற போதும் கூரைகளற்ற வீடுகளில் கல்வி, சுகாதாரம், வேலை வாய்ப்பின்மை மற்றும் நீதிமுறை போன்ற அடிப்படை வசதிகள் மறுக்கப்பட்ட நிலையிலேயே தொடர்ந்தும் வாழ்ந்து வருகிறார்கள் என அறியமுடிகிறது.

போரின் இறுதி நாட்களில் மனித உரிமைகள் மீறப்பட்டிருப்பது தொடர்பாக தனக்கு ஆலோசனை வழங்குவதற்காக ஐக்கிய நாடுகள் சபையினது செயலாளர் நாயகம் பான் கீ மூன் மூவர் அடங்கிய ஆலோசனைக் குழுவினை அமைத்திருக்கிறார்.

இந்த விடயம் தொடர்பில் அவுஸ்திரேலியா தொடர்ந்தும் மௌனம் காப்பது பற்றி அவுஸ்திரேலியத் தமிழர் அமைப்புக்களின் கூட்டமைப்பினது தலைவர் கலாநிதி விக்ரர் ராஜகுலேந்திரனும் அவுஸ்திரேலியத் தமிழர் காங்கிரஸின் தலைவர் கலாநிதி சாம் பிறை ஆகியோர் என்னிடம் அதிருப்தியினை வெளியிட்டிருக்கிறார்கள்.

இலங்கையில் இடம்பெற்ற போரின் இறுதி நாட்களில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைக்கு ஐக்கிய நாடுகள் சபை அழைப்பு விடுக்கப்பட வேண்டும் என அழைப்பு விடுவிக்கும் பிரித்தானியா, ஐக்கிய அமெரிக்கா, மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுடன் அவுஸ்திரேலிய அரசாங் கமும் இணைந்து கொள்ள வேண்டும் என கோருகிறேன்.

வடக்குக் கிழக்குப் பகுதியில் நிலவுகின்ற இராணுவமயப்படுத்தலை முடிவுக்குக் கொண்டு வருவதோடு அங்கு சட்டமும் ஒழுங்கும் மீளப்பெறப்படுவதற்கு வழிசெய்ய வேண்டும். இடம்பெயர்ந்து வசிக்கும் மக்கள் அனைவரும் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டும். இஸ்ரேலின் மேற்குக் கரைப் பாணியிலமைந்த சிங்களக் குடியேற்றங்கள் தமிழர் தாயகப் பகுதிகளில் மேற்கொள்ளப் படுவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.

இலங்கையிலுள்ள தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழ் அரசியல் கட்சிகளுடன் பேச்சுக்களில் ஈடுபடுவதன் ஊடாக தமிழ் மக்களின் நியாயமான அபிலாசைகளை பூர்த்தி செய்யும் வகையிலான நீடித்து நிலைக்கக்கூடிய அரசியல் தீர்வு முன் வைக்கப்படவேண்டும். மற்றும் உண்மையான அமைதியும் இன நல்லிணக்கமும் ஏற்படும் வகையிலான செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும். இதுபோன்ற கோரிக்கைகளை அவுஸ்திரேலிய அரசாங்கமும் மேற்குறித்த நாடுகளுடன் இணைந்து முன் வைக்க வேண்டும். சிறுபான்மை இனம் ஒன்றுக்கான அடிப்படை உரிமைகள் அனைத்தும் மறுக்கப்பட்ட நாடு ஒன்றில் தங்களது தாயகத்தினை அமைப்பதற்கான போரின் மீது நம்பிக்கை வைத்து செயற்பட்டமைக்காக இந்த மக்கள் தண்டிக்கப்படுகிறார்கள்.

மிக மோசமாக தண்டிக்கப்படும் தங்களுக்கு ஆதரவளிக்குமாறு இந்த மக்கள் மேற் கினைக் கோருகிறார்கள்.

இந்த நிலையில் எங்களது ஆதரவினை வழங்குவதற்கு நாம் பின்னடிப்பது முறையற்றதல்ல. அப்பாவி மக்களைக் கொலை செய்வது தவறென்றும் இந்தக் குற்றத்தினைப் புரிந்தவர்கள் யாரோ அவர்கள், நீதியின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றும் வெளிப்படையாகக் கூறுவதற்கும் நாங்கள் தயங்குகிறோம். தமிழர்கள் என்ற எங்களது நண்பர்களுக்கு நாங்கள் ஆபத்தில் உதவுவோம்.

நாம் விரும்பியதைத் தெரிவு செய்வதற்கான உரிமை மற்றும் கல்வி, வேலை வாய்ப்பு , அரச சேவைகள் , நீதி மற்றும் பிரதிநிதித்துவம் போன்ற அம்சங்களில் நாட்டினது அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்தவர்களுக்கும் சம உரிமை வழங்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு நான் இலங்கையின் ஆட்சியாளர்களைக் கோருகிறேன்.

இந்த விடயத்தினை எனது கவனத்திற்குக் கொண்டுவந்த எனது தொகுதியில் வசிக்கும் தமிழர்களின் சார்பாக இந்தக்கோரிக்கைக்கு ஆதரவு வேண்டி அவுஸ்திரேலியப் பிரதமர் மற்றும் வெளிவிவகார அமைச்சருக்கு நான் நேரடியாக கடிதம் எழுதவுள்ளேன்.

இறுதியாக பிரசித்தி பெற்ற தமிழ் பழமொழி ஒன்றைக் கூறி நிறைவு செய்கிறேன். அதாவது "கலகம்பிறந்தால்நியாயம்பிறக்கும்" இலங்கைத் தமிழர்களது விடயத்திலும் இது தான் நடக்கும் என நான் பிரார்த்திக்கிறேன். (ஸ்ரீ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.மாவட்டத்தில் வேலையில்லாப் பிரச்சினையைத் தீர்க்கும் வழிமுறை என்னும் கருப்பொருளிலான சிறப்பு ஆய்வரங்கம் அண்மையில் சொன்ட் நிறுவனத்தில் நடைபெற்றது.இந்நிகழ்வில் சொன்ட் நிறுவன நிறைவேற்றுப்பணிப்பாளர் ச.செந்துராசா தலைமையுரையாற்றுவதையும் பேராசிரியர் க.சிவநாதன் உரையாற்றுவதையும் நிகழ்வில் கலந்துகொண்டோரையும் படங்களில் காணலாம்.

## 325 இலங்கை பணிப்பெண்கள் குவைத்திலுள்ள இலங்கைத் தூதுவராலயத்தில் தஞ்சம்

குவைத்தில் உள்ள இலங்கைத் தூதுவராலயத்தில் 325 இலங்கை பணிப்பெண்கள் தஞ்சமடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதில் 90 வீதமானவர்கள் அதிக நேரம் கடமையாற்ற நேரிட்டமை, வீட்டு உரிமையாளர்களுடன் ஏற்பட்ட சச்சரவுகள் மற்றும் சம்பளம் கிடைக்காமை போன்ற காரணங்களினால் தூதுவராலயத்தில் தஞ்சம் அடைந்துள்ளதாக குவைத்திற்கான இலங்கை தூதுவர் சரத் திசநாயக்க குறை கூறியுள்ளார்.

மேலும் 10 வீதமானவர்கள் பல்வேறு துன்புறுத்தலுக்கு இலக்கான நிலையில் வந்துள்ளதாக அவர் குறிப்பிட்டார். தூதுவராலயத்தில் தங்கியிருக்கும் இலங்கைப் பணிப்பெண்களுக்கு தேவையான சகல வசதிகளும் செய்து கொடுக்கப்பட்டுள்ளதாக குவைத்திற்கான இலங்கை தூதுவர் குறிப்பிட்டார். எவ்வாறாயினும் இலங்கைத் தூதரகத்தினால் வழங்கப்பட்டுள்ள வசதிகள் போதுமானதாக இல்லை என பணிப்பெண்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இதன் காரணமாக தாம் சிரமத்தை எதிர்நோக்க நேரிட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். பணிப்பெண்களின் இந்தக் குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக குவைத்திற்கான இலங்கைத் தூதுவரிடம் வினவிய போது பணிப்பெண்கள் எதிர்நோக்கும் இந்தப் பிரச்சினைகள் குறித்து கவனம் செலுத்தியுள்ளதாகக் கூறினார்.

மீண்டும் நாடு திரும்புவதற்கு விரும்பும் பணிப்பெண்களை விரைவில் அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஏனையவர்களை மீண்டும் தொழிலில் அமர்த்த ஏற்பாடுகளைச் செய்வதாகவும் குறிப்பிட்டார்.

(ஸ்ரீ-9-4)

## இனம்,மொழி, சமய அடிப்படையில் மக்களை பாகுபடுத்த கூடாது

### அமைச்சர் டளஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை மக்களை இனம்,மொழி, சமய அடிப்படையில் பாகுபடுத்த கூடாது என இளைஞர் விவகார மற்றும் திறன் அபிவிருத்தி அமைச்சர் டளஸ் அழகப் பெரும தெரிவித்துள்ளார்.

அகுரெஸ்ஸ- தெலிச்சவில பிரதேசத் தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

சிங்கள பிள்ளை தமிழ் மொழியை கற்றிருக்க வேண்டும். தமிழ் பிள்ளை சிங்கள மொழியைக் கற்றிருக்க வேண்டும் . தமிழ் பிள்ளையும் சிங்களப் பிள்ளையும் உலகை வெற்றிகொள்வதற்கு ஆங்கில மொழியைக் கற்றிருக்க வேண்டும் என அமைச்சர் இதன் போது வலியுறுத்தியுள்ளார்.

தமிழ் மாணவர்களுக்கு தனியான பாடசாலை, முஸ்லிம் மாணவர்களுக்கு தனியான பாடசாலை, பௌத்த மாணவர்களுக்கு தனியான பாடசாலை என ஏன் பாகுபடுத்த வேண்டும் என அவர் கேள்வி எழுப்பியுள்ளார். 2கோடியை அண்மித்த சனத்தொகையை கொண்ட இலங்கையில் மக்கள் பாகுபட்டு வாழ வேண்டிய அவசியம் இல்லை என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.


சிறார்களை அறிவு வளராத காலப் பகுதியிலேயே பெரியவர்கள் பாகுபடுத்த முற்படுகின்றமையே பிரிவினைவாதத்திற்கு மூலகாரணம் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ)

## ஐந்து நாட்களாக தொடரும் பெருமழையால் வன்னிப்பகுதியில் 25ஆயிரம் பேர் பாதிப்பு

(கொழும்பு)

வன்னிப்பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் பெருமழையினால் 25ஆயிரம் பேருக்கு



அதிகமானோர் பாதிக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா ,மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் தெரிவிக்கின்றனர்.

மீள் குடியேறிய மக்களின் வீடுகள் முழுமையாக சீரமைக்கப்படாத நிலையில் தறப்பாள் கூடாரங்களிலும் தற்காலிக வீடுகளிலும் தங்கியிருந்த மக்களே இவ்வாறு பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் மீண்டும் இவர்கள் அகதிகளாகியுள்ளனர்.

கடந்த ஐந்து நாட்களாக தொடர்ச்சியாகப் பெய்துவரும் பெருமழையினால் குளங்கள் அனைத்தும் நிரம்பி வான் பாய்கின்றன. இதனால் தாழ்ந்த பகுதிகளில் இருக்கும் மக்கள் வெள்ள அபாயத்துக்குள்ளாகியிருக்கின் றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் முரசு மோட்டை, மருதநகர், கல்மடு, மணியங்குளம், பாரதிபுரம் கிழக்கு, பொன்னகர், திருநகர் வடக்கு, புளியம் பொக்கணை, தருமபுரம் கிழக்கு, உழவனூர் மற்றும் பூநகரிப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள பெரும்பகுதியும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

இதேவேளை முல்லைத்தீவு மாட்டத்தில் கரைச்சிக் குடியிருப்பு, செல்வபுரம், மணவாளன் பட்டமுறிப்பு, கரும்புள்ளியான், பாண்டியன்குளம் மேற்கு, சிலாவத்தை போன்ற இடங்கள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

இதேபோல வவுனியா மாவட்டத்திலும் மன்னார். மாவட்டத்தின் கிழக்குப் பகுதிகளிலும் மக்கள் வெள்ளப்பாதிப்புக் குட்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்டவர்களுக்கான உதவிகளை அனர்த்த முகாமைத்துவப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.

(ஸ்ரீ-2)

## கண்ணிவெடிகளை தடைசெய்ய வேண்டும்

### ஒபாமாவிடம் சூகி கோரிக்கை

கண்ணிவெடிகளைத் தடை செய்ய வேண்டுமென அமெரிக்க அதிபர் ஒபாமாவிடம் மியன்மார் ஜனநாயக இயக்கத் தலைவி ஆங் சான் சூகி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக ஒபாமாவுக்கு சூகி உட்பட நோபல் பரிசு வென்ற 16 பேர் கூட்டாக இணைந்து கடிதம் எழுதியுள்ளனர். அதில் கண்ணிவெடிகளைத் தடை செய்யும் ஒப்பந்தத்தில் ஒபாமா கையெழுத்திட வேண்டும். ஏனெனில் கண்ணிவெடிகள் அப்பாவிகள் பலரின் உயிரைக் குடிப்பதுடன் பலரது வாழ்க்கையை முழுவதுமாக முடக்கிப் போட்டு விடுகிறது.

எனவே இதுபோன்றவற்றை ஆயுதமாகப் பயன்படுத்தக்கூடாது என்று அதில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக் கடிதத்தில் 1997ஆம் ஆண்டு அமைதிக்கான நோபல் பரிசு வென்ற ஜோடி வில்லியம்ஸ் உட்பட 16 பேர் கையெழுத்திட்டுள்ளனர்.

(ஸ்ரீ-2-4)

## அரச வைத்தியசாலைகளில் மருந்துகளுக்கு தட்டுப்பாடு

### ஜே.வி.பி.குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரச வைத்தியசாலைகளில் சில மருந்துப்பொருள்களுக்கு தொடர்ந்து தட்டுப்பாடு நிலவுகின்ற நிலையில் இம்முறை வரவு-செலவுத்திட்டத்தில் இதற்காக அரசாங்கம் நிதி ஒதுக்கீடு செய்யவில்லையென மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இதன் விளைவாக நோயாளர்களுக் கான சத்திர சிகிச்சைகளை மருத்துவர்கள் இடைநிறுத்துவதற்கான நிர்ப்பந்தத்திற்குள்ளாவதாக நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் மாநாட்டில் மக்கள் விடுதலை முன்னணியின் மேல்மாகாணசபை உறுப்பினர் வைத்தியர் நலிந்த ஜயதிஸ்ஸ தெரிவித்தார்.

மஹரகம வைத்தியசாலையில் புற்று நோயாளர்களுக்கு சிகிச்சையளிக்கத் தேவையான பல வைத்திய உபகரணங்கள் தேவைப் படுவதாகவும் ஹோமகம வைத்தியசாலையிலும் இவ்வாறான நிலை காணப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ)

## மனித உரிமை தினத்தில் கவன ஈர்ப்புப் போராட்டம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு காணமல் போனோர் தொடர்பான கவன ஈர்ப்புப் போராட்டம் எதிர்வரும் 10 ஆம் திகதி பகல் 12 மணிக்கு கோட்டை புகையிரத நிலையத்திற்கு முன்பாக நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்போராட்டத்தை காணாமல் போனவரைத் தேடியறியும் குழுவொன்றே ஏற்பாடு செய்துள்ளது.

அரசாங்கம் காணாமல் போனோர் தொடர்பாக இதுவரை காலமும் தகுந்த பதிலெதனையும் வழங்காததன் காரணத்தை முன்வைத்து அரசாங்கத்திற்கு அழுத்தத்தை கொடுப்பதற்காக இப்போராட்டத்தை நடாத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே காணாமல் போனவர்களின் உறவினர்கள் தமது உறவைத் தேடித் தரும்படி அழுத்தத்தைக் கொடுப்பதற்காக இப்போராட்டத்தில் இணைந்து கொள்வதோடு காணாமல் போனவர்களின் உறவினர்களுக்காக ஆதரவாக மனிதநேயம் கொண்ட அமைப்புக்கள் மற்றும் மனிதநேயம் கொண்ட அனைவரையும் பங்கு கொள்ளுமாறு மேலும் குறிப்பிடப் பட்டுள்ளது.

(ஸ்ரீ-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொடர் மழையால் நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வண்ணார்பண்ணை குடியிருப்பு பகுதியில் வெள்ளநீர் உட்புகுந்ததில் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது (படங்கள்:- எஸ்.கரன்)

# கப்பல் பயணத்தில் காயமடைந்த இலங்கை சிப்பந்தியை காப்பாற்றிய சவுதி படையினர்

(சவுதிஅரேபியா)

கப்பல் பயணத்தின்போது காயப்பட்ட இலங்கைச் சிப்பந்தி ஒருவர் சவுதிஅரேபிய எல்லைக் காப்புப் படையினரால் காப்பாற்றப்பட்ட சம்பவமொன்று கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில்,

இவர் ஸ்பெயினில் இருந்து மலசியாவுக்கான பயணத்தின்போது காயப்பட்டு விட்டார் என கப்பல் கப்டனால் சவுதியின் தென் பிராந்தியத்தில் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த படையினருக்கு தகவல் வழங்கப்பட்டது.

இதை அடுத்து இவரின் உயிரைக் காப்பாற்ற உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று மேலதிகாரியால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டமையால் இவர் காப்பாற்றப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இவர் விபத்தில் சில விரல்களை இழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-4)

# கிளிநொச்சி விவசாயிகளுக்கு — இலகு கடன் வசதிகள் —

(கொழும்பு)

கிளிநொச்சிமாவட்ட விவசாயிகள் இலகு கடனைப் பெறுவதற்குரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று மத்திய வங்கியின் உதவி ஆளுநர் டபிள்யூ.எம். கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

கடந்த 3ஆம்திகதி கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் விவசாயிகள் இலகுகடனைப் பெறுவது மற்றும் வங்கி நடவடிக்கைகளை இலகுவில் மேற்கொள்வது தொடர்பாக விளக்கமளிக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசத்தில் விவசாயிகள் இலகுகடன் வசதியைப் பெறுவதற்கான ஏற்பாட்டை மத்திய வங்கி ஏனைய வங்கிகளினூடாக மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

அபிவிருத்தியை முன்னெடுக்கும் அரசாங்கத்தின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப இந்தக் கடனுதவித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன்படி ஒரு விவசாயி இரண்டு இலட்சம் ரூபாவை இலகு கடன் மூலம் பெற்றுக் கொள்ளமுடியும். இந்தக் கடனைப்பெறுவதற்கு விவசாயத் திணைக்களத்தின் பெரும்பாக உத்தியோகத்தின் சிபார்சு ஏற்றுக்கொள்ளப்படும் என்று டபிள்யூ.எம். கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மத்திய வங்கியின் உதவி ஆளநர் டபிள்யூ.எம்.கருணாரட்ண மற்றும் கமநல சேவைகள் நிலைய உத்தியோகத்தர்கள், விவசாயத் திணைக்கள அதிகாரிகள், வங்கி முகாமையாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ஸ்ரீ-2)

# ஜனாதிபதியின் ஒக்ஸ்போட் உரை இரத்தானமையில் இருந்து இலங்கை கற்றுக் கொள்ளவேண்டிய பாடம்

## பேராசிரியர் ரொஹான் குணரட்ன விளக்கம்

(கொழும்பு)

ஜனாதிபதியின் ஒக்ஸ்போர்ட் உரை இரத்துச் செய்யப்பட்ட சர்ச்சைக்குரிய முடிவானது இலங்கையின் வெளியுறவு அமைச்சு தமது தொலைத்தொடர்பு கட்டளை மற்றும் திட்டங்களில் உறுதியான நிலைப்பாட்டை கைக்கொள்ள வேண்டும் என்பதை வலியுறுத்துவதாக சர்வதேச பயங்கரவாதத் துறை நிபுணர் ரொஹான் குணரத்ன தெரிவித்துள்ளார்.

இது இலங்கை அரசாங்கத்துக்கு நல்ல பாடம் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கையில் என்ன நடந்தது என்பதை கூறுவதற்கு உரிய தகவல் பரிமாற்றங்களை மேற்கொள்வது அவசியமாகிறது.

இலங்கையில் போரில் கொல்லப்பட்ட பொதுமக்களுக்கும் ஆப்கானிஸ்தான் மற்றும் ஈராக்கில் அமெரிக்க மற்றும் பிரித்தானியர்களால் கொல்லப்பட்ட பொதுமக்களுக்கும் இடையிலான வீதத்தை சுட்டிக்காட்ட வேண்டியது அவசியம் என அவர் தெரிவித்துள்ளார்.

இரண்டாவதாக நோர்வேயில் இருந்து இயங்கும் நெடியவன் அமைப்பின் நடவடிக்கைகளை முடக்கவேண்டும். மூன்றாவதாக அரச சார்பற்ற அமைப்புகள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும். ஏனெனில் தமிழீழ விடுதலைப்புலிகள் அரச சார்பற்ற அமைப்புகள், மேற்கத்தைய நாடுகளின் அரச சார்பற்ற அமைப்புகளின் ஊடாக எழுச்சிபெற முயற்சிப்பதாகவும் குணரத்ன தெரிவித்துள்ளார்.

உலக தமிழர் பேரவையும் இந்த அரச சார்பற்ற அமைப்புகளுடன் நெருங்கிய உறவை கொண்டிருப்பதாக குணரத்ன சுட்டிக் காட்டியுள்ளார்.

பிரித்தானிய தலைவர்கள் இலங்கைக்கு வரும் போது அங்கு சில வேளைகளில் சங்கடங்களுக்கு முகங்கொடுக்கின்றனர்.

அவர்கள் இன்னல்களுடன் பிரித்தானியாவுக்கு திரும்பும் போது அவர்களை அணுகும் தமிழீழ விடுதலைப் புலிகள் அவர்களை நண்பர்களாக மாற்றிக் கொள்கின்றனர். பின்னர் அவர்களுக்கு ஊடாக இலங்கைக்கு எதிரான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் ரொஹான் குணரத்ன குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ-2)

# ஒளிவிழா நிகழ்வு

(பூநகரி)

பூநகரி மகாவித்தியாலயத்தின் ஒளிவிழா நிகழ்வு நாளை மறுதினம் புதன்கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் கிறிஸ்தவ மாணவர் மன்றத் தலைவர் தலைமையில் நடைபெறவுள் ளது.

இந்நிகழ்வில் பூநகரி உதவி அரசாங்க அதிபர் கே.எஸ்.வசந்தகுமார், பூநகரி 66 ஆவது பிரிவு இராணுவப் படைத் தளபதி ஆகியோர் விருந்தினர்களாக கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

ஒளிவிழாத் திருப்பலியை பூநகரிப் பங்குத் தந்தை சா.யோ.அ.பிறாயன் நடத்துவார். (ஸ்ரீ-3-84)

# இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு தங்கக் கட்டிகளை கடத்தியவர் கைது

(கொழும்பு)

இலங்கையிலிருந்து விமானம் மூலம் தங்கக்கட்டிகளை இந்தியாவுக்குக் கடத்திச் சென்ற 55 வயதான காசிம் என்பவரை திருச்சி விமான நிலையத்தில் இந்தியப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இதுபற்றி தெரியவருவதாவது,

கொழும்பிலிருந்து திருச்சி விமான நிலை யத்தைச் சென்றடைந்த விமானத்திலிருந்த பயணிகளை விமான நிலையப் பொலிஸார் சோதனைக்குட்படுத்தினர். இதன்போது தங்கக் கட்டிகளைக் கடத்திச்சென்ற, இராமநாதபுரம் மாவட்டத்ததைச் சேர்ந்த காசிம் என்பவரைப் பொலிஸார் சோதனையிட்டனர்.

சோதனை நடத்தியதில் காற்சட்டை இடைப்பட்டியில் ஒன்பது தங்கக்கட்டிகளை அவர் மறைத்து வைத்திருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதையடுத்து அவரைப் பொலிஸார் கைது செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

அவர் வசமிருந்த தங்கக்கட்டிகளின் நிறை 990 கிராமாகும். அத்துடன்அவற்றின் மதிப்பு 20 இலட்சம் இந்திய ரூபாவுக்கு மேல் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் கைது செய்யப்பட்ட காசிம் என்பவரிடம் விசாரணை நடத்தியதில் அவரை வரவேற்க ஒருவர் திருச்சி விமான நிலையத்திற்கு வந்திருப்பதும் தெரிய வந்தது. இந்த விடயம் அறிந்த அந்த நபர் தப்பியோடி விட்டார்.

பொலிஸார் இது குறித்தும் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ஸ்ரீ-2)

# நீர்த்தேக்க வான்கதவுகள் திறப்பு; பொதுமக்களுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

தொடர்ச்சியாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக, நீர்த்தேக்கங்களின் வான்கதவுகள் நேற்று முன்தினம் திறந்து விடப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில், அடைமழை காரணமாக லக்ஸபான,விமலசுந்தர மற்றும் விக்டோரியா ஆகிய நீர்த்தேக்கங்களின் வான் கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளதாகவும் அந்த அதிகாரிகள் கூறினர்.

விக்டோரியா நீர்த்தேக்கத்தின் 4 வான் கதவுகளும் லக்ஸபான நீர்த்தேக்கத்தின் இரு வான்கதவுகளும் திறந்துவிடப்பட்டுள்ளன.

எனவே வான்கதவுகள் திறந்துவிடப்பட்டுள்ளமையால் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறு அந்த அதிகாரிகள் கேட்டுக் கொண்டனர்.

மலையகத்திற்கான ரயில்சேவையானது கொழும்பிலிருந்து றம்புக்கனை மாத்திரமே இடம்பெறுமென ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது. மேல்கோட்டை மற்றும் றம்புக்கனைக்கும் இடையிலான ரயில் தண்டவாளத்தில் பாரியளவிலான பாறாங்கற்கள் வீழ்ந்திருப்பதால் மலையகத்திற்கான ரயில்சேவை மட்டுப்படுத்தப்பட்டுள்ளது என மேலும் தெரியவருகின்றது.

இதற்கிடையில், கொழும்பில் கடந்த 24 மணித்தியாலங்களில் 116மி.மீ. மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. அதேவேளை நாட்டின் பல பாகங்களிலும் இடியுடன் கூடிய மழை பெய்யலாமென்று [illegible]லவியல் திணைக்களம் எச்ச[illegible] (ஸ்ரீ-2-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தின் ஏற்பாட்டில் சர்வதேச மாற்றுவலுவுள்ளோர் தின நிகழ்வு நேற்று முன்தினம் யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந்நிகழ்வில் செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் மங்கல விளக்கேற்றுவதையும் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி இமெல்டா சுகுமார், யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத் தலைவர் எம்.மகேந்திரன் ஆகியோர் உரையாற்றுவதையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- எஸ்.கரன்)

# புலம்பெயர் தமிழ் அமைப்புக்களுக்கு தமிழ் எம்.பி.க்கள் இருவர் கண்டனம்

(கொழும்பு)

புலம்பெயர் தமிழ் அமைப்புக்களால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் பிரிட்டன் விஜயத்திற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட எதிர்ப்பு நடவடிக்கைகளை அரசுத் தரப்பைச் சேர்ந்த தமிழ் எம்.பிக்கள் இருவர் கடுமையாக கண்டித்துள்ளார்கள்.

கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பிரபா கணேசன் ,நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் தி.திகாம்பரம் ஆகியோரே இவர்கள் ஆவர். இவர்கள் கொழும்பில் ஊடகவியலாளர் மாநாடு ஒன்றை நேற்று முன்தினம் கூட்டாக நடத்தி இக் கண்டனத்தை வெளியிட்டார்கள்.

உள்நாட்டில் கடந்த கால யுத்தத்தால் இடம் பெயர்ந்திருக்கும் தமிழர்களின் வாழ்வாதாரத்திற்கு உதவி செய்ய வேண்டியமையே உண்மையில் புலம்பெயர் தமிழர்களின் பணியாக இருக்க வேண்டும் என்று அவர்கள் அங்கு வலியுறுத்தினர்.

தமிழ்-சிங்கள மக்களுக்கு இடையிலான ஐக்கியத்தையும் நல்லிணக்கத்தையும் சிதைக்கும் வகையிலேயே புலம்பெயர் தமிழ் அமைப்புக்களின் ஆர்ப்பாட்டங்கள் உள்ளன என்று அவர்கள் குற்றம் சுமத்தினர்கள். (ஸ்ரீ-2)

# மூன்றாம் நாடொன்றில் புகலிடம் கோரிய தமிழர்கள் தாய்லாந்திலிருந்து நாடு திரும்பினர்

(கொழும்பு)

மூன்றாம் நாடு ஒன்றில் புகலிடம் கோரிய தமிழர்கள் தாய்லாந்தில் இருந்து நாடு திரும்பியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

தாய்லாந்தில் இருந்து வேறு ஒரு நாட்டிற்கு புகலிடம் வழங்குமாறும் கோரிக்கை விடுத்த இலங்கைத் தமிழர்கள் மீளவும் நாடு திரும்பியுள்ளனர்.

கடந்த 2 வாரங்களில் மட்டும் இவ்வாறான 50 புகலிடக்கோரிக்கையாளர்கள் நாடு திரும்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சுற்றுலா விசாக்களில் சென்று நீண்ட காலம் தங்கியிருந்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டவர்களே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

இவர்களுள் போலியான கடவுச்சீட்டுக்கள் மூலம் அநேகமானவர்கள் தாய்லாந்து சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்குலக நாடுகளுக்கு விசா பெற்றுத் தருவதாகத் தெரிவித்து கடவுச்சீட்டுக்களை சில முகவர்கள் பெற்றுக்கொண்டதாகவும் இதனால் புகலிடம்கோரிய சில இலங்கையர்கள் கடவுச்சீட்டுக்கள் இல்லாத நிலையில் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

யுத்தம் முடிவடைந்துள்ளதாகவும் இதனால் தாம் நாடு திரும்ப விரும்புவதாகவும் பலர் தெரிவித்துள்ளனர்.

மேலும் ஒரு சிலர் மூன்று ஆண்டுகளாக தாய்லாந்தில் தங்கியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ-2)

# மாணவர்களை துஷ்பிரயோகம் செய்த நபர் பொலிஸாரால் கைது

கம்பஹா மாவட்டத்தின் வெயாங்கொட பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றில் கல்வி கற்கும் மாணவர்களில் 10 இற்கும் அதிகமானோரை பாலியல் துஷ்பிரயோகம் செய்த நபர் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையை சேர்ந்த பொலிஸாரால் கைது செய்யப்பட்டு உள்ளார்.

இவர் பாடசாலைக்கு அருகில் உள்ள வீடு ஒன்றில் வைத்து ஆண் மாணவர்களுக்கு நிர்வாண திரைப்படங்களை காண்பித்துள்ளதுடன் இவர்களைதுஷ்பிரயோகம் செய்துள்ளார்.

அத்துடன் இம்மாணவர்களை நிர்வாணம் ஆக்கி பல கோணங்களில் படம் பிடித்தும் உள்ளார். இப் படங்களை சொந்த கணனியில் பதிவிறக்கம் செய்து வைத்து உள்ள இவருக்கு எதிராக சட்ட நடவடிக்கை முடுக்கி விடப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# மாற்றுவலுவிழந்தோருக்கான ஒன்று கூடல்

வடமராட்சி வலயத்தில் உள்ள பாடசாலைகளில் கல்விகற்கும் மாற்றுவலுவிழந்த மாணவர்களை ஒன்றிணைத்து பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை மண்டபத்தில் மாற்று வலுவிழந்தோருக்கான ஒன்று கூடல் இன்று திங்கட்கிழமை 9 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வை விசேட பாட கல்வி ஆலோசகர் வே.புவனேந்திரன் தலைமை தாங்கி நடாத்தவுள்ளார். இதில் பிரதம விருந்தினராக வடமராட்சி வலயக்கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜா கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-3-19)

# யுத்தக் குற்றச்செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்படவேண்டும்

## ஐ.தே.க. பிரதித் தலைவர் வலியுறுத்து

(கொழும்பு)

தமிழ் புலம்பெயர் மக்களுடனான உறவுகளை வலுப்படுத்திக்கொள்ள யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தப் படவேண்டும் என ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

நான்காவது ஈழப்போரில் இடம்பெற்றதாக சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டிய தன் அவசியத்தை அவர் வலியுறுத்தியுள்ளார்.

மேற்குலக நாடுகள் மற்றும் புலம் பெயர் தமிழ் மக்கள் ஆகியோர் உடனான உறவுகளை சுமுகப்படுத்துவதற்கு யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பான விசாரணை அவசியமானது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அண்மையில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவிற்கு எதிராக லண்டனில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம் இந்த நாட்டு மக்களை நெருக்கடியான நிலைக்கு இட்டுச் சென்றதாக அவர் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதிக்கு எதிரான போராட்டத்தை ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் இது அனைவரையும் கவலையில் ஆழ்த்தியதாகவும் வெளிநாடுகளில் சுமத்தப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் உதாசீனமான போக்கைப் பின்பற்றுவது பொருத்தமாகாது என்றும் வலியுறுத்தியுள்ளார்.

அண்மையில் லண்டன் ஆர்ப்பாட்டம் இதனையே உணர்த்துவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெளிநாட்டு உறவுகள் தொடர்பில் இலங்கையின் நிலைப்பாட்டில் மாற்றம் தேவை என அவர் குறிப்பிட்டுள்ளார். சரியோ பிழையே சர்வதேச நியமங்களுக்கு அமைவாக விசாரணை நடத்தப்படவேண்டும் என்பதே உலகின் பல நாடுகளினது கோரிக்கை ஆகும் என அவர் சுட்டிக்காட் டியுள்ளார்.

பாரிய குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் வெறுமனே மறுப்புக்களைத் தெரிவிப்பது போதுமானதல்ல எனவும் விசாரணை நடத்தப்



படவேண்டியது அவசியமானது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஆட்சி நிர்வாகத்தை அரசாங்கம் நகைச்சுவையாக எடுத்துக்கொள்ளக்கூடாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்க்கட்சிகள் மீது தேசத்துரோகப் பட்டம் சுமத்துவதனை விடவும் யதார்த்தத்தை புரிந்து கொண்டு அரசாங்கம் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# இலங்கைக்கு இலகு கடனாக 20 கோடி அமெ.டொலர் நிதியுதவி

இலங்கைக்கும் பாகிஸ்தானுக்கும் இடையேயான இரு தரப்பு வர்த்தகத்தை மேம்படுத்த இருபது கோடி அமெரிக்க டொலர்களை இலகு கடனாக வழங்க பாகிஸ்தான் முன்வந்துள்ளது.

இந்த நிதியினைக் கொண்டு பண்டமாற்று முறையிலான வர்த்தகத்தை இலங்கையினால் ஆரம்பிக்க முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பண்டமாற்று திட்டத்தின் மூலம் 100 கோடி வரையில் வர்த்தக நடவடிக்கைகளை முன்னெடுத்துச்செல்ல முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான விடயம் குறித்து இலங்கைக்கு வருகை தந்திருந்த பாகிஸ்தானிய முதலீட்டுதுறை அமைச்சர் சலிம் எச்.மண்ட்வீவல இலங்கை முதலீட்டுச் சபை உயர் அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானிய ஜனாதிபதி அசிவ் அலி சர்தாரி இலங்கைக்கு அண்மையில் வருகை தந்திருந்த போது அவருடன் பாகிஸ்தானிய முதலீட்டுத்துறை அமைச்சரும் வருகை தந்திருந்தார்.

இலங்கை அரசாங்கத்துடன் மேற்கொண்ட பேச்சுவார்த்தைகள் மூலம் இலங்கை மற்றும் பாகிஸ்தான் நாடுகள் தமது வர்த்தக நடவடிக்கைகளை சிறந்த முறையில் மேம்படுத்த முடியும் என அவர் [illegible] வழங்கிய செவ்வி ஒன்றில் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

## மட்டக்களப்பில் கடும் மழை

# 24 மணித்தியாலங்களில் 90.6 மி.மீ. மழைவீழ்ச்சி பதிவு

மட்டக்களப்பு மாவட்டத்தில் தொடர்ந்தும் கடும் மழை பெய்து வருகின்றது.

நேற்றுக் காலை 8 மணியுடன் முடிவடைந்த கடந்த 24 மணித்தியாலயங்களில் 90.6 மில்லி மீற்றர் மழை பெய்துள்ளதாக மாவட்ட காலநிலை அவதானநிலையப் [illegible] குமார் தெரிவிக்கின்றார்.

தொடரும் கடும் மழை காரணமாக மாவட்டத்தின் பல வீதிகள் நீரினால் மூழ்கி யுள்ளன. இதனால் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பு, வெல்லாவெளி,வாகரை, சித்தாண்டி ,களுவாஞ்சிக்குடி உட்பட பல இடங்களில் வெள்ளம் ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் பாடசாலைகள் உட்பட பல அரச நிறுவனங்களும் நீரில் மூழ்கி யுள்ளன. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேல் மாகாண கல்வித் திணைக்களம்

# க.பொ.த.சாதாரண தரப் பரீட்சை -2010

# பயிற்சி வினாத்தாள் - விஞ்ஞானம் - II

## பகுதி - A

**3 மணித்தியாலங்கள்**

☞ வினாத்தாள் A,B என்னும் இரண்டு பகுதிகளைக் கொண்டது. பகுதி A இல் வினவப்பட்டுள்ள சகல வினாக்களுக்கும் வழங்கப்பட்டுள்ள புள்ளிக் கோட்டின் மீது விடையளிக்க. பகுதி B இன் விடைத்தாளை இதனுடன் இணைத்து கையளிக்கவும்

**எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

1) துவிச்சக்கர வண்டியில் பயணித்த கோகுலனுக்குச் சிறிது தூரம் சென்றதும் துவிச்சக்கர வண்டியை செலுத்துவதில் சிரமம் ஏற்பட்டது. அவர் வண்டியிலிருந்து இறங்கி பின்சில்லை அவதானித்த போது வண்டியில் பின்சில்லின் டயர் கையினால் அமுக்கக் கூடியதாகவும் அதில் வளி குறைவாகவும் காணப்பட்டது. சில்லை பரீட்சித்து பார்த்தபோது வால்வு உருகி இலகிக் காணப்பட்டது. வால்வை மாற்றி திரும்பவும் காற்றடித்து பாத்தபோது டயரினது பருமன் பெரிதாக மாறாவிட்டாலும் அதனை அமுக்க முடியாது உறுதியாகக் காணப்பட்டது.

(i) இலகிய வால்வினால் சில்லில் உள்ள காற்று வெளியேறியதற்கான காரணம் யாது?

(ii) சில்லுக்கு காற்றடிக்கும் போது டயரின் கனவளவு மாறாது எனினும் மாறும் வேறு இரண்டு காரணிகளைக் கூறுக.

(iii) வளியினால் நிரப்பப்பட்ட சைக்கிள் டயர் கொண்ட சில்லானது வளியினால் குறைவாக நிரப்பப்பட்ட சில்லிலும் பார்க்க இலகுவாக பயணிக்க முடிவதற்கான காரணம் யாது?

(iv) துவிச்சக்கர வண்டியின் டயர் தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட இறப்பரானது சாதாரண இறப்பரைவிட உறுதி கூடியது. உறுதி கூடிய இறப்பரை பெறுவதற்கு இறப்பருடன் கலக்கப்பட்ட பதார்த்தம் யாது?

(v) இவ்வாறு கலக்கும் செயன்முறையை எவ்வாறு அழைப்பர்?

(vi) (அ) துவிச்சக்கர வண்டியை நேர்த்தியாக செலுத்துவதற்கு உடலில் உள்ள உறுப்புக்கள் ஒன்றுடன் ஒன்று ஒருங்கிசைந்து செயற்பட வேண்டும். இவ்வாறு ஒருங்கிசைந்து செயற்படும் மூன்று உறுப்புகள் எவை?

(ஆ) இவ்வாறு ஒருங்கிசைந்து செயற்படுவது எவ்வாறு அழைக்கப்படும்?

(இ) உடலில் உள்ள புலனுறுப்புகளுக்குச் செய்தியை அனுப்பும் மைய நரம்புத் தொகுதியின் பகுதி எது?

(vii) (அ) துவிச்சக்கர வண்டியை செலுத்துவதற்கு உதவிய தசைவகை எது?

(ஆ) துவிச்சக்கர வண்டியை செலுத்துவதற்கு தேவையான சக்தியைப் பெறுவதற்கு தசைக்கலத்தில் நடைபெற்ற ஒரு செயன்முறைக்குரிய சமன்பாட்டை எழுதுக.

2) எல்லா அங்கிகளினதும் நிலவுகைக்கு உணவு அவசியம். உணவானது பச்சைத்தாவரங்களில் ஒளித்தொகுப்பு மூலம் தொகுக்கப்படுகிறது. ஒளித்தொகுப்பிற்காக சூரிய ஒளி, பச்சையம், காபனீரொட்சைட்டு, நீர் அவசியமாகும்.

(i) ஒளித்தொகுப்பின் போது பச்சையத்தின் மூலம் நடைபெறும் தொழில் யாது?

(ii) வேர் மயிரினால் உறிஞ்சப்படும் நீர் இலைவரை கடத்தும் இழையத்தைப் பெயரிடுக.

(iii) அவ்விழையத்தில் காணப்படும் இரண்டு கலவகைகளைக் கூறுக.

(iv) ஒளித்தொகுப்பின் பிரதான விளைபொருள் யாது?

(v) ஒளித்தொகுப்புச் செயன்முறையை உருவாக்கும் விளைபொருளின் பல்பகுதியத்தை கண்டறிய நடாத்தப்பட்ட பரிசோதனையில் அவித்த இலை மதுசாரத்தில் இட்டு நேரடியாக வெப்பமேற்றாது நீர் கொண்ட தாழியினுள் வைத்து வெப்பமேற்றுவதற்கான காரணம் யாது?

(vi) ஒளித்தொகுப்புச் செய்ன்முறை உச்ச அளவில் நிகழ்த்துவதற்கு இலை கொண்டுள்ள இசைவாக்கம் ஒன்றை எழுதுக.

(vii) பின்வரும் பதார்த்தங்களை தாவரங்கள் எவ்வாறு உள்ளெடுக்கின்றன.

(அ) கனிப்பொருள்

(ஆ) நீர்

(viii) இலையில் வாயுப்பரிமாற்றம் நடைபெற உதவும் கட்டமைப்பு யாது?

(ix) பகல் நேரங்களில் தாவர இலையைச் சூழ காணப்படும் வளிக்கும், இலையின் காற்றிடை வெளியில் காணப்படும் வளிக்கும் இடையில் காணப்படும் வேறுபாடுகள் இரண்டு கூறுக.

(x) ஆவியுயிர்ப்பு என்றால் என்ன?

(xi) ஆவியுயிர்ப்பைக் கட்டுப்படுத்துவதற்கு தாவரங்கள் கொண்டுள்ள இசைவாக்கம் ஒன்று குறிப்பிடுக.

3) பின்வரும் கரைசல்கள் உங்களுக்குத் தரப்பட்டுள்ளன.

- சீனிக்கரைசல்
- மாக்கரைசல்
- நீலத்துாள் கரைசல்
- சேலைன் கரைசல்
- எதனோல் கரைசல்
- இயற்கை நீர்

(i) இக்கரைசல்களை ஏகவினக்,கரைசல் பல்லினக் கரைசல் என வேறுபடுத்திக் காட்டுக.

(ii) இவ்விரண்டு கரைசல்களுக்கிடையில் காணப்படும் பிரதான வேறுபாடு யாது?

(iii) எதனோல் கரைசலில் காணப்படும் கரைப்பானையும், கரையத்தையும் கூறுக.

(iv) எதனோல் முனைவுத்தன்மை கொண்டசேதனச் சேர்வையாகும். இங்கு கோடிடப்பட்ட சொல்லை விளக்குக.

(v) குறித்த ஒரு கரைசலின் அமைப்பு $5\%^{V}/_{V}$ எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கரைசலின் $500cm^3$ கரைசலைத் தயாரிப்பதற்குத் தேவையான கனவளவு எவ்வளவு?

(vi) கரைசலொன்றின் கொதிநிலை, உயர்பெறுமானத்தைப் பெறுவதற்கான இரண்டு காரணங்களைக் கூறுக.

(vii) கரைதிறன் என்றால் என்ன என்பதை வரைவிலக்கணப்படுத்துக.

(viii) 18g குளுக்கோசை $250cm^3$ தூயநீரில் கரைத்தால் பெறப்படும் கரைசலின் செறிவைக் காண்க.


4) முறுக்கப்பட்ட வில் ஒன்று விடுவிக்கப்படும் போது டைனமோ ஒன்று செயற்படுத்தப்பட்டு மின் உற்பத்தி செய்யப்படுகிறது. இம் மின்னினால் ஒலியெழுப்பிக் கொண்டு அசையும் விளையாட்டுக் கார் ஓடவிடப்பட்டது.

(i) டைனமோவில் காணப்படும் பிரதான பகுதிகள் இரண்டை எழுதுக.

(ii) விளையாட்டுக்காரில் ஏற்படும் சக்திமாற்றத்தைக் கூறுக.


(iii) விளையாட்டுக்காரின் சுற்றினூடாகப் பாயும் மின்னோட்டமும் வீட்டு மின்சுற்றில் பாயும் மின்னோட்டமும் சமனாகும். இக்கூற்றை ஏற்றுக்கொள்கின்றீரா?

(iv) வீட்டு மின்சுற்றில் உள்ள குதையொன்றில் மூன்று துவாரங்கள் காணப்படுகின்றன. இத்துவாரங்களுடன் தொடர்புபட்ட மின்வடங்களைக் கூறுக.




(v) ஒலியெழுப்பியிலிருந்து வெளியாகிய சத்தம் வளியினூடாக கேட்பவரின் காதுக்கு கடத்தப்படும் அலை வகையின் பெயரைக் கூறுக.

(vi) 250Hz மீடிறனைக் கொண்ட அலையின் வடிவம் அருகில் தரப்பட்டுள்ளது.




(அ) அலையின் வீச்சம் எவ்வளவு?

(ஆ) அலையின் வேகத்தைக் காண்க.

(vii) ஒலியெழுப்பி, விட்டுவிட்டு ஒலியெழுப்பியவாறு வெளிச்சத்தையும் தரக்கூடிய முறையில் இச்சுற்றை மாற்றியமைக்க முடியும் என மாணவன் கூறினான். மேலும் ஒலியெழுப்பியுடன் தொடர்பாகவுள்ள சுற்றில் இலத்திரன் துணைச்சாதனமொன்றை இணைப்பது மட்டுமே அவசியம் எனக் கூறினான். அவ்விலத்திரனியல் உபகரணத்தைக் கூறுக.


(viii) விளையாட்டுக் காரானது நேர்க் கோட்டுப்பாதையில் பயணித்த போது ஒவ்வொரு செக்கனிலும் அது கடந்த தூரம் புள்ளிகளால் காட்டப்பட்டுள்ளது.




(அ) இரண்டு புள்ளிகளுக்கிடையிலான இடைவெளி 10cm எனின் பின்வரும் அட்டவணையை நிரப்புக.

| நேரம் (s) | 01 | 02 | 03 | 04 |
|---|---|---|---|---|
| இடப்பெயர்ச்சி மாற்றம் (cm) | 10 | 20 | 30 | 40 |
| வேகம் ($cms^{-1}$) | ....... | ....... | ....... | ....... |

(ஆ) விளையாட்டுக் கார் அசையும் போது விளையாட்டுக் கார் அதன் மீது தொழிற்படும் விசைகளை படம் காட்டுகின்றது. இவ்விசைகளைப் பற்றி யாது கூறமுடியும்?




(இ) மாணவன் ஒருவன் வரைந்த இயங்கும் பொருளொன்றின் வேக - நேர வரைபு கீழே தரப்பட்டுள்ளது. இப்பொருளினதும் விளையாட்டுக் காரின் இயக்கத்தினதும் வேகத்தை ஒப்பிடுக.




(1) விளையாட்டுக் காரின் இயக்கம்

(2) வரையில் உள்ள பொருளின் இயக்கம்.

12ஆம் பக்கம் பார்க்க...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27 ஆம் திகதியில் பிறந்த உங்கள் பலன் எப்படி?

27ஆம் திகதி பிறந்தவர்களை பெரும்பாலும் அதிர்ஷ்டசாலிகள் என்றே கூற வேண்டும். பலராலும் மிகவும் விரும்பப்படும் எண்களில் இதுவும் ஒன்று. தொடர் முன்னேற்றத்தையும் வாய்ப்பையும் வாரி வழங்கும் எண். எண் ஆதிக்கம் நன்றாக இருந்தால் பிரகாசமாகும். நன்மையையும் மிகப் பெரிய செல்வாக்கையும் கொடுக்கும். இந்த எண்ணில் ஆண்களை விட பெண்களே அதிகம் இருப்பார்கள்.

மன்னர்களும், அடிமையாகும் தன்மையைக் கொடுக்கும் மிக உயர்ந்த பண்புகளும் குணங்களும் கொண்டுள்ள எண் என்றாலும், ஆதிக்கம் குறைவாக இருந்தால் சட்டத்திற்குப் புறம்பான செயல்களில் இறக்கி விடும். எந்த அளவுக்கு நன்மை செய்யுமோ அதே அளவுக்கு தீமையும் செய்யும் குணம் கொண்டது. இவர்களின் தொழில் எண்கள் 1,8 தொழில் உதவி எண்கள் 2,7.

நிலம் மற்றும் சுரங்கம், ஆராய்ச்சி தொடர்பான துறைகளில் இவர்களை அதிகம் காணலாம். சீருடைப் பணிகளிலும் இருப்பார்கள். இவர்களுக்கு 27 வயதுக்கு மேல் நன்மைகள் ஏற்படக் கூடிய நிலை இருந்தாலும், திடீர் திடீரென மனக் குழப்பத்தைக் கொடுக்கும். மேலதிகாரிகளால் தொல்லைகளும், பதவி உயர்வுகள் தடைப்படும் நிலையும் உண்டாகும். மனதால் மாற்றங்கள் நிகழும் சூழ்நிலை உண்டாகும். தொழில் எண்கள் 1,8 இன் ஆதிக்கம் நன்றாக இருந்து, தொழில் உதவி எண்கள் 2,7 இன் ஆதிக்கம் (பிறந்த திகதி எண்களும் 2 மற்றும் 7) சரியாக அமையாததே இதற்குக் காரணமாகும். பிறந்த திகதி எண்களின் ஆதிக்கமும் நன்றாக இருந்தால் அனைத்தும் நன்மையாகவும் விரைவாகவும் கிடைக்கப் பெறுவார்கள். தொழில் எண்கள் மற்றும் உதவி எண்களின் ஆதிக்கமும் நன்றாக இருந்தால் எந்த நிலையிலும் நன்மையே நடைபெறும். எண் ஆதிக்கம் மிகவும் மோசமாக இருந்தால் மனநிலை தொடர்பான குறைபாடுகள் உண்டாகும். இவர்கள் செவ்வாய்க்கிழமை தோறும் சொர்ணாகார்ஷன பைரவரை வழிபட்டு வந்தால் நன்மைகள் பெறலாம்.

இவர்கள் சிறந்த தொழிலதிபர்களாக விளங்கக்கூடியவர்கள். எதிலும் முன்யோசனையுடன் செயல்படும் தன்மையையும், முன் ஜாக்கிரதையுடன் இருக்கும் நிலையையும் தொழில் எண்களான 1, 8 தொடர்ந்து கொடுக்கும். தொழில் உதவி எண்களும் பிறந்த திகதி எண்களும் தொழில் தொடர்பான நிலம், இயந்திரம் சம்பந்தப்பட்ட இனங்களில் நன்மைகளைச் செய்து உயர்வளிக்கும். என்னதான் உயர்வும் முயற்சியும் வேகமும் இருந்தாலும் பெண்களின் தலையீடு இருந்தால் அனைத்தும் தவிடு பொடியாகி விடும். காரணம், தொழில் எண்கள் 1,8 ஆக இருப்பதுதான். பெண்கள் தொழிலதிபர்களாக இருந்தால் ஆண்களின் தலையீடு வீழ்ச்சிக்குக் காரணமாகிவிடும். கவனமாகச் செயல்பட வேண்டும். இவர்களுக்கு 27 வயது முதல் தான் அனைத்து முயற்சிகளும் நன்மை செய்யத் தொடங்கும். இந்த திகதியில் பிறந்தவர்களுக்கு சரியான எண்ணில் (9 ஆம் எண் வரிசையில்) நிறுவனப் பெயர் அமைந்துவிட்டால், தலைமுறைக்கு நின்று செயல்படும் தன்மையைக் கொடுக்கும். இவர்கள் செவ்வாய்க்கிழமை தோறும் பழமுதிர்ச்சோலை முருகனை தரிசனம் செய்து வந்தால் அல்லது மருதமரம் வளர்த்தால் நன்மைகளைத் தொடர்ந்து பெறலாம்.

இவர்கள் பெரும் இயந்திரம் சம்பந்தப்பட்ட துறையிலும் நுணுக்கமான வேலை செய்யும் துறைகளிலும் இருப்பதைக் காணலாம். இவர்களின் தொழில் எண் மற்றும் தொழில் உதவி எண்களின் ஆதிக்கம் குறைந்திருப்பதால் தான் தொழிலாளர்களாக இருக்கிறார்கள். இதிலும் ஏதேனும் எண்ணின் ஆதிக்கம் கிடைக்கப் பெற்றால் போதும். சிறுகச் சிறுக முன்னேறி தொழில் அதிபர்களாகி விடலாம். இவர்களில் மிக அதிகமானவர்கள் பெண்களுக்கு அடிமையானவர்களாகவே இருப்பதைக் காணலாம். இவர்களின் முயற்சி தோல்வி அடைவதும் இதனால்தான். சரியான எண்ணில் பிறந்த பெண்ணைத் திருமணம் செய்தவர்கள் திருமணத்திற்குப் பிறகு படிப் படியாக உயர்வடைவதைக் காணலாம். மனச் சஞ்சலத்தையும் மனக்குழப்பத்தையும் சீர் செய்துகொண்டால் மட்டுமே இவர்கள் முன் னேறமுடியும். மனக்கட்டுப்பாட்டை ஏற்படுத்திக் கொண்டால், இவர்களின் தொழில் எண் களும் தொழில் உதவி எண்களும் மாறிச் செயல்பட்டு நன்மையைக் கொடுக்கும். பின்பு என்ன? வெற்றிதான்; மகிழ்ச்சிதான்! இவர்கள் வாரம்தோறும் செந்தூர் முருகனை வழிபாடு செய்ய வேண்டும்.

இவர்களை கலைத்தாயின் பிள்ளைகள் என்றே சொல்லலாம். இவர்களுக்கு எல்லாம் தானே அமையும். முயற்சி கால்பங்கு விதி முக்கால் பங்கு என்று இவர்களின் தொழில் எண்கள் செயல்படும். ''காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்" என்பதுபோல கிடைத்த வாய்ப்புக்களைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு முன்னேறும் நிலை இருக்கும். தொழில் எண்களான 1,8 இன் ஆதிக்கம் ஒரு சுற்றும்; தொழில் உதவி எண்களான 2,7 இன் ஆதிக்கம் அடுத்த சுற்றும்; பிறந்த திகதி எண்களான 2,7 இன் ஆதிக்கம் மறுசுற்றும் என தொடர்ந்து செயல்படுவதால் வீழ்ச்சி இன்றி இருக்கும். (தொழில் உதவி எண்களும் பிறந்த திகதி எண்களும் ஒரே எண்களாக இருக்கிறது) பிறந்த திகதி எண்ணும் தொழில் உதவி எண்ணும் ஒன்றாக இணைந்து செயல்படும் போது நாம் ஒரு செயல் செய்தால் நமக்கு நான்கு செயல்கள் நடந்துவிடும். இதேபோல் எண் ஆதிக்கம் குறைவாக இருந்தால் எதிர் சுழற்சியில் செயல்பட்டு நாம் ஒரு தவறு செய்தால் நான்கு தவறுகள் நடந்து நிலைமை மோசமாகிவிடும். இந்த எண் எதிர்பாலினத்தால் மட்டுமே வீழ்ச்சியடையும் தன்மை கொண்டது. கவனமாகச் செயற்பட்டால் நன்மையை மட்டும் பெறலாம். இவர்கள் வாரம் தோறும் கார்த்திகைப் பெண்களுக்கு தீபம் ஏற்றி வழிபட்டு வந்தால் நன்மைகள் பெறலாம்.

பிறந்த திகதி 27. விதி எண் 1 ஆக உள்ளவர்களுக்கு வாழ்நாளில் மிக அதிக பட்சமாக 24 ஆண்டுகள் சிறப்பான பலன்களைச் செய்யும். பிறந்த திகதி 27, விதிஎண் 2 ஆக உள்ளவர்களுக்கு 9 ஆண்டுகள், பின் 2 அல்லது 3ஆண்டுகள் இடைவெளி விட்டு மீண்டும் 9 ஆண்டுகள் சிறப்பான பலன்களைச் செய்யும். பிறந்த திகதி 27, விதி எண் 3ஆக உள்ளவர்களுக்கு 16ஆண்டுகள் முதல் 21 ஆண்டுகள் வரை நன்மையான பலன்களைச் செய்யும். பிறந்த திகதி 27, விதிஎண் 4 ஆக உள்ளவர்களுக்கு 27 ஆண்டுகள் சிறப்பான பலன்களைச் செய்யும். பிறந்த திகதி27, விதி எண் 5ஆக உள்ளவர்களுக்கு 27முதல் 30ஆண்டுகள் வரை மிகச் சிறப்பான பலன்களைக் கொடுக்கும். பிறந்த திகதி 27 விதி, எண் 6ஆக உள்ளவர்களுக்கு 24ஆண்டுகள் முதல் 27 ஆண்டுகள் வரை நன்மையான பலன்களைச் செய்யும். பிறந்த திகதி 27, விதிஎண் 7ஆக உள்ளவர்களுக்கு குறைந்தபட்சமாக 16 ஆண்டுகளும் அதிக பட்சமாக 21 ஆண்டுகளும் நன்மைகளைச் செய்யும். பிறந்த திகதி 27, விதி எண் 8ஆக உள்ளவர்களுக்கு வாழ்நாளில் அதிகபட்சமாக 33ஆண்டுகளும் குறைந்தபட்சமாக 17 ஆண்டுகளும் நற்பலனைச் செய்யும். பிறந்த திகதி 27, விதி எண் 9ஆக உள்ளவர்களுக்கு குறைந்தபட்சம் 16 ஆண்டுகளும் அதிகபட்சமாக வாழ்நாள் முழுவதும் (36 வயதுக்குமேல்) நன்மையான பலன்கை, செய்யும்.

குறிப்பு:- பிறந்த திகதி எண், விதி எண்,, தொழில் எண், நன்மை செய்யும் எண் ஆகியவற்றின் ஆதிக்கத்தைப் பொறுத்து தொழில் நிலைகள் மாறுபடும்.

**எஸ்.என்.ஹிரிஜி**

(அடுத்த திங்கள் வளரும்)

## மழையுடன் கூடிய காலநிலையால் டெங்கு நோய் பரவும் சாத்தியம்

(கொழும்பு)

தற்போது நிலவுகின்ற மழையுடன் கூடிய கால நிலையின் காரணமாக மீண்டும் டெங்கு நோய் ஏற்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

மலேரியா மற்றும் டெங்கு ஒழிப்பு பிரிவினர் இந்தத் தகவலை விடுத்துள்ளனர்.

இது குறித்து அதன் தலைவர் சரத் தெனியகே கருத்துத் தெரிவிக்கும் போது டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை தமது திணைக்களம் மேற்கொள்வதாகவும்

இதன்படி பீ.டி.ஐ. பக்டீரியாவை இலங்கை முழுவதும் பயன்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

(ஸ்ரீ-2-4)

## விக்கிலீக்ஸ் தகவல்கள் தொடர்பில் எவ்வித இராஜதந்திர நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாது

### பிரதியமைச்சர் நியோமல் பெரேரா தெரிவிப்பு

(கொழும்பு)

விக்கிலீக்ஸ் இணையத்தளத்தில் வெளியான இலங்கை தொடர்பான அமெரிக்காவின் இரகசியத் தகவல்கள் தொடர்பில் எவ்வித இராஜதந்திர நடவடிக்கைகளிலும் ஈடுபடுவதில்லை என இலங்கை தீர்மானித்துள்ளதாக இலங்கையின் பிரதி வெளியுறவுத்துறை அமைச்சர் நியோமல் பெரேரா தெரிவித்துள்ளார்.

இலங்கையின் போர்க் குற்றங்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவும் அவரின் சகோதரர்களுமே பொறுப்பு என அமெரிக்க தூதர் பெற்றீசியா பியூட்டினியஸ் இராஜாங்க திணைக்களத்துக்கு தகவல் அனுப்பியிருந்ததாக விக்கிலீக்ஸ் தகவல் வெளியிட்டிருந்தது.

இந்த நிலையில் விக்கிலீக்ஸ் வெளியிட்ட அமெரிக்காவின் உள்ளக தகவல் பரிமாற்றத்தை இலங்கை அரசாங்கம் ஆராய்ந்துள்ளதாக தெரிவித்துள்ள பிரதியமைச்சர் நியோமல் பெரேரா, அது அமெரிக்கா, இலங்கைக்கு எதிரான கொள்கையை கொண்டுள்ளது என்பதை புலப்படுத்தவில்லை எனக் குறிப்பிட்டுள்ளார்.

எனினும் வெளியுறவுத்துறை அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் பி.பி.சி.க்கு அளித்துள்ள செவ்வியில் விக்கிலீக்ஸின் தகவல்கள் தொடர்பில் உரிய இராஜதந்திர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

(ஸ்ரீ-2)



சாவகச்சேரி கொமர்ஷல் வங்கியின் தங்கநகை அடைவு சேவை ஆரம்ப நிகழ்வில் வாடிக்கையாளர் ஒருவர் மங்கல விளக்கேற்றுவதையும் சாவகச்சேரி கிளை முகாமையாளர் ப. குருபாதம் உட்பட வங்கி உத்தியோகத்தர்கள் நிற்பதனையும் கொமர்ஷல் வங்கியின் பிராந்திய முகாமையாளர் எஸ். றஜீவன் நாடாவெட்டி அடைவுப் பிரிவை ஆரம்பித்து வைப்பதனையும் படங்களில் காணலாம். (படங்கள்:- சாவகச்சேரி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஏழாலை வடக்கு அமெரிக்க மிஷன் தமிழ் கலவன் பாடசாலையில் ஜனாதிபதியின் இரண்டாவது தடவை பதவியேற்பை முன்னிட்டு மர நடுகை நிகழ்வு இடம்பெற்றது. இந் நிகழ்வில் ஆசிரியை திருமதி எவ்.எ.ஜி.விக்னராசா மரம் நடுவதையும் அருகில் ஆசிரியர், மாணவர்கள் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (படம்:-சுன்னாகம் செய்தியாளர்)

# கொழும்பு- மாத்தறை கடுகதி புகையிரதப் பாதை நிர்மாணம் 2012 இல் நிறைவடையும்

(கொழும்பு)

கொழும்பிலிருந்து மாத்தறை வரையிலான தென்பகுதி புகையிரதப் பாதையினை மேம்படுத்தும் நடவடிக்கைகள் எதிர்வரும் 2012ஆம் ஆண்டு இறுதியளவில் நிறைவடையும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்திற்கு 21 கோடியே 24 இலட்சம் அமெரிக்க டொலர்கள் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தப் புகையிரதப் பாதை நிர்மாணிக்கப்பட்டதன் பின்னர் மணிக்கு 100 கிலோ மீற்றர் வேகம் வரை பயணிக்க முடியும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

இதேவேளை சீன அரசாங்கம் 13 புகையிரத எஞ்சின்களை இலகு கடன் அடிப்படையில் வழங்க முன்வந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# ஜயலத் எம்.பி யின் சிவில் உரிமை, பாராளுமன்ற உறுப்புரிமைகளை இரத்து செய்ய முயற்சி

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்றஉறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவின் பாராளுமன்ற உறுப்புரிமையை இரத்து செய்வதற்கு ஆளும் கட்சி முயற்சி மேற்கொண்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதியின் லண்டன் விஜயத்தின் போது ஹீத்ரூ விமான நிலையத்தில் நடைபெற்ற எதிர்ப்பு போராட்டத்தில் ஜயலத் ஜயவர்த்தன கலந்து கொண்டதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அரசியல் சாசனத்தின் ஆறாம் இலக்க சட்டத்தின் அடிப்படையில் ஜயலத் ஜயவர்த்தனவின் சிவில் உரிமைகளை இரத்து செய்து பாராளுமன்ற உறுப்புரிமையையும் இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப் படவுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றில் விசேட தீர்மானமொன்று நிறைவேற்றப்படவுள்ளதாகவும் ஏற்கனவே 100 பாராளுமன்ற உறுப்பினர்களிடம் கையொப்பங்கள் திரட்டப்பட்டுள்ளதாக ஆளும் கட்சியின் பிரதம கொறடா தினேஸ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

ஜயலத் ஜயவர்த்தனவிற்கு எதிராக தெரிவுக் குழு ஒன்றின் மூலம் விசாரணை நடத்துமாறு எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்ரமசிங்க கோரிக்கைவிடுத்துள்ளார்.

எனினும் இந்த நடவடிக்கைகளுக்கு நீண்டகாலம் தேவைப்படும் என்பதனால் ஆளும் கட்சியினர் ஜயலத் ஜயவர்த்தனவிற்கு எதிராக விசேட தீர்மானமொன்றை நிறைவேற்றத் தீர்மானித்துள்ளனர்.

தீர்மானம் குறித்து விவாதம் நடத்தி வாக்கெடுப்பு நடத்தப்படும் எனவும் பின்னர் அந்தத் தீர்மானம் உச்ச நீதிமன்றின் முன்னிலையில் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

நாட்டுக்கு எதிரான வகையில் பிரிவினைவாத சக்திகளுடன் இணைந்து ஜயலத் ஜயவர்த்தன செயற் பட்டுள்ளரா என உச்ச நீதிமன்றம் தீர்மானிக்கும் எனக் குறிப்பிடப்படுகிறது. (ஸ்ரீ-2)

# நாட்டில் ஒட்டகப் பண்ணைகளை அமைப்பதற்கு அரசு திட்டம்

(கொழுமபு)

வெளிநாடுகளில் இருந்து இலங்கைக்கு ஒட்டகங்களும் நெருப்புக் கோழிகளும் இறக்குமதி செய்யப்படவுள்ள தாகத் தெரிவிக்கப்படுகிறது. பால் மற்றும் முட்டைகளைப் பெற்றுக்கொள் வதற்காக இந் நடவடிக்கை எடுக்கப் படவுள்ளது.

ஒட்டகங்கள் மற்றும் நெருப்புக்கோழிகளை இறக்குமதி செய்வது தொடர்பான சாத்திய ஆய்வு தற்போது மேற்கொள்ளப்பட்டு வருவதாக கால்நடை வள பிரதி அமைச்சர் எச்.ஆர்.மித்ரபால தெரிவித்துள்ளார்.

இலங்கையில் ஒட்டக மற்றும் நெருப்புக்கோழிப் பண்ணைகளை உருவாக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். மன்னார் பகுதியில் இந்தப் பண்ணைகளை அமைக்க முடியும் என அவர் தெரிவித்துள்ளார். துறைசார் நிபுணர்கள் ஒட்டக வளர்ப்புக்கு ஏற்ற சுவாத்தியம், கால நிலை என்பன குறித்து ஆராய்ந்து வருகின்றனர்.

இதேநேரம் முட்டை தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வெளிநாடுகளில் இருந்து வான் கோழிகளை இறக்குமதி செய்து பண்ணைகளில் வளர்க்கவும் அரசு தீர்மானித்துள்ளது. (ஸ்ரீ-2)

# ஜனாதிபதி மகிந்தவை கைது செய்ய பிரித்தானிய நீதிமன்றம் உத்தரவு

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை கைது செய்வதற்கு பிரித்தானிய நீதிமன்றமொன்று உத்தரவு பிறப்பித்துள்ளதாக திவயின பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

யுத்தக் குற்றச்சாட்டின் அடிப்படையில் ஜனாதிபதியை கைது செய்வதற்கு அந்நாட்டு ஆரம்ப நீதிமன்றமொன்று உத்தரவு பிறப்பித்துள்ளது.

தமிழீழவிடுதலைப்புலி ஆதரவுப் புலம்பெயர் தமிழர்களின் கோரிக்கைக்கு அமைய நீதிமன்றம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது. கடந்த 2ஆம் திகதி இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஜனநாயக ரீதியில் மக்களினால் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ஒருவரை வேறு நாட்டில் கைது செய்யுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட முதல் சந்தர்ப்பம் இதுவென அப்பத்திரிகை சுட்டிக்காட்டியுள்ளது.

30 ஆண்டுகளாக நீடித்து வந்த பயங்கரவாதத்தை இல்லாதொழித்து மக்களுக்கு சுதந்திரத்தைப் பெற்றுக்கொடுத்த ஜனாதிபதியின் சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளதாக பத்திரிகை தெரிவித்துள்ளது.

மிகவும் திட்டமிட்ட முறையில் இந்த நீதிமன்ற உத்தரவு பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது. நோர்வே சட்ட நிறுவமொன்றின் உதவியுடன் புலி ஆதரவாளர்கள் இந்த உத்தரவினை பெற்றுக்கொண்டுள்ளனர் என திவயின செய்தி வெளியிட்டுள்ளது. (ஸ்ரீ-2)

# கொழும்பிலிருந்து வெளியேற்றும் திட்டத்துக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் கடும் ஆட்சேபம்

கொழும்பில் இருந்து வேறு இடங்களுக்கு தம்மை குடியமர்த்த எடுக்கப் படும் முயற்சிகளுக்கு கொழும்பில் உள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

கொழும்பு நகரை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையின் அடிப்படையில் பாதுகாப்பு செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவின் பணிப்புரையில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் கொழும்பில் இருந்து 60 ஆயிரம் குடும்பங்கள் வெளியேற்றப்படவுள்ளன.

இந்தக்குடும்பங்கள் ஹோமாகம, கம்பஹா மற்றும் களுத்துறை ஆகிய இடங்களில் குடியமர்த்தப்படவுள்ளன. அத்துடன் இந்த குடும்பங்கள் மத்தியில் உள்ள வடக்கை சேர்ந்தவர்களுக்கு வடக்கில் காணிகளை ஒதுக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

எனினும் இதனை ஆட்சேபித்துள்ள தமிழ் குடும்பங்க்ள தாம் பல வருட காலமாக கொழும்பில் வசித்து வந்த நிலை யில் தம்மை விரும்பினால் வடக்குக் செல்லக்கூறுவதை ஆட்சேபிப்பதாக தெரி வித்துள்ளனர்.

ஊறு கொட்வத்தையில் வாழும் தமிழ் மக்கள் அரசாங்கத் தின் அந்த யோசனையை முழுமையாக கண்டிப்பதாக குறிப்பிட்டுள்ளனர்.

அத்துடன் தமது தொழில்கள், பிள்ளைகளின் கல்வி என்பதை வேறு இடங்களில் குடியமர்த்தப்படும் போது இல்லாமல் போகக்கூடிய ஆபத்து உள் ளதாகவும் தமிழ் மக்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தமக்கு கொழும்பிலேயே மாற்று வீட்டு வசதிகளை ஏற்படுத்தி தருமாறு அவர்கள் கோரியுள்ளனர். (ஸ்ரீ-2)

# 2010.12 06 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

✠1060- முதலாம் பேலா ஹங்கேரியின் மன்னாக முடிசூடினான்.

✠1240-உக்கிரேனின் கீவ் நகரம் மங்கோலியரிடம் வீழ்ந்தது.

✠1768-பிரித்தானிக்கா கலைக்களஞ்சியத்தின் முதற் பதிப்பு வெளியிடப்பட்டது.

✠1790-ஐக்கிய அமெரிக்க சட்டமன்றம் நியூயோர்க் நகரில் இருந்து பிலடெல்பியாவுக்கு இடம்பெயர்ந்தது.

✠1865-ஐக்கிய அமெரிக்காவில் அடிமை முறை தடை செய்யப்பட்டது.

✠1877-வோஷிங்டன் போஸ்ட் செய்திப் பத்திரிகை முதற்தடவையாக வெளியிடப்பட்டது.

✠1884-வோஷிங்டன் டிசியில் வோஷிங்டன் நினைவுச்சின்ன அமைப்பு வேலைகள் முடிவடைந்தன.

✠1897-வாடகை வாகனம் உலகில் முதற் தடவையாக லண்டனில் சேவைக்கு விடப் பட்டது.

✠1907-மேற்கு வேர்ஜீனியாவில் மொனொங்கா என்ற இடத்தில் நிலக்கரிச் சுரங்கம் ஒன்றில் இடம்பெற்ற வெடிவிபத்தில் 362 தொழிலாளர்கள் கொல்லப்பட்டனர்.

✠1917-பின்லாந்து ரஷ்யாவிடம் இருந்து விடுதலையை அறிவித்தது.

✠1917-கனடாவின் நோவா ஸ்கோசியாவில் ஹலிஃபாக்ஸ் துறைமுகத்தில் ஆயுதக் களஞ்சியக் கப்பல் ஒன்று வேறொரு கப்பலுடன் மோதி வெடித்ததில் ஆயிரத்து 900 பேர் கொல்லப் பட்டு நகரத்தின் பெரும் பகுதி அழிந்தது.

✠1921-இங்கிலாந்துக்கும் அயர்லாந்துக்கும் இடையில் நட்புறவு ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

✠1922-ஐரிய சுதந்திர நாடு உருவானது.

✠1941-இரண்டாம் உலகப் போர்: ஐக்கிய இராச்சியம் பின்லாந்து மீது போரை அறிவித்தது.

✠1957-வங்கார்ட் விண்கலம் ஏவப்படுகையில் வெடித்ததை அடுத்து பூமியின் சுற்றுவட்டத்துக்கு ஐக்கிய அமெரிக்கா தனது முதலாவது செய்மதி அனுப்பும் திட்டத்தை நிறைவேற்றவில்லை.

✠1971-இந்தியா பங்களாதேஷை அங்கீகரித்ததைத் தொடர்ந்து பாகிஸ்தான் இந்தியாவுடனான அனைத்து இராஜதந்திர உறவுகளையும் துண்டித்தது.

✠1977-தென்னாபிரிக்கா பொப்பு தட்ஸ்வானாவுக்கு விடுதலை அளித்தாலும் எந்த நாடும் அதனை அங்கீகரிக்கவில்லை.

✠1992-அயோத்தியாவில் 16ஆம் நூற்றாண்டு பழைமைவாய்ந்த பாபர் மசூதி இந்துத் தீவிரவாதிகளால் இடித்து அழிக்கப்பட்டது.

✠1997-சைபீரியாவில் ரஷ்ய சரக்கு விமானம் ஒன்று குடிமனைத் தொடர் ஒன் றில் மோதியதில் 67 பேர் கொல் லப்பட்டனர்.

✠2005- சீனாவின் டொங்சூ என்ற இடத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பல கிராம மக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

✠2006-வெவ்வாய்க் கோளில் இருந்து மார்ஸ் குளோபல் சேர்வயர் அனுப்பிய படங்களில் இருந்து அங்கு நீர் திரவநிலையில் இருப்பதை உறுதிப்படுத்திய தாக நாசா அறிவித்தது.

**பிறப்பு**

✠1823-மாக்ஸ் முல்லர்.ஜெர்மனிய மொழியலாளர் (இ.1900)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

09ஆம் பக்கத் தொடர்ச்சி... பகுதி - B

☞ இப்பகுதி உயிரியல், இரசாயனவியல், பௌதீகவியல் என்னும் பிரிவுகளைக் கொண்டது. ஒவ்வொன்றில் இருந்தும் ஒவ்வொரு வினாவிதம் தெரிவு செய்து மூன்று வினாக்களுக்கு விடையளிக்க.

## உயிரியல்


5) உயிர் அங்கிகளினுள் நடைபெறும் அனுசேபச் செயற்பாட்டின் காரணமாக உருவாகும் கழிவுப்பொருட்களை அகற்றும் செயன்முறை கழிவகற்றல் எனப்படும். நைதரசன் கழிவுகளை அகற்றுவதில் பிரதான பங்களிப்பைச் செய்வதற்கு உதவுவது சிறுநீரகம் ஆகும்.




(i) படத்தில் காட்டப்பட்டுள்ள அமைப்பு சிறுநீரகத்தின் ஒரு பகுதியாகும் அதை இனங்கண்டு பெயரை எழுதுக.
(ii) அதன் பகுதிகளான A, B, C என்னும் பகுதிகளைப் பெயரிடுக.
(iii) B இலிருந்து C க்கு வடிகட்டப்படும் திரவத்தின் பெயரைக் கூறுக.
(iv) B இலிருந்து C க்கு வடிகட்டப்படாத பதார்த்தங்கள் இரண்டின் பெயர்களைக் கூறுக.
(v) A இல் அதிகளவில் காணப்படுவதும் E இல் குறைந்தளவு காணப்படுவதுமான இரண்டு பதார்த்தங்கள் எவை?
(vi) D இலிருந்து சிறுநீராக வெளியேறும் பதார்த்தத்தில் குளுக்கோஸ் காணப்படுவதை இனங்கண்டு கொள்ள செய்யும் பரிசோதனையைச் சுருக்கமாக எழுதுக.
(vii) ஒருவரின் சிறுநீரில் குளுக்கோஸ் காணப்பட்டால் அவருக்கு உள்ள நோய் நிலைமை யாது?
(viii) மனிதனின் உடலில் உள்ள 100ml குருதியில் 80mg- 90mg வரை குளுக்கோஸ் காணப்படும். குருதியில் 80mg ஐ விட குளுக்கோஸ் குறைந்தால் நடைபெறும் ஓர்சீர்த்திடநிலைச் செயற்பாட்டைச் சுருக்கமாக கூறுக.
(ix) சிறுநீரகக்கல் என்றால் என்ன? அவை எவ்வாறு சிறுநீரகத்தில் உருவாகின்றன?
(x) நைதரசன் கழிவுப் பொருட்களை அகற்றுவதைத் தவிர்த்த சிறுநீரகத்தின் வேறு தொழிலொன்றைக் கூறுக
(xi) சிறுநீரகத்துடன் உடலில் காணப்படும் வேறு இரு கழிவகங்களின் பெயர்களைக் கூறுக.
(xii) நீங்கள் கூறும் அவ்விரண்டு கழிவகங்களினாலும் வெளியேற்றப்படும் கழிவுகளைக் கூறுக.

6) A) புவியின் சிறிய பிரதேசத்தில் உயிர்க்கோளம் எல்லைப்படுத்தப்பட்டுள்ளது. உயிர்க்கோளத்தினுள் பல்வேறு ஒழுங்கமைப்பு மட்டங்கள் காணப்படுகின்றன.
(i) உயிர்க்கோளம் என்றால் என்ன?
(ii) இனம், குடித்தொகை என்னும் சொற்களை வரைவிலக்கணப் படுத்துக.
(iii) குடித்தொகையின் மீது செல்வாக்குச் செலுத்தும் இரண்டு உயிரற்ற காரணிகளைக் குறிப்பிடுக.
(iv) சூழல் தொகுதியின் நிலவுகையின் மீது செல்வாக்குச் செலுத்தும் இரண்டு காரணிகளைக் குறிப்பிடுக.
(v) சூழல் தொகுதியை விளக்கும் பிரமிட்டுகளில் சக்தி பிரமிட்டு ஒன்றாகும், ஏனைய இரண்டு பிரமிட்டு வகைகளைக் கூறுக.
(vi) சக்தி பிரமிட்டின் ஒரு மட்டத்தில் இருந்து அடுத்த மட்டத்திற்கு செல்லும் போது செலவாகும் சக்தியின் சதவீதம் எவ்வளவு?
(vii) இவ்வாறு சக்தி இழக்கப்படுவது எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகிறது?
(viii) வயல்களில் பீடைநாசினிகள் பயன்படுத்தப்படுகின்றன. அவற்றில் இருந்து பெறப்படும் அரிசியை மனிதன் உட்பட ஏனைய அங்கிகள் (கோழி, குருவிகள்) உணவாக எடுக்கின்றன. சோறை உணவாக எடுப்பவர்களைவிட கோழியை உணவாக எடுப்பவர்களின் உடலில் பார உலோகங்களின் செறிவு அதிகமாகும். இதனை விஞ்ஞான ரீதியில் விளக்குக.


B) கீழே பூரணப்படுத்தப்படாத நைதரசன் வட்டம் தரப்பட்டுள்ளது.




(i) படத்தில் AB என்னும் அம்புக்குறியினால் வளிமண்டலத்தில் உள்ள நைதரசன், நைத்திரேற்றாகி மண்ணை வந்தடைவதைக் காட்டுகின்றது. இச் செயன்முறை எவ்வாறு இயற்கையில் நிகழ்கிறது?
(ii) Y இனால் குறிப்பிடப்படுவது யாது?
(iii) CD அம்புக்குறியானது நைத்திரேற்று அயன் நைதரசன் வாயுவாக மாறுவதைக் காட்டுகின்றது. இது எவ்வாறு நடைபெறுகிறது என விளக்குக.
(iv) அவரைத்தாவரம் நைதரசன் வட்டத்தினுள் பங்களிப்பு செய்யும் முறையை விளக்குக.
(v) அங்கிகளின் உடலில் நைதரசன் அடங்கியுள்ள பதார்த்தங்கள் எவை?


## இரசாயனவியல்

7) சுண்ணாம்புக்கல், கைத்தொழில் துறையில் பயன்படுத்தப்படுவதைக் காட்டும் பாய்ச்சற் கோட்டுப் படம் கீழே தரப்பட்டுள்ளது.




பாய்ச்சற் கோட்டுப்படத்தைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.
(i) (அ) மேலே 1, 2, X என்னும் வெற்றிடங்களுக்குப் பொருத்தமான விடையை எழுதுக.
(ஆ) சுண்ணாம்புக்கல்லை சுடும்போது தோன்றிய விளைபொருளினுள் நீரைச் சேர்க்கும் போது நடைபெறும் தாக்கத்திற்குரிய சமப்படுத்தப்பட்ட இரசாயன சமன்பாட்டை எழுதுக.
(இ) சுண்ணாம்பு சூளையினுள் சுண்ணாம்பையும் விறகையும் ஒழுங்குபடுத்தவேண்டிய முறையை விளக்குக.
(ii) 500kg சுண்ணாம்பைச் சுடும்போது கிடைக்கும் சுட்டசுண்ணாம்பின் மூல எண்ணிக்கை எவ்வளவு?
(Ca = 40, C = 12, O = 16)
(iii) (அ) சுட்டசுண்ணாம்பு, வெளிற்றும் தூள் என்பவற்றின் பயன்பாடு ஒவ்வொன்று விதம் தருக.
(ஆ) உங்களுக்கு A, B என்னும் இரண்டுவகையான வெளிற்றும் தூள்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றில் அதிகளவு வெளிற்றும் இயல்புள்ள தூள் எது என எவ்வாறு கண்டறிவீர்.
(iv) சீமெந்து தயாரிப்பானது உருளும் சூளையினுள் (rotaly kiln) நடைபெறுகிறது. இவ்வுருளையில் இருந்து கிளிங்கர் முதலில் உற்பத்தி செய்யப்படுகின்றது.
(அ) கிளிங்கரின் பௌதீக இயல்பைக் கூறுக.
(ஆ) கிளிங்கரில் காணப்படும் சேர்வைகளினுள் கல்சியம் சிலிக்கேற்று சேர்வையும் ஒன்றாகும். அதனுடன் காணப்படும் மற்றைய சேர்வையைக் கூறுக.
(இ) சீமெந்துடன் ஜிப்சம் கலக்கப்படுவதற்கான காரணம் யாது?
(v) (அ) எக்கைத்தொழிலின் பக்க விளைபொருளாக ஜிப்சம் பெறப்படுகிறது?
(ஆ) சீமெந்து உற்பத்தியை விட ஜிப்சம் பயன்படுத்தப்படும் வேறு சந்தர்ப்பமொன்றைக் கூறுக.

8) தகனத்தின் போது வெளியேற்றப்படும் விளைபொருட்களை கண்டறிய நடாத்தப்பட்ட பரிசோதனை அமைப்பு கீழே தரப்பட்டுள்ளது.





(i) A, B, C உபகரணங்களின் பெயர்களை இனங்கண்டு எழுதுக.
(ii) உபகரணம் C யில் காணப்படும் பதார்த்தம் யாது?
(iii) ஐஸ்கட்டி, சுண்ணாம்பு நீர் என்பன இவ்வுபகரணத்தில் பயன்படுத்தப்பட்டதற்கான காரணம் யாது?
(iv) குப்பி விளக்கில் பயன்படுத்தப்பட்ட எரிபொருளின் இரசாயனக் குறியீடு $C_7H_{16}$ எனின் பூரண தகனத்தின் போது நடைபெறும் தாக்கத்திற்குறிய இரசாயன சமன்பாட்டை எழுதுக.
(v) பரிசோதனைக் குழாயின் வெளிச் செலுத்தப்பட்ட போக்குக் குழாயின் முனையில் காற்று உறிஞ்சி இணைக்கப்பட்டுள்ளதற்கான காரணம் யாது?
(vi) பூரண தகனத்திற்கும், குறை தகனத்திற்கும் இடையிலான வேறுபாடுகளைக் கூறுக.
(vii) குறைதகன சுவாலையை வரைந்து பெயரிடுக.
(viii) குப்பிவிளக்கு சுவாலையின் குறுக்காக கம்பிவலையைப் பிடித்தால் கிடைக்கும் அவதானத்தையும் அதற்கான காரணத்தையும் கூறுக.
(ix) குப்பிவிளக்கு சரிந்து ஏற்படும் தீயை அணைக்க பொருத்தமான தீயணைகருவியொன்றின் பெயரை கூறுக.
(x) அத்தீயணைக்கருவியில் காணப்படும் இரசாயனப் பொருட்களின் பெயரைக் கூறுக.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசிரியர் கைலாசபதியும் 19-ம் நூற்றாண்டு ஈழத்து தமிழ் இலக்கியமும்



தமிழியல் ஆய்வாளராகவும் புகழ் பெற்ற திறனாய்வாளராகவும் தன்னை நிலைநிறுத்திக் கொண்ட பேராசிரியர் கைலாபதி, ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே - சிறப்பாகப் பத்தொன் பதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கிய ஆய்விலே ஆர்வத்துடன் ஈடுபட்டுழைத்தமை பற்றிய எனது நோக் காக இச் சிறுகட்டுரை அமைகின்றது.

பல்கலைக்கழக மாணவனானகக் கைலாசபதி இருக்கும் பொழுதே பொது வான ஈழத்து இலக்கிய வரலாற்றிலே ஓரளவுக்கு கரிசனை உடையவராக விளங் கினார். இக்கரிசனைக்குக் காரணமாக அமைந்தவர்கள் பேராசிரியர் க. கணபதிப் பிள்ளையும் பேராசிரியர் சு.வித்தி யானந்தனுமே எனக் கருதலாம்.

தினகரன் பத்திரிகை ஆசிரியராகப் பணிபுரிந்த காலத்திலே இக்கரிசனை இன்னும் அதிகரிக்கும் சூழ்நிலை உரு வாகியது. சிறப்பாக ஈழத்து நவீன இலக்கிய ஆர்வமே மேலோங்கியது எனலாம்.

பல்கலைக்கழக விரிவுரையாளராகப் பணிபுரிந்த காலத்திலேயும் சங்க இலக் கியம், பக்திஇலக்கியம், திறனாய்வு முதலான துறைகளிலே சிறப்பார்வம் உடையராகத் திகழ்ந்தபோதும் ஈழத்து நவீன தமிழ் இலக்கியத்திலும் அதிக ஆர்வம் காட்டியே வந்தார். இந்த ஆர்வம், கொழும்புப் பல்கலைக்கழத்திலே அவர் பணியாற்றிய போது மேலும் முனைப்புப் பெற்றது.கொழும்புப் பல்கலைக்கழகத் தமிழ்ச்சிறப்பு மாணவர்களுக்கான பாட விதானத்திலே ஈழத்து தமிழ் இலக்கியம் என்ற பகுதியையும் இணைத்துக் கொண்டார். ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாறு தனிப்பாடமாக முதன் முதலிலே பேராசிரியர் கைலாசபதியினாலேயே அறிமுகப்படுத்தப்பட்டது என்பர்.

கைலாசபதி யாழ்ப்பாண வளாகத் தலைவராகவும் தமிழ்த்துறைப் பேரா சிரியராகவும் பணியாற்றிய காலத் திலே ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற் றைத் துலக்க வேண்டுமென்ற ஆர்வ மிக்கவராகவே விளங்கினார். ஈழத்து இலக்கிய வரலாற்றைத் துலக்கி நிலை நிறுத்தும் பணி யாழ்ப்பாண வளாகத் தின் கடமை என்று கருதினார். இலட் சியக் கனவுகளோடு தாம் உருவாக்கிய மனிதப் பண்பியற் பீடத்தின் துணை யோடு இதனைச் சாத்தியமாக்க முனைந் தார். தமிழ்,இந்துநாகரிகம், வரலாறு, மெய்யியல், சமூகவியல் முதலான துறைகளினூடு, தனித்தனியாகவும் ஒன்றி ணைந்தும் ஆய்வுகள் செய்து எமது இலக்கிய வரலாற்றைச் சரியாகவும் தெளிவாகவும் வெளிக்கொணர வேண் டும் என்ற உந்துதல் கைலாசபதியிடம் இருந்ததை அவரின் மாணவனாக இருந்த நான் நன்கு அறிவேன்.

ஈழத்து இலக்கிய வரலாற்றைக் குறிப் பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்து இலக்கிய வரலாற்றை ஆய்வு செய்யவேண்டுமென்ற எண்ணம் ப்ல காரணங்களாற் கைலாசபதியிடம் உரு வாகியது.ஈழத்து இலக்கிய வரலாற் றிலே சிறப்பாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டு பற்றிய ஆய்விலே தாம் ஈடுபட்டமைக்கான காரணத்தைக் கைலாசபதி பின்வருமாறு குறிப்பிடு கின்றார்.

" ஈழத்து நவீன தமிழ் இலக்கிய ஆய்வில் ஆர்வத்துடன் ஈடுபட்டு வந்தி ருக்கும் நான் அதன் ஊற்றுக்களையும் மூலங்களையும் தேடியபொழுது பின் னோக்கிச் செல்லவேண்டியிருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டிலே அரும்பிய சில செல்நெறிகளும் கருத் தோட்டங்களும் இருபதாம் நூற்றாண் டிலே மலர்ச்சி பெற்று மேலும் செழு மையடைவதைக் காண முடிந்தது" (முகவுரை -ஈழத்து இலக்கிய முன் னோடிகள்)

இதற்கமைய எண்ணப்பாங்குடன் பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றை ஆய்வு செய்யவும்- செய்விக்கவும் கூடிய சூழல் யாழ்ப்பாண வளாகத்திலே கைலாச பதிக்குக் கிடைத்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டு ஈழத்து இலக்கிய வரலாறு, செம்மை யாகச் சமூக, பொருளாதார,அரசியற் பின்னணியிலே ஆய்வு செய்யப்பட வில்லை என்ற "மனக்குறை" யும் கைலா சபதியிடம் காணப்பட்டது. சில நூல்க ளும் கட்டுரைகளும் வெளி வந்தபோ திலும் அவற்றிலே "போதாமை" இருப் பதை அவதானித்தார் என்பதை அவரது பின்வரும் கூற்றுப்புலப்படுத் தும்.

## இன்று பேராசிரியர் கைலாசபதியின் நினைவுதினம்

"விஞ்ஞானத்தைத் தமிழில் பெயர்த் ததிலும் அகராதிகளை அரும்பாடு பட்டுத் தயாரித்ததிலும் பத்தொன் பதாம் நூற்றாண்டு ஈழத்து தமிழகம் முன்னின்றது என்று பட்டியல் தயாரித் துப் பெருமைப்படுவதிலே பயனெது வும் இல்லை" (ஈ.இ.மு.23)

யாழ்ப்பாணக் கல்லூரியைச் சுவீக ரித்து யாழ்ப்பாண வளாகம் அமைக் கப்பட்ட பொழுது அக் கல்லூரியின் நூலகமும் சுவீகரிக்கப்பட்டது.அந்த நூலகத்திலே ஈழத்து இலக்கிய வரலா ற்று மூலங்களைக் கண்டறியக்கூடிய ஏடுகள், நூல்கள், ஆவணங்கள், கையெ ழுத்துப் பிரதிகள்,பத்திரிகைகள் முதலானவை(18,19ஆம் நூற்றாண் டிற்குரியவை) இருந்தன. அவற்றை முறை யாகப் பயன்படுத்த வேண்டுமென்று கைலாசபதி கருதினார்.

யாழ்ப்பாணத்திற்கு வளாகம் வந் ததும் யாழ்ப்பாணத்திலே இருந்த புலமையாளர்கள் , பண்டிதர்கள், எழுத் தாளர்கள்,புலவர்பரம்பரையினர் தம் வசம் இருந்த ஏடுகள்,நூல்கள், பத்திரி கைகள்,கையெழுத்துப் பிரதிகள், கடிதங் கள் முதலானவற்றை யாழ். வளாக நூலகத்திற்கு அன்பளிப்பாகவும் விலை யாகவும் கொடுத்தனர்.இவற்றைச் சேகரிப் பதிலும் ஒழுங்குபடுத்துவதிலும் அப் போது நூலகராகவிருந்த ஆ.சிவனேசச் செல்வன் கைலாசபதிக்கு வலக்கரமாக நின்று அர்ப்பணிப்புடன் பணியாற்றி யமையும் குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண வளாக நூலகம் பற்றிக் கைலாசபதி பின்வருமாறு கூறுகின் றார்.

" யாழ்ப்பாணத்திலே பல்கலைக்கழக வளாகம் ஆரம்பிக்கப்பட்ட கால முதல் அங்குள்ள நூலகத்திலே இலங்கைத் தமிழ் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரி கைகள்,ஏடுகள், இலங்கைத் தமிழ்ப் புல வர்களின் கடிதங்கள் முதலிய பல் வகைப்பட்ட ஆவணங்கள் சேகரிக்கப் பட்டு வருகின்றன. பத்தொன்பதாம் நூற்றாண்டு இலங்கைத் தமிழ் ஆய் வுக்கு வேண்டிய அடிப்படைச் சான்றா தாரங்கள் அங்கு கணிசமான அளவு இருக்கின்றன " (நுழைவாயில் நாவலர் நூற்றாண்டுமலர்)

இவற்றைக் கைலாசபதி நன்கு பயன்படுத்தியதோடு மற்றைய ஆய்வா ளர்களையும் பயன்படுத்தும் படி தூண்டினார்.யாழ்ப்பாணப் பல்க லைக் கழக நூலகத்தின் மீது இந்திய அமைதி காக்கும் படையினர் குண்டு வீசிய பொழுது இந்த ஆவணங்களின் பெரும் பகுதி அழிந்தொழிந்து போனமையும் குறிப்பிடவேண்டியதே.

மனிதப் பண்பியற் பீடப் பீடாதி பதியாகவும் வரலாற்றுப் பேராசிரிய ராகவும் பணியாற்றிய கலாநிதி கா. இந்திரபாலாவுடனான உறவும் தொடர் பும் ஈழத்து இலக்கிய வரலாற்றை மீட்டெடுக்க வேண்டுமென்ற கைலா சபதியின் எண்ணப்பாங்குக்கு வலுவூட்டு வதாக அமைந்ததெனலாம்.

பேராசிரியர் கா.சிவத்தம்பியின் வருகையோடு யாழ்ப்பாண வளாகத் தின் தமிழியல் ஆய்வுப் பரப்பு மேலும் விசாலிக்கத் தொடங்கியது. கைலா சபதியும் சிவத்தம்பியும் இணைந்து கருத்தரங்குகள் நடத்தியும் ஆய்வு மாணாக்கரை ஈழத்து இலக்கிய வரலாற் றாய்விலே ஊக்கப்படுத்தியும் வந்தனர். கைலாசபதியின் எண்ணங்கள் ஈடேறச் சிவத்தம்பி பெரிதும் உதவினார்.

யாழ்ப்பாணச் சமூகத்தை நன்கு விளங்கிக் கொண்டு தமது நோக்கு நிலையில் இருந்து வழுவாமல் ஈழத்து இலக்கிய வரலாற்றை மீட்டெடுக்கக் கைலாசபதி பெரிதும் விரும்பினார். அதன் விளைவாக முதுதத்துவ மாணிப்பட்ட ஆய்வினை மேற்கொள்ள வந்த அனைத்து ஆய்வு மாணவர்களுக்கும் ஈழத்து இலக் கியம் பற்றியே செய்யும் படி பணித் தார். இந்த வகையிலே மனோன்மணி சண்முகதாஸ், யோகேஸ்வரி கணேசலிங்கம், சித்திரலேகா மௌனகுரு, சி.வன்னிய குலம், துரை மனோகரன், சிவலிங்க ராஜா முதலானோர் கைலாசபதியின் நெறிப்படுத்தலில் ஈழத்து இலக்கியம் பற்றிய விடயங்களிலேயே தமது முது மாணிப்பட்ட ஆய்வினை மேற் கொண்டனர். இதுபற்றிக் கைலாசபதி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

" .... நாவலர், தாமோதரம் பிள்ளை, செந்திநாதையர், துரையப் பாபிள்ளை, விபுலானந்தர், சோமசுந்தரப் புலவர், சுவாமி ஞானப்பிரகாசர் முதலாய தமிழ்த் தொண்டர்கள் குறித் தும் தமிழ்ப் பத்திரிகைகள் குறித்தும் நமது பல்கலைக்கழகங்களில் முதுமாணிப்பட்டத்திற்கான ஆய்வுக் கட்டுரைகள் எழுதப்பட்டி ருக்கின் றன. குறிப்பிட்ட புலவர்கள் பற்றிய நுண்ணாய்வுகளாகவும் காலத்தின் விளக்கமாகவும் இவை அமைந்துள் ளமை கருதத்தக்கது" (நா.நூ.மலர் 1979)

முதுமாணிப்பட்ட ஆய்வு மாண வர்களுக்கு மாத்திரமன்றித் தமிழ்ச் சிறப்பு நிறைவாண்டு மாணவர்களுக் கும் ஈழத்து இலக்கியம் தொடர்பான ஆய்வேடுகளையே சமர்ப்பிக்க வேண்டு மென்று ஊக்கமளித்தார். பேராசிரியர் கைலாசபதியின் இக்கருத்தினைப் பேராசிரியர் சிவத்தம்பி சிறப்பாக முன்னெடுத்தார்.இன்றுவரை இம் மரபு தொடர்கின்றது. இம் மரபுக்குக் கால் கோள் இட்டவர் கைலாசபதியே.

1979ஆம் ஆண்டு வெளிவந்த நாவலர் நூற்றாண்டுவிழா மலரின் பதிப்பாசி ரியப் பணியினை ஏற்று, இதுவரை வெளிவந்த நாவலர் மலர்களிலும் பன் மடங்கு சிறப்பான மலரொன்றினை வெளி யிட்டார்.இம்மலர் பல்துறை நோக்கில் நாவலர் என்னும் பகுதியையும் வழிவழி நாவலர் என்னும் பகுதியையும் கொண்டு மிகச் சிறப்பாக வெளிவந்தது. இம்மலர் கைலாசபதியின் ஆளுமை வெளிப் பாட்டினையும் ஈழத்து இலக் கியத்தின் பால் அவர் கொண்டிருந்த ஈடுபாட்டி னையும் ஒருங்கே வெளிப்படுத்துகின் றது. 18,19ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் இலக்கிய ஆய்வின் தேவையையும் பயனையும் நன்கு உணர்ந்த கைலாச பதி நாவலர் ஆய்வு மலரிலே பின் வருமாறு கூறுகின்றார்.

" நாவலர் இயக்க வளர்ச்சியின் காரணமாகவும், இந்நாட்டின் பொது வான கலாசார எழுச்சியின் பெறு பேறாகவும் அண்மைக் காலத்தில் இலங்கைத் தமிழ் இலக்கியம் பலரது கவனத்தைக் கவர்ந்துள்ளது. படைப் பிலக்கியத் தேவைகளின் விளை வாகத் தோன்றிய தேசிய இலக்கிய இயக்கம், தொடக்கத்திலே சமகால இலக்கியங்களுக்கு முதன்மையளித்த தாயினும், தவிர்க்க இயலாதபடி விரை விலேயே இலங்கைத் தமிழ் இலக் கியப் பாரம்பரியம் முழுவதையும் தழுவித் தனதாக்கிக் கொள்ள முனை ந்தது. ஆற்றலும் அழகும் நிறைந்த பழைய படைப்புக்களிலிருந்து நவீன ஆக்கங்களுக்கு உயிர்ச் சத்துப் பெற வேண்டியதன் அவசியத்தை உணர்ந்தது.

இவ்வியக்கத்தின் விளைவு களில் ஒன்றாகவே நாவலர் ஆய்வுகள் சரித்திர நோக்கிலும் சமூகவியற் கண்ணோட்டத்திலும் நடைபெறலா யின. பதினெட்டாம் பத்தொன்பதாம் நூற்றாண்டுகளைச் சேர்ந்த தமிழி லக்கியம் துருவி ஆராயப்படும் நிலை தோன்றியது"

" சரித்திர நோக்கிலும் சமூகவியற் கண்ணோட்டத்திலும்" கைலாசபதி குறிப்பிடுவது மிகுந்த கவனத்திற் குரியது. நாவலர் ஆய்வுகள் மாத்திர மன்றி ஈழத்து இலக்கிய வரலாறும் மேற்காட்டிய வகையிலேயே மேற் கொள்ளப்படவேண்டும் என்ற கருத்து நிலையில் அவர் உறுதியாய் இருந்தார். நாவலர் ஆய்வுக்கு ஊடாகப் பத்தொன் பதாம் நூற்றாண்டின் இலக்கியச் செல்நெறியைச் சமூகவியற் கண்ணோட் டத்திலே ஆய்வு செய்து பல உண்மை களை வெளிக்கொணர்ந்தார்.

பேராசிரியர் கலாநிதி
**எஸ்.சிவலிங்கராஜா**
தலைவர்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

1974 -82 வரையான காலப் பகுதி யிலே கைலாசபதி எழுதிய கட்டுரை களிற் கணிசமானவை ஈழத்து இலக் கியம் தொடர்பானவையாகவே இருந்தன. தான் வரித்துக்கொண்ட அணுகுமுறை வழிவழுவாது சமூக, பொரு ளாதார, அரசியற் பகைப் புலத்திலே பத்தொன் பதாம் நூற்றாண்டு எழுத்துத் தமிழிலக் கியம் பற்றிய பல கட்டுரைகளை எழுதினார்.

அவற்றிலே சில தொகுக் கப்பட்டு ஈழத்து இலக்கிய முன்னோடிகள் என்ற நூலாக வெளிவந்துள்ளன. 19ஆம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் ஆளுமைகளினூடு எவ்வாறு இலக்கிய வரலாற் றை அணுகலாம், ஆராயலாம் என் பதற்கு மிகச் சிறந்த எடுத்துக்காட்டாக இந்நூல் விளங்குகின்றது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விக்கிலீக்ஸ் தகவலில் அமெரிக்காவின் பங்கு

### ஈரான் அதிகாரிகள் குற்றச்சாட்டு

(டெஹ்ரான்)

விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள தகவல்களின் மூலம் அமெரிக்கா தனது கருத்துக்களைத் தெரிவித்துள்ளது என ஈரான் அதிகாரிகள் குற்றம்சாட்டியுள்ளனர். ஈரானுக்கும், அரேபிய நாடுகளுக்கும் இடையே இருக்கும் நல்லுறவை சீர்குலைக்கும் விதத்தில் அமெரிக்கா விக்கிலீக்ஸ் மூலம் தகவல்களை பரப்பியுள்ளது என ஈரான் ஜனாதிபதி அலுவலக தலைமை அதிகாரி எஸ்பான்டியர் ரகீம் மாஸ்ஹறய் தெரிவித்துள்ளார்.

(ஸ்ரீ)

# பொலீவிய இராணுவ அதிகாரிகளுக்கு வெனிசுலா அரசாங்கம் இலஞ்சம்

## விக்கிலீக்ஸில் பரபரப்பு தகவல்

பொலீவிய இராணுவ அதிகாரிகளுக்கு வெனிசுலா அரசு இலஞ்சம் அளித்துள்ளது. பொலீவியா ஜனாதிபதியின் கட்டளைகளை நிறைவேற்ற வேண்டாம் என்பதற்காக இத்தொகை அளிக்கப்பட்டதாக அமெரிக்க தூதர் தகவல் அனுப்பியுள்ளார்.

2008ஆம் ஆண்டு பொலீவியாவுக்கான அமெரிக்க தூதர் பிலிப் கோல்ட் பெர்க் அமெரிக்க வெளியுறவுத்துறைக்கு அனுப்பிய தகவலில் இது இடம்பெற்றுள்ளது.

பொலீவியாவின் ஜனாதிபதியாக இருந்தவர் எவோ மொரேல் இவரது கட்டளைகளை ஏற்க வேண்டாம் என்பதற்காக இராணுவ உயர் அதிகாரிகளுக்கு வெனிசுலா பணம் அளித்துள்ளது.

2008ஆம் ஆண்டு பொலீவியாவின் இவோ மொரேலுக்கும் வெனிசுலாவின் ஜனாதிபதியாக தன்னை மகுடம் சூட்டிக் கொண்ட ஹியூகோ சாவேஸுக்கும் கடும் மோதல் உருவானது. அப்போது மொரேலின் கட்டளைகளை ஏற்க வேண்டாம் என்பதற்காக பொலீவியாவின் இராணுவ உயர் தலைவர்களுக்கு இலஞ்சம் அளிக்கப்பட்டது. இது சூழ்நிலை இராணுவத்தினரிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியதாகவும் அமெரிக்க தூதர் அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.

இதில் விரக்தியடைந்த மற்றும் இலாபமடைந்த இராணுவ அதிகாரிகளின் பெயர்களை தூதர் குறிப்பிடவில்லை இதனிடையே உளவுவேலைபார்த்ததாகக் குற்றம் சாட்டி அமெரிக்க தூதரை 2009ஆம் ஆண்டு அமெரிக்காவுக்கு திருப்பியனுப்பினார் மொரேல். இதனால் அமெரிக்கா, பொலீவியா இடையிலான ராஜீய உறவு சகய நிலைக்கு வரவில்லை. விக்கிலீக்ஸ் தகவல் குறித்து பொலீவியா கருத்து ஏதும் தெரிவிக்கவில்லை. இருப்பினும் இந்தத் தகவல் இலத்தீன் அமெரிக்க நாடுகளான வெனிசுலா, ஆர்ஜெண்டீனா பிரேஸில் ஆகியவற்றில் கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தும் என்று குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே விக்கிலீக்ஸில் இராணுவ இரகசியங்கள் வெளியானது வருத்தமளிப்பதாக அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஹிலாரி கிளின்டன் தெரிவித்தார். இந்த விடயத்தை உரிய கவனத்துடன் இராணுவம் கையாளவில்லை என்று தெரிகிறது. தூதரக அதிகாரிகள் பரிமாறிக்கொள்ளும் ஆவணங்கள்தான் அமெரிக்காவின் கொள்கை என்பது கிடையாது என்று பிபிசிக்கு அளித்த பேட்டியில் அவர் குறிப்பிட்டார். (ஸ்ரீ)

# பசுபிக் பெருங்கடலில் மிதக்கும் நகரங்கள்

## ஜப்பான் நிறுவனம் திட்டம்

(லண்டன்)

பசிபிக் பெருங்கடலில் சிறியளவிலான மிதக்கும் நகரங்களை அமைக்க ஜப்பானிய நிறுவனம் ஒன்று திட்டமிட்டுள்ளது. நகரங்களில் பெருகி வரும் தொழிற்சாலைகள், வாகனங்கள் உள்ளிட்டவைகளில் இருந்து வெளியேறும் புகைகளால் வளி மண்டலம் மாசடைவதுடன் சுற்றுச் சூழலும் பாதிக்கப் படுகிறது.

இதனால் நகரங்களில் வசிப்பவர்கள் விதவிதமான நோய்களால் பாதிக்கப்படுகின்றனர். இதை தவிர்த்து பசுமையான சூழ்நிலையோடு சுற்றுச் சூழலுக்கு கேடு விளைவிக்காத வகையில் பசுபிக் பெருங்கடலில் மிதக்கும் நகரங்களை அமைக்க ஜப்பானிய நிறுவனம் ஒன்று திட்டமிட்டுள்ளது.

பசுபிக் பெருங்கடலில் ஈக்வடோர் அருகே கடலிலிருந்து ஒரு கி.மீ.தூரத்தில் அமைக்கப்படும் இந் நகரங்களில் 10 முதல் 50 ஆயிரம் பேர் வரை வசிக்க முடியும். அந் நகரங்களை கரையுடன் இணைக்கும் வகையில் மிதக்கும் வீதிகளும் அமைக்கப்படும்

மேலும் பசுமையான செயற்கை காடுகள், விவசாய நிலங்களும் இந்த நகரங்களில் அமைக்கப்படும். ஏற்கனவே இத்தகைய மிதக்கும் நிலப்பரப்புகளை கடலில் உருவாக்கி ஜப்பானியர்கள் அதில் விவசாயம் செய்து வருகின்றனர்.

அதி நவீன ஜப்பானிய தொழில்நுட்பத்தால் உருவாக்கப்படும் இத்தகைய மிதக்கும் நகரங்களில் காபன் வெளியேறுவது 40 சதவீதம் அளவுக்கு கட்டுப்படுத்தப்படும். பசுமை தொழில்நுட்பம் இந்நகரத்தில் கையாளப்படுவதால் இந்நகரத்தில் சேரும் கழிவுப் பொருட்கள் மறுசுழற்சி செய்து வேறு பயன்பாடுகளுக்கு உபயோகிக்கப்படும்.

இந்த மிதக்கும் நகரங்களுக்கு இப்போது மக்களிடம் வரவேற்பு உள்ளதால் வருங் காலத்தில் இத்தகைய பசுமை நகரங்கள் பசுபிக் பெருங்கடலில் அதிகளவில் மிதக்க தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஸ்ரீ)



கிறிஸ்மஸ் விழாவை முன்னிட்டு இத்தாலியின் அல்ட்டோ அடிக் என்ற பகுதியைச் சேர்ந்த 94 வயதுடைய கிறிஸ்துமஸ் மரம் வத்திக்கானில் உள்ள சென்ட் பீற்றர் சதுக்கத்தில் வைக்கப்பட்டது.

# வயதை பார்த்து பானம் பரிந்துரை செய்யும் தானியங்கி இயந்திரம்

## ஜப்பானில் பெரும் வரவேற்பு

(டோக்கியோ)

ஜப்பானில் எதிரில் நிற்கும் வாடிக்கையாளர் ஆணா பெண்ணா என்று கண்டறிந்து பானங்களை பரிந்துரை செய்யும் தானியங்கி இயந்திரம் வாடிக்கையாளர் மத்தியில் அமோக வரவேற்பை பெற்றுள்ளது.

பானங்கள் வழங்கும் தானியங்கி இயந்திரங்களில் வாடிக்கையாளர்கள் பணத்தை செலுத்தி தங்களுக்கு தேவையான பானங்களை தெரிவு செய்யும் முறை தற்போது நடைமுறையில் உள்ளது. ஆனால் ஜப்பானில் வாடிக்கையாளர்களின் முகம் மற்றும் வயதை பார்த்து பானங்கள் வழங்கும் இயந்திரம் வாடிக்கையாளர் மத்தியில் பெரும் வர வேற்பை பெற்றுள்ளது.

இந்த இயந்திரத்தை ஜப்பானின் கிழக்கு மண்டல ரயில்வே தயாரித்துள்ளது. இது குறித்து ரயில்வே செய்தி தொடர்பாளர் கூறியதாவது. இயந்திரத்தில் பொருத்தப்பட்டுள்ள சென்சார்கள் எதிரில் நிற்கும் வாடிக்கையாளர் ஆணா அல்லது பெண்ணா என்று கண்டுபிடிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. தவிர ஆண் வாடிக்கையாளர் என்றால் காபி வேண்டுமா? பெண் வாடிக்கையாளர் என்றால் குளிர் பானம் வேண்டுமா? என்று கேட்கும். தவிர வாடிக்கையாளர்களின் வயதுக்கு தக்கவாறு பானங்களை பரிந்துரை செய்யும்.

உதாரணமாக 50 வயது மதிக்கத்தக்க வாடிக்கையாளர் இயந்திரத்தின் எதிரில் நின்றால் உங்களுக்கு கிரீன் டீ தரலாமா ?என்று கேட்கும். இதுதவிர தட்பவெப்ப சூழ் நிலைக்கு தக்கவாறு வெப்பமான அல்லது குளிர்ச்சியான பானங்களை இந்த தானியங்கி இயந்திரம் வழங்கும். மேலும் இயந்திரம் பரிந்துரை செய்யும் பானங்கள் வேண்டாம் என்றால் வாடிக்கையாளர்களே தங்களுக்கு விருப்பமான பானங்களை தெரிவு செய்து கொள்ளலாம்.

இந்த இயந்திரம் வாடிக்கையாளர் மத்தியில் அமோக வரவேற்பை பெற்றுள்ளது .மற்ற தானியங்கி பானங்கள் வழங்கும் இயந்திரத்தை விட இதில் மூன்று மடங்கு கூடுதல் விற்பனை நடக்கிறது. இவ்வாறு அவர் கூறினார். (ஸ்ரீ)






தென்கொரியாவின் தலைநகர் சியோலில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் அந்நாட்டு ஜனாதிபதி லீ மியங்-பக் (இடது)புதிதாக நியமிக்கப்பட்ட பாதுகாப்புத்துறை அமைச்சர் கிம் க்வான் -ஜின் க்கு பணி நியமனத்தை வழங்குவதை படத்தில் காணலாம்.

# ஐவரி கோஸ்ட்டின் ஜனாதிபதியாக லாரன்ட்பக்போ பதவியேற்பு

## ஐ.நா. உள்ளிட்ட பல்வேறு அமைப்புக்கள் ஆட்சேபம்

மேற்கு ஆபிரிக்க நாடான ஐவரி கோஸ்டின் புதிய ஜனாதிபதியாக லாரன்ட் பக்போ சனிக்கிழமை பதவியேற்றார். இவர் ஜனாதிபதியாக பதவியேற்றுள்ளமைக்கு ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட பல்வேறு அமைப்புகள் ஆட்சேபம் தெரிவித்துள்ளன.


முன்னாள் ஜனாதிபதியான லாரன்ட்டின் பதவிக்காலம் கடந்த 2005ஆம் ஆண்டுடன் நிறைவடைந்தது.

அதையடுத்து நாட்டில் குழப்பமான சூழ்நிலையே நீடித்தது. இந்நிலையில் ஐ.நா. மேற்பார்வையில் அங்கு தேர்தல் நடைபெற்றது. கடந்த ஞாயிற்றுக்கிழமை வெளியான தேர்தல் முடிவில் எதிர்க்கட்சித் தலைவர் அலசானே ஒட்டாரா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

ஆனால் லாரன்ட் மற்றும் அவரது ஆதரவாளர்கள் ஒட்டாராவின் வெற்றியைப் புறக்கணித்தனர். மேலும் நாட்டின் புதிய ஜனாதிபதியாக லாரன்ட் சனிக்கிழமை பதவியேற்றுக் கொண்டார். சொக்லேட்டில் பயன்படுத்தப்படும் கொக்கோ தயாரிப்பில் ஐவரி கோஸ்ட் உலகிலேயே முன்னிலை வகிப்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெமிக்கல் இன்ஜினியரிங் பயில்வதற்கு இந்தியாவில் வாய்ப்புக்கள்



இரசாயன இன்ஜினியரிங் என்பது இயல் அறிவியல் (வேதியியல்,இயற்பியல்) மற்றும் வாழ்வியல்(உயிரியல், நுண்ணுயிரியல், உயிர் வேதியியல்) தத்துவங்களுடன் கணித முறைகளைப் பயன்படுத்தி பயனற்ற மூலப்பொருட்கள் அல்லது வேதிப் பொருட்களை பயனுள்ள மற்றும் விலை மதிப்புள்ள பொருட்களாக மாற்றுவது தொடர்பாக படிக்கும் இன்ஜினியரிங் படிப்பாகும்.இத்துறை வல்லுநர்கள் இரசாயன இன்ஜினியர்கள் என்று அழைக்கப்படுவர்.

நானோ டெக்னோலஜி,பயோ மெடிக்கல் இன்ஜினியரிங் போன்ற தொழில் நுட்பங்கள்,புதிய பயனுள்ள பொருட்களை உருவாக்குதல், பயனுள்ள உத்திகளை கண்டறிதலில் இத்துறை முன்னோடியாக விளங்குகிறது. பெரிய அளவிலான வணிக உற்பத்தியில் வேதியியல் மற்றும் உயிரியல் மாற்றங்களை வடிவமைத்தல், முன்னேற்றுதல் மற்றும் நிர்வகித்தல் போன்றவற்றில் இந்த இரசாயன இன்ஜினியரிங் துறையானது முழுவதும் ஈடுபடுகிறது.


இத்துறையில் பணிபுரிபவர்கள் செயல்முறைசார் இன்ஜினியர்கள் என அழைக்கப்படுவார்கள். வணிகம் சார்ந்து ஒரு பொருளை உற்பத்தி செய்யும்போது, அதன் வேதிவினைகள் மட்டுமல்லாமல் உற்பத்திக்கு தேவையான ஆற்றல், மூலப் பொருட்களின் அளவு மற்றும் தன்மை , செலவுகள் எனபல்வேறு கூறுகளை ஆய்வு செய்ய வேண்டும். இவற்றைப் பற்றி முழுமையாக இந்த இன்ஜினியரிங் பிரிவில் படிக்கலாம்.

இரசாயன, இன்ஜினியரிங் துறையின் மூலம் கரிம மற்றும் கனிம வேதிப் பொருட்கள், பீங்கான் கற்கள் , எண்ணெய்கள், பெட்ரோகெமிக்கல், வேளாண்மையில்



பயன்படும் உரங்கள், பூச்சிகொல்லிகள், களைகளைஅழிக்கும்பொருட்கள், மீள்பொருட்கள்,வெடிமருந்துகள், சோப்புகள் மற்றும் சலவைத்தூள்கள், வாசனைத் திரவியங்கள் , மருந்துப் பொருட்கள், உணவில் சுவை கூட்டும் பொருட்கள், நிறமூட்டிகள் போன்றவை பல்வேறு நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படுகின்றன.

**பயிலும் நிறுவனங்கள்**




- அண்ணா பல்கலைக்கழகம், சென்னை (www.Annauniv.edu)
- ஐ.ஐ.டி., சென்னை (www.iitm.ac.in)
- ஐ.ஐ.டி, புதுடில்லி (www.iitd.ac.in)
- ஐ.ஐ.டி.காரக்பூர்(www.iitkgp.ac.in)
- என்.ஐ.டி.,திருச்சி(www.nitt.edu)
- சத்தியபாமா பல்கலைக்கழகம், சென்னை (www.sathyabamauniversity.ac.in)
- கோயம்புத்தூர் இன்ஸ்டிடியூட் ஒப் டெக்னோலஜி,கோவை (www.citindia.com)
- எஸ்.ஆர்.எம்.பல்கலைக்கழகம், சென்னை(www . srm univ.ac.in)
- கொங்கு இன்ஜினியரிங் கல்லூரி, ஈரோடு (www.kongu.ac.in)
- புனித ஜோசப் இன்ஜினியரிங் கல்லூரி, சென்னை(www.stjosephs.ac.in)

**வேலைவாய்ப்புகள்**

இத்துறையில் பட்டப்படிப்பை முடித்த மாணவர்களுக்கு இரசாயனத் தயாரிப்பு தொடர்பான தனியார் மற்றும் அரசு நிறுவனங்களில் வேலைவாய்ப்பு உள்ளது. இது தவிர அணுமின் நிலையம், உணவு உற்பத்திதொழிற்சாலைகள், உரம் உற்பத்தி தொழிற்சாலைகள், மருந்து தயாரிப்பு நிறுவனங்கள், பெற்றோலியம் தயாரிப்பு நிறுவனங்கள், பயோ டெக்னோலஜி தொடர்பான நிறுவனங்கள் போன்றவற்றில் பணியில் அமரலாம்.

கெமிக்கல்இன்ஜினியர்கள் ஆய்வுகள் , வடிவமைத்தல் , செயல்முறைகளைக் கட்டுப்படுத்துதல், உற்பத்தி,பொருளியல், நிர்வாகம் போன்ற பிரிவுகளில் பணியமர்த்தப்படுவார்கள்.

இப்படிப்பை முடித்தவர்களில் நான்கில் மூன்று பங்கு மாணவர்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் வேலை செய்கின்றனர்.



இத்துறையில் முதுநிலை பட்டப் படிப்பை முடித்தவர்களுக்கு வெளிநாடுகளில் உள்ள வேதிப் பொருட்கள் உற்பத்தி செய்யும் நிறுவனங்களில் வாய்ப்புகள் அதிகமாக உள்ளது.

## அறிவுக் கலசம்

வலம்புரி

ஆர்.யூ.பாலமுருகன்

# அரசியல் அறிவியல்

வரும் காலங்களில் உலக நிர்வாகத்தை சிறப்பாக மேற்கொள்ள மிகமுக்கிய தேவை அரசியல் அறிவியல்துறை. இளைஞர்ளுக்கு பொறியியல், மருத் துவத் துறைகளில் உள்ள எதிர்காலத்தை போலவே அரசியல் அறிவியல் துறையிலும் நல்ல எதிர்காலம் உள்ளது. இளம் அரசியல் அறிஞர்கள் அனைத்து நாட்டுக்கும் தற்போது முக்கிய தேவையாக இருக்கிறார்கள்.

ஒருவர் அடிப்படையில் இருந்து இந்த துறை படிப்புகளைத் தேர்தெடுத்து படித்தால் சிறந்த அரசியல் அறிஞராக வாய்ப்பு உள்ளது.

அரசியல் அறிவியல் சமூக அறிவியலின் ஒரு உட்பிரிவு. ஒவ்வொரு நாட்டிலும் அரசாங்கம் செயற்படும் விதம், அதன் சட்டதிட்டங்கள் என நாட்டின் முக்கியமான அனைத்து சட்டதிட்டங்கள் என நாட்டின் முக்கியமான அனைத்து துறைகளையும் நிர்வகிக்கும் துறையாக அரசியல் அறிவியல் விளங்குகிறது.

சர்வதேச உறவுகள், நவீன அரசியல் அமைப்புகள், வெளிநாட்டுக் கொள்கைகள், மேற்கத்திய மற்றும் வளரும் நாடுகளின் இராணுவக் கொள்கைகள், பொது நிர்வாகம், கூட்டாட்சி, அரசியல் பொருளாதாரம், அரசியல் சமூகவியல், அரசியல் உளவியல் போன்ற கல்விப் பிரிவுகளை அரசியல் அறிவியல் கொண்டு விளங்குகிறது.

**தகுதி மற்றும் படிப்புகள்**

க.பொ.த உயர்தரத்தில் எந்தப் பாடப் பிரிவில் பயின்றவர்களும் அரசியல் அறிவியல் படிப்புகளைத் தேர்ந்தெடுத்து படிக்க முடியும். டிப்ளோமா, பி.ஏ.எம்.ஏ.எம். பில். மற்றும் பி.எச்.டி.படிப்புகள் இந்தத் துறையில் காணப்படுகின்றன.

பொதுவாக இந்தியாவிலுள்ள எல்லாப் பல்கலைக்கழகங்களிலும் அரசியல் அறிவியல் துறை உள்ளது.

இதனால் தாங்கள் விரும்பும் கல்வி நிறுவனத்தை தேர்தெடுத்து படிக்க முடியும். இந்த படிப்புகளுக்கான கல்விக் கட்டணமும் மிகக் குறைவுதான்.

அரசியல் அறிவியலில் ஆர்வம் இருந்தால் மட்டுமே இந்த துறையில் ஜொலிக்க முடியும்.

பொதுவான பிரச்சினைகளை அலசும் திறமை, அர்ப்பணிப்பு, கடின உழைப்பு, நிர்வாகத் திறமை, தகவல் பரிமாற்றத் திறமை, தலைமைக் குணங்கள், முடிவெடுக்கும் திறன் போன்றவை இந்த துறை மாண வர்களுக்கு முக்கியத்தேவை.

**வேலைவாய்ப்புகள்**

சட்டம், சமூக நல்லுறவு, தொழிலாளர் நலன், அரசியல் அறிஞர், சமூக நிர்வாகம் போன்றவற்றில் அரசியல் அறிவியல் படித்தவர்களுக்கு பணிவாய்ப்புகள் காணப்படுகின்றன.

மேலும் இளம் அரசியல் அறிஞர்கள் ஒவ்வொரு நாட்டுக்கும் முக்கிய தேவையாக இருக்கிறார்கள்.

அதனால் இந்தத் துறையில் இளைஞர்களுக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்பதை மறுக்க முடியாது.

## பீர்பாலின் ஒரு கதை...

# பாராட்டாக மாறிய திட்டு!

அரண்மனைக்குச் சென்று அரசரிடம் தம் திறமைகளைக் காட்டிப் பரிசு பெற வேண்டும் என்று ஒருஜோதிடர் அரசரைக் காணவந்தார்.

அரசன் அக்பரும் தம் ஜாதகத்தை எடுத்து ஜோதிடரிடம் காட்டினார். அதைப் பார்த்த ஜோதிடர், இந்த ஜாதக அமைப்புப்படி, ஜாதகரின் உறவினர்கள், நண்பர்கள் எல்லோரும் இவருக்கு முன்பாக இறந்துபோய் விடுவார்கள் என்று கூறினார்.

அக்பருக்கு அளவு கடந்த கோபம் கொப்பளித்தது.

ஜோதிடரைத் திட்டி விரட்டிவிட்டார்.

ஜோதிடர் அதை எதிர்பாார்க்கவில்லை. அரசர் கை நிறையப் பரிசுகளை அள்ளித் தருவார் என எதிர்பார்த்தார். ஆனால் மாறாக அவமானம்தான் கிடைத்தது.

ஜோதிடருக்குப் பீர்பாலை நன்கு தெரியும். எனவே நடந்ததை அவரிடம் கூறலாம் என்று அவரைத் தேடிப் போனார்.

பீர்பாலுக்கும் ஜோதிடரைத் தெரியும்.அதைக் காட்டிலும் , அவர் சொல்லும் பலன் களும் பலிக்கும் என்பது தெரியும். ஜோதிடர், பீர்பாலிடம் நடந்ததைக் கூறி வருத்தமுற்றார்.

அதைக் கேட்ட பீர்பால், ' நீர் ஜோதிட விற்பன்னர் என்பதில் சந்தேகமில்லை. எனினும் பலன்கூறும் போது சொல்வதை சூழ்நிலை அறிந்து, நிலைமையையும், காலத்தையும் அனுசரித்துக் கூறவேண்டும் என்பது உங்களுக்குத் தெரியவில்லை. நீங்கள் நாளை தாடி,மீசை அணிந்து வேறு தோற்றத்தில் என்னோடு வாரும், நான் சொல்லிக்கொடுப்பதை அரசரிடம்கூறும்' என்று கூறினார் பீர்பால். மறுநாள் பீர்பாலோடு ஜோதிடரும் வேடமிட்டுக் கொண்டு சென்றார்.

அரசர் பீர்பாலிடம், "பீர்பால், இவர்யார்?" என்று கேட்டார்.

அதற்கு பீர்பால், " அரசே! இவர் வடநாட்டிலிருந்து வந்துள்ளார். ஜோதிடக் கலையை நன்கு கற்றுணர்ந்தவர். பெரும் மேதை என்பதால் அரசரிடம் அழைத்து வந்தேன்" என்றார் பீர்பால்.

"ஜோதிடர்கள் யாருமே சரியான பலனை சொல்வதில்லை.நேற்றுக்கூட ஒருவர் வந்தார். சரியாக சொல்லாததால் விரட்டிவிட்டேன்" என்றார் அரசர். "இவரிடம் உங்கள் ஜாதகத்தை



காட்டி பாருங்கள்' என்றார் பீர்பால். அக்பர் தம் ஜாதகத்தை ஜோதிடரிடம் காட்டினார். ஜாதகத்தை வாங்கிப் பார்த்த ஜோதிடர், "ஆகா! இதுவன்றோ ஜாதகம்! பிரமாதம். நீண்ட ஆயுளுடைய ஜாதகம் அரசே. இது மிக அற்புதமான ஜாதகம்.

இந்த ஜாதகருக்கு நோய் நொடிகளற்ற நீண்ட வாழ்வு உண்டு. இவருடைய உறவினர்கள், நண்பர்கள் போன்றோர் அனைவரும் இறந்த பின்னரும் கூட இவருடைய ஆயுள்நீண்டு, ஆரோக்கியத்தோடும் கீர்த்தியோடும் வாழ்வார்" என்றார் ஜோதிடர்.

அதைக்கேட்ட அக்பர் மகிழ்ச்சியடைந்தார். ஜோதிடருக்கு பல பரிசுகளும் கொடுத்து வழியனுப்பினார்.

சொல்லும் விதத்தில் சொன்னால் எவரையும் மகிழ்ச்சி அடையச் செய்யலாம் என்பதற்கு இது எடுத்துக்காட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா நிரந்தர இடம்பெற பிரான்ஸ் முழு ஆதரவு

## அந்நாட்டு ஜனாதிபதி தெரிவிப்பு

(பெங்களூர்)

ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் இந்தியா நிரந்தர இடம் பெற பிரான்ஸ் முழு ஆதாரவு தெரிவிப்பதாக அந்நாட்டு ஜனாதிபதி நிகோலஸ் சர்கோஸி தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் நான்கு நாட்கள் சுற்றுப் பயணம் மேற்கோண்டுள்ள பிரான்ஸ் ஜனாதிபதி சர்கோஸி நேற்று முன்தினம் காலை பெங்களூர் வந்தார். அவருடன் அவரது மனைவி கார்லா புரூனி மற்றும் அமைச்சர்கள் உள்ளிட்ட குழுவினர் உடன் வந்தனர். இந்திய விண்வெளி ஆய்வுக் கழக (இஸ்ரோ) வளாகத்தைச் சுற்றிப் பார்த்த பின்னர், இரு நாடுகளும் கூட்டாக செயல் படுத்த திட்டமிட்டுள்ள விண்வெளி திட்டங்கள் குறித்து விஞ்ஞானிகளுடன் ஆலோசனை நடத்தினர். பிற்பகல் 1.50 மணிக்கு ஆக்ரா புறப்பட்டுச் செல்வதற்கு முன்பாக செய்தியாளரிடம் பேசிய சர்கோஸி பிரான்ஸ் மற்றும் இந்தியா ஆகிய இரு நாடு களும் சிறந்த நட்பு நாடுகளாக உள்ளன. மும்பை தீவிரவாத தாக்குதல் சம்பவத்தை வன்மையாகக் கண்டிக்கிறேன். இந்தியா வின் மீது நடந்த தாக்குதல் ஜனநாய கத்தின் மீதான தாக்குதலாகும்.எனவே எல்லா ஜனநாயக நாடு களும் இந்தியா வின் பக்கம் இருக்கிறது. பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ் தானில் இருந்து தொடுக்கப்படும் தீவிரவாத தாக்குதல்கள், உலகின் ஸ்திரத் தன்மையை அச்சுறுத்தி வருகின்றன. தலிபான்களுக்கு எதிரான போரிலிருந்து பின்வாங்கும் பேச்சுக்கே இடமில்லை. தலிபான்கள் மீண்டும் தலையெடுக்க விடக்கூடாது. ஆப்கானிஸ்தானில் உள்நாட்டு சண்டை அதன் உச்சத்தை அடைந்தால், அதனால் யாருக்கும் பலனேதுமில்லை. இதில் வென்றே தீர வேண்டும்.

பிரேசில், ஜெர்மனி, ஜப்பான், சில ஆபிரிக்க மற்றும் அரேபிய நாடுகளுடன் இந்தியாவும் ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் இடம்பெற வேண்டும். இதற்கு பிரான்ஸ் ஆதரவளிக்கும்.

நாட்டின் வளர்ச்சி மற்றும் வறுமை ஒழிப்பு ஆகியவற்றின் மூலம் அமைதியை நிலை நாட்ட பிரதமர் மன்மோகன் சிங் ஆர்வமாக இருக்கிறார். அமைதி மற்றும் ஸ்திரத் தன்மையில் சிங்கின் கருத்து சரியானதாக இருக்கிறது. இந்தியாவின் வளர்ச்சி மகத்தானது. உலக அளவில் இந்தியாவின் குரல் ஓங்கி ஒலிக்க வேண்டும். உலகின் பிரபல நாணயங்களின் வரிசையில் இந்தி யாவின் நாணயமும் இடம் பெறும் என்ற நம்பிக்கையுள்ளது. இந்தியாவின் நட்புநாடாக பிரான்ஸ் உள்ளது. சுற்றுச்சூழலை மாசுபடுத்தாத வகையில் அணுமின்சாரம் தயாரிக்கும் இந்தியாவின் முயற்சிக்கு பிரான்ஸ் ஆதரவளிக்கும். இந்தியாவின் அணுமின்சாரத் திட்டங்களை பிரான்ஸ் ஆதரிக்கும் என்றார்.

முன்னதாக தனி விமானத்தில் எச் ஏ எல் விமான நிலையம் வந்த சர்கோஸிக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. (ஸ்ரீ-2)

# ரயில் தண்டவாளத்தில் குண்டு வெடிப்பு

(கராச்சி)

தண்டவாளத்தில் குண்டு வெடித்ததில் இந்தியா - பாக். இடையே இயங்கும்தார் எக்ஸ்பிரஸ் ரயில் தடம் புரண்டது. 50 இந்தியர்கள் உட்பட 155 பயணிகளுடன் கராச்சியில் இருந்து ராஜஸ்தான் புறப்பட்ட ரயில், தபோஜி என்ற இடத்தை வந்தடைந்தவுடன் தண்டவாளத்தில் வெடிகுண்டுகள் வெடித்தது.

இதில் ரயில் பெட்டிகள் தடம்புரண்டன.

இந்த விபத்தில் உயிர்ச்சேதம் ஏதும் ஏற்படவில்லை.

சம்பவம் குறித்து பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (ஸ்ரீ)

# பூலோக அழகியாக இந்தியாவை சேர்ந்த நிகோலே தெரிவு




(புதுடில்லி)

வியட்நாவில் நடந்த கோலாகல நிகழ்ச்சியில், இந்திய அழகி நிகோலே பாரியாபூலோக அழகியாக வெற்றி பெற்றார்.

வியட்நாம் நாட்டில் உள்ள வின் பெர்ல் தீவில் நேற்றுமுன்தினம் மாலை 2010 ஆம் ஆண்டுக்கான பூலோக அழகிப் போட்டி நடந்தது. இதில் உலகம் முழுவதும் இருந்து வந்த அழகிகள் கலந்து கொண்டனர்.

இந்தப் போட்டியில் பூலோக அழகியாக பெங்களூரைச் சேர்ந்த 20 வயது அழகி நிகோலே பாரியா வெற்றி பெற்றார். அவர் அறிவுப்போட்டியிலும் வெற்றிபெற்றார்.

அவருக்கு கிரீடம் சூட்டப்பட்டது. அப்போது அங்கு கூடியிருந்த திரளான ரசிகர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தார்கள்.

முன்னதாக நடந்த அறிவுப்போட்டியில், நடுவர்கள் கேட்ட கேள்விகளுக்கு சளைக்காமல் நிகோலே பாரியா பதில்களை அளித்தார்.

எந்தப் போட்டியிலும் வெற்றி -தோல்வி பற்றி சிந்திக்கக்கூடாது சிறப்பாகச் செய்து முடிக்கவேண்டும் என்றஆர்வத்துடன் செயல்படுவதே வெற்றிக்கு வழிகாட்டும்'' என்று அவர் பதில் அளித்தார்.

மற்றொரு கேள்விக்கு நிகோலே பதில் அளிக்கையில், "வியட்னாமில் இருப்பதை நான் பெருமையாகக் கொள்கிறேன். வியட்நாம் மிகவும் அழகான நாடு. இங்கு மகிழ்ச்சியாக இருக்கிறேன்" என்றும் அவர் கூறினார். (ஸ்ரீ-2)

# பாரதச் செய்திகள்

## மகனின் திருமணம் நடக்க வேண்டி நாக்கை துண்டித்து தாய் காணிக்கை

உத்தரப் பிரதேச மாநிலம் லக்னோ அருகே உள்ள பாப்கானா என்ற கிராமத்தைச் சேர்ந்த சாதானா தேவியின் (வயது-55) மகனுக்கு நீண்ட நாட்களாக திருமணம் நடக்கவில்லை.

இதனால் அந்தப் பெண், தனது மகனுக்கு உடனே திருமணம் நடக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டு, சவுக் பகுதியில் உள்ள அம்மன் கோவிலுக்குச் சென்றார்.

அங்கு சாமி சிலை முன் நின்றுகொண்டு, கத்தியால் தனது நாக்கை திடீர் என்று அறுத்தார். இதனால் அவரது வாயில் இருந்து இரத்தம் கொட்டியது.

உடனே அவர் துண்டிக்கப்பட்ட நாக்கை, சாமி சிலையின் முன்வைத்து வேண்டுதலை நடத்தினார்.

இதுபற்றி அறிந்த கோவில் நிர்வாகத்தினர் விரைந்து சென்று, அந்தப் பெண்ணை ஆஸ்பத்திரியில் சேர்த்தனர். அங்கு அவருக்கு தீவிர கிசிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. (ஸ்ரீ-2)




நான்கு நாட்கள் பயணமாக இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள பிரான்ஸ் ஜனாதிபதி சர்கோஸி, அவரது மனைவி கர்லா புரூனி இருவரும் பெங்களூரில் இந்திய விண்வெளி மையம் சார்பில் நடக்கும் செயற்கைக் கோள் கண்காட்சியைப் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

# கின்னஸ் சாதனைக்காக ஓவியம் வரையும் பெண்




(புதுச்சேரி)

கின்னஸ் சாதனைக்காக விதை களைக் கொண்டு ஓவியம் வரையும் முயற் சியில் புதுச்சேரியைச் சேர்ந்த சி.விஜய லட்சுமி ஈடுபட்டுள்ளார். விதைகளால் உருவாக்கப்படும் உலகின் மிகப்பெரிய ஓவியத்தை அவர் உருவாக்கி வருகிறார்.

இதுவரை யாரும் விதைகளால் மிகப் பெரிய ஓவியத்தை வரையவில்லை. இவர் 16 சதுர மீற்றர் அளவிலான பெரிய வரைதாளில் இந்த ஓவியத்தை வரைந்து வருகிறார்.

இந்த ஓவியம் இரத்ததானம் செய்வதை வலியுறுத்துவதாக அமைந்துள்ளது. இதை சனிக்கிழமை உருவாக்கினார். இதைத்தொடர்ந்து இரண்டாவது ஓவியமாக பீன்ஸ் விதைகளால் மிகப் பெரிய ஓவியத்தை வரைய உள்ளார்.

இது 72 சதுர மீற்றர் கொண்டதாக இருக்கும். இந்த பீன்ஸ் விதை ஓவியத்தில் புத்தகத்தை வரைந்து அதில் ஒரே குறிக்கோள் அனைவருக்கும் கல்வி எனும் வாசகத்தை ஆங்கிலத்தில் குறிப்பிட்டு எழுதி ஓவியமாகப் படைக்க உள்ளார்.

ஒயில் பெயின்டிங், அக்ரலிக் பெயின்டிங், மெட்டாலிக் பெயின்டிங், வோட்டர் கலர் பெயின்டிங், கிளாஸ் பெயின்டிங், மியூரல் பெயின்டிங் போன்ற வண்ணம் தீட்டும் வகையில் 60 வகை யான ஓவியங்களைத் தீட்டி வருகிறார். இவர் பல்வேறு போட்டிகளிலும் கலந்துகொண்டு பல பரிசுகளையும் பெற்றுள்ளார். கோலம், ரங்கோலி கலையிலும் தேர்ச்சி பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# இங்கிலாந்தில் மனைவியை கொன்ற இந்தியருக்கு ஆயுள் தண்டனை

(லண்டன்)

இங்கிலாந்து தலைநகர் லண்டனில் வசிக்கும் ஹர்பிரீத் அலாக் வயது (28) என்பவர் இந்திய வம்சாவளியைச் சேர்ந்தவர். இவரது மனைவி யின் பெயர் கீதா அலாக் வயது (28). இவர்களுக்கு 2 குழந்தைகள் உள்ளனர்.

கீதா கிரீன்போர்டில் உள்ள ஒரு தனியார் வானொலி நிலையத்தில் வரவேற்பாளராக பணிபுரிந்தார். இந்த நிலையில் ஹர்பிரீத் வேறு பெண்ணுடன் தொடர்பு வைத்திருந்தார். எனவே கீதாவிடம் விவாகரத்து கேட்டு வந்தார். ஆனால் அவர் மறுத்து விட்டார்.

இதனால் ஆத்திரம் அடைந்த ஹர்பிரீத் ஷெர்சிங் வயது(19) ஜஸ்வந்த் சிங் தில்லான் வயது (25) ஆகிய கூலிப்படையினர் மூலம் வீதியில் நடந்து சென்ற கீதாவை கொலை செய்தார். இதுதொடர்பாக கைது செய்யப்பட்ட ஹர்பிரீத் மீது பழைய பெய்லி நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதி குற்றவாளி ஹர்பிரீத்துக்கு ஆயுள் தண்டனை விதித்து தீர்ப்பளித்தார். கூலிப்படையைச் சேர்ந்த 2 பேருக்கு 22 வருடம் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> செய்த வினையும், செய்கின்ற தீவினையும் ஓர் எதிரொலியைக் காட்டாமல் மறையமாட்டா.
> – கண்ணதாசன்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# தொழிற் தர்மம் மீறப்பட்டால் இயற்கை சீற்றமுறும்

எவரொருவர் அறத்தை மறக்கின்றாரோ அவர் அழிவைச் சந்திப்பது உறுதி என்பது இந்தியப் பிரதமராக இருந்த நேருவின் கருத்து.

இந்த உலகம் எத்தனையோ வல்லாதிக்கம் மிக்கவர்களை கண்டுள்ளது. அவர்களின் இறுதிக்கால முடிவுகளையும் உலக வரலாறு தனது மடியில் சுமந்து வைத்துள்ளது.

எனவே எவரும் கர்வம் கொள்ளாமல் செயற்படுவது தர்மத்தின் அடிப்படையாகும்.

சண்டித்தனங்கள், அடாவடித்தனங்கள், மோசடிகள் யாவும் உலக தர்மத்திற்கு குந்தகமானவை.

அதிலும் பொறுப்பான பதவிகளில் இருப்பவர்கள் அறம் காப்பதில் முதன்மையானவர்களாக இருக்க வேண்டும்.

இல்லையேல் அதனால் அப்பாவி மக்கள் பாதிக்கப்படுவர். இந்நிலை மோசமடையும் போது இயற்கை தனது சீற்றத்தைக் காண்பிக்கும்.

இவையெல்லாம் வெறும் தத்துவங்கள் என்று யாரும் எண்ணிவிடாதீர்கள்.

சுனாமி, நிஷா உள்ளிட்ட இயற்கை அனர்த்தங்கள் கடந்த ஆறு ஆண்டுகளுக்குள் நடந்து முடிந்தவை. நாம் நேரில் அனுபவித்தவை. இதை விட உலகில் நடந்தேறும் பூகம்பங்கள், வெள்ளப்பெருக்குகள், எரிமலைத் தாண்டவங்கள் என்பனவும் இயற்கையின் சீற்றங்களே.

எனவே இயற்கை சீற்றம் கொள்ளும் அளவிற்கு நாம் அதர்மவாதிகளாகி விட்டோம் என்பதே உண்மை.

எனவே தர்மம் பாதுகாக்கப்படவேண்டும். தர்மம் என்றால் என்ன என்று தெரியாத பலர் உயர் பதவிகளிலும் மக்கள் பிரதிநிதிகளாகவும் இருக்கின்றனர். தர்மம் பல்வகைப்படும். அரசுக்கான தர்மம், அரசியல்வாதிக்கான தர்மம், நீதி உரைப்போருக்கான தர்மம், மருத்துவ தர்மம், ஆசிரியத்துவ தர்மம், நிர்வாகத் தர்மம் என்ற வாறான பல்வகைமைக்குள் அவரவர் தத்தமது தொழில் தர்மத்தைப் பேணவேண்டும்.

நீதிதவறாத ஆட்சிபுரிவது அரச தர்மம். மக்களை ஏமாற்றாது நேர்மையுடன் பணிபுரிவது அரசியல்வாதிகளுக்கான தர்மம். இப்படியே ஒவ்வொன்றையும் விபரிக்கலாம்.

எனினும் தொழிற் தர்மம் இல்லாமல் போய்விட்ட பரிதாபத்தை இயற்கையின் சீற்றம் உறுதிசெய்கின்றது. எனவே இந்த அவசநிலையிலிருந்து விடுபடாதவரை மண்ணில் நல்லவண்ணம் வாழ்வது முடியாத காரியம். பணம் உழைப்பதையே கண்ணும் கருத்துமாகக் கொண்டு மருத்துவர்கள் செயற்பட்டால் ஏழைகள் பாடு என்னாவது!

பொருளாதாரம் தேவை என்பதற்காக மருத்துவப் பணிக்கு விலை பேசுவதே முழு நோக்கமாயின் ஏழைகள் வீட்டில் அழுகுரல் கேட்கும். அந்தக்கண்ணீர் சாதாரணமானதன்று. அதுவே இயற்கையைச் சீற்ற முறவைக்கும்.

எனவே எதிலும் தர்மம் தேவை. அதிலும் குறிப்பாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் மத்தியில் பணிபுரிவோர் இதில் மிகவும் விழிப்பாக இருக்க வேண்டும்.

# இராமாவில் முகாம் மக்களுக்கு இந்து அமைப்புக்களின் ஒன்றியம் உதவி

(யாழ்ப்பாணம்)

இராமாவில் முகாமில் உள்ள மக்களுக்கு இந்து அமைப்புக்களின் ஒன்றியத்தினால் போசாக்கு உணவுகள் மற்றும் பாய், படுக்கை விரிப்புக்கள் வழங்கப்பட்டன.

நேற்று முன்தினம் இராமாவில் முகாமுக்கு சென்ற இந்து அமைப்புக்களின் ஒன்றியப் பிரதிநிதிகள் குழு தென்மராட்சி பிரதேச செயலர் திருமதி சாந்தசீலன் முன்னிலையில் மேற்படி உதவிப் பொருட்களை வழங்கினர். தற்போது மழை நீடித்து வரும் நிலையில் இராமாவில் முகாமில் உள்ள மக்களுக்கு மண்ணெண்ணெய்யும் வழங்குவதற்கும் இந்து அமைப்புக்களின் ஒன்றியம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதேவேளை இங்கு நுளம்புத் தொல்லை அதிகரித்திருப்பதால் நுளம்பு வலையை வழங்குவதற்கு அரசசார்பற்ற நிறுவனங்கள் உதவ வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். (ந-5)

# பெற்றோலியக் கூட்டுத்தாபன ஊழியர்கள் சு.க. அலுவலகத்தில் அரசியல் பணி

## நாடாளுமன்றத்தில் விஜித ஹேரத்

(கொழும்பு)

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊழியர்கள் பலர் அனைத்துக் கொடுப்பனவுகள் மற்றும் வாகனங்கள் சகிதம் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் அரசியல் வேலைகளுக்காக அனுப்பப்பட்டுள்ளதாக நாடாளுமன்றத்தில் தெரிவிக்கப்பட்டது.

ஜனநாயக தேசிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற பெற்றோலிய வளத்துறை அமைச்சு தொடர்பான விவாதத்தின்போது இதனைத் தெரிவித்திருந்தார்.

இவர்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சம்பளப் பட்டியலில் உள்ளனர். ஆனால் அவர்கள் சு.க. தலைமை அலுவலகத்திற்கு அரசியல் வேலைகளுக்காக விடுவிக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு தனியாக வாகனங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. இவர்கள் ஐக்கிய தேசியக் கட்சியின் 2002 -2004 ஆண்டு ஆட்சியின் போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கே திருப்பி அழைக்கப்பட்டனர். ஆனால் ஐக்கிய மக்கள் சுதந்திரக்கட்சி ஆட்சிப்பீடம் ஏறிய பின் அவர்கள் மீண்டும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைமை அலுவலகத்தில் சம்பளத்துடன் இணைத்துக் கொள்ளப்பட்டனர். அவர்களுக்கு அண்மையில் பதவி உயர்வுகளும் வழங்கப்பட்டன என அவர் மேலும் தெரிவித்தார்.

விஜித ஹேரத் எம்.பி. இவ்வாறு கூறும் போது பெற்றோலிய வளத்துறை அமைச்சர் சுசில் பிரேம ஜெயந்தவும் அங்கிருந்தார். ஆனால் அவர் விஜித ஹேரத் எம்.பியின் கூற்றுக்கு பதில் எதுவும் கூறவில்லை. (ந-5)

# ஆர்ப்பாட்டத்தில் ஜயலத் கலந்து கொண்டாரா? தவறான தகவல் வழங்கிய தமிழ்ப் பெண்மணி

(கொழும்பு)

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ லண்டனுக்கு விஜயம் செய்திருந்த போது ஹீத்துரு விமான நிலையத்தில் தமிழ் மக்களால் நடத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன கலந்துகொண்டதாக லண்டனில் வாழ்கின்ற தமிழ் பெண் ஊடகவியலாளர் ஒருவரே தெரிவித்ததாக கொழும்பு வட்டாரங்களில் இருந்து தெரியவருகின்றது.

பிரித்தானியாவுக்கான இலங்கைத் தூதரகத்தில் கடந்த 02 ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவால் நடத்தப்பட்ட அவசரக் கூட்டத்தில் தமிழின் முன்னணி எழுத்தாளர் எனவும் பெண்ணியவாதி எனவும் தன்னைத்தானே கூறிக் கொள்ளும் இப் பெண்மணியும் விசேட அழைப்பின் பேரில் கலந்துகொண்டுள்ளார்.

படைத்துறை அமைச்சின் அழைப்பின் பேரில் அடிக்கடி கொழும்பு சென்று வருகின்ற இப் பெண்மணி அரசாங்கத்திற்கு தகவல் வழங்குபவராக செயல்பட்டுவருகின்றாரா என்பது குறித்து கொழும்பு அரசியல் வட்டாரங்களில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ லண்டனுக்கு விஜயம் செய்திருந்த போது தமிழ் மக்களால் நடத்தப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் எதிலும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன கலந்து கொள்ளாத நிலையில் அவர் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டதாக இப் பெண்மணி தகவல் வழங்கியதின் பின்னணி குறித்து பலத்த சந்தேகங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ லண்டனுக்கு விஜயம் செய்தபோது ஜயலத் ஜெயவர்த்தன லண்டனில் தங்கியிருக்கவில்லை என்பதை அவரது கடவுச்சீட்டு மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளது. அதே வேளை ஐக்கியதேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜெயவர்த்தன பிரித்தானியாவுக்கு அடிக் கடி விஜயம் செய்வதும் பிரித்தானியாவில் இடம்பெறுகின்ற கருத்தரங்குகள் மற்றும் ஆய்வரங்கங்களில் பங்குபற்றுபவர் என்பதும் புலம் பெயர்ந்த தமிழ் மக்களின் ஊடகங்களில் கருத்துத் தெரிவிப்பவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ந-5)

# ஒளிவிழா

(யாழ்ப்பாணம்)

நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தியாலயத்தின் வருடாந்த ஒளிவிழா நிகழ்வு நாளை மறுதினம் முற்பகல் 10.30 மணிக்கு வித்தியாலய மண்டபத்தில் அதிபர் ச.சத்தியவரதன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக நெடுந்தீவு பங்குத்தந்தை வணபிதா அ. அமலராஜ் அடிகள், சிறப்பு விருந்தினராக தீவக கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் நா.அம்பிகைபாகன் ஆகியோர் கலந்துகொள்வுள்ளனர். (ந-7)

✦ ✦ ✦

(யாழ்ப்பாணம்)

மிருசுவில் றோமன் கத்தோலிக்க தமிழ்க்கலவன் பாடசாலையின் ஒளி விழா நிகழ்வு எதிர்வரும் 9 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் கிறிஸ்தவ மாணவர் மன்றத் தலைவி டோ.மரியகொறற்றி தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மிருசுவில் பங்குத்தந்தை ம.பத்திநாதர் அடிகள் கலந்துகொள்வுள்ளனர். (ந-7)

# வெள்ள அபாயத்தையடுத்து 166 பேர் இடப் பெயர்வு

(பூநகரி)

பூநகரிப்பகுதியிலுள்ள மூன்று கிராம சேவையாளர் பிரிவுகளில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து நேற்று பகல் 12 மணி வரை செட்டியகுறிச்சி கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த 44 குடும்பத்தைச் சேர்ந்த 166 பேர் கீரிவிநாயகர் ஆலய மண்டபத்திற்கு இடம் பெயர்ந்துள்ளனர்.

தொடர்ந்து மக்கள் பொருட்களுடன் வந்த வண்ணம் உள்ளனர். முதலில் வந்து சேர்ந்த 44 குடும்பத்தவருக்கும் செட்டிக்குறிச்சி கிராம சேவை அலுவலர் செல்வி நா.தமிழினியின் ஒழுங்குபடுத்தலில் எம்.எஸ்.எவ். நிறுவனத்தால் சகலருக்கும் தறப்பாள், படுக்கை விரிப்புகள், நீர்க்கான், சவர்க்கார வகைகள் ஆகியவை நேற்று வழங்கப்பட்டன. (ஸ்ரீ-3-84)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



இளைஞர்களே! உங்களிடம் இப்போது நல்ல கனவுகள், நல்ல சிந்தனைகள் உருவாகட்டும். நீங்கள் நல்லவர்கள். பெருந்தன்மையுடையவர்கள். ஆன்மாவை உலக வழிகளில் திருப்பி உலக நிலைக்குத் தாழ்த்துவதைத் தவிர்த்து, மானிடத்தை ஆன்மீக, தெய்வ நிலைக்கு உயர்த்தி, அன்றாடம் ஒரு சிறிதாவது இப்பரந்த உலகு எல்லையற்ற எழிலுடன் இலங்குவதைக்காண முயலுங்கள். அமைதியும் தூய்மையும் கொண்ட ஆன்மீகத்தில் இரவும் பகலும் அமிழ்ந்து வாழ முயலுங்கள். எது பயனற்ற மாயா ஜாலமோ அதன் நிழல் கூட உங்கள் மீது பட வேண்டாம். உங்கள் காலின் கட்டை விரல் கூட அதன்மீது படிய வேண்டாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுநீரகம் செயலிழந்தவர்களுக்காக செயற்கை சிறுநீரகம் கண்டுபிடிப்பு

(புதுடில்லி)

நீரிழிவு, உயர் இரத்த அழுத்தம் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் சிறுநீரகங்கள் பாதிக்கப்படும் ஆபத்து அதிகம். இத்தகைய சமயங்களில் டயாலிசிஸ் செய்யப்படுகிறது.

நோயாளிகளின் உடல் பாதிப்பு மற்றும் தேவைக்கேற்ப வாரத்தில் 2 அல்லது 3 முறை டயாலிசிஸ் செய்ய வேண்டும்.

இது தொடர் செயற்பாடு. இந்த அவதியில் இருந்து விடுபட சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்யப்படுகிறது.

தானம் கொடுப்பவரின் சிறுநீரகம் நோயாளிக்கு பொருந்துமா என்று பரிசோதித்த பின் இந்த ஒப்பரேஷன் மேற்கொள்ளப்படும்.

இதுபோன்ற பிரச்சினைக்கு இப்போது தீர்வு காணப்பட்டுள்ளது. உலகிலேயே முதல் முறையாக செயற்கை சிறுநீரகம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

இந்த அரிய சாதனையை அமெரிக்க வாழ் இந்தியர் நிகழ்த்தியுள்ளார். இது டயாலிசிஸ் நோயாளிகளுக்கு ஒரு வரப்பிரசாதம்.

அமெரிக்க வாழ் இந்தியரான டாக்டர் சுவோராய் தலைமையில் கலிபோர்னியா பல்கலைக்கழக ஆராய்ச்சி மருத்துவர்கள் மேற்கொண்ட கடுமையான ஆய்வில்தான் செயற்கை சிறுநீரகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கோப்பி கோப்பையை விட சிறிய அளவில் உள்ள இந்த செயற்கை கிட்னி இரத்த சுத்திகரிப்பு உயர் இரத்த அழுத்தத்தை கட்டுப்படுத்துவது உள்ளிட்ட சிறுநீரகம் செய்ய வேண்டிய அனைத்து பணிகளையும் செய்யும். விலங்குகள் மற்றும் மனிதர்களிடம் முதல் கட்ட பரிசோதனை வெற்றிகரமாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

இறுதிக் கட்ட பரி சோதனைகளுக்கு பின்னர் விரைவாக இதை நடைமுறைக்கு கொண்டு வருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இது குறித்து டாக்டர் சுவோராய் கூறுகையில்,

சிறுநீரக பாதிப்பால் அவதிப்படும் நோயாளிகளின் எண்ணிக்கை உலகம் முழுவதும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. அவர்களை கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் வெளிப்பாடுதான் செயற்கை சிறு நீரகம் என்றார்.

உலகிலேயே முதன் முறையாக அறிமுகப்படுத்தப்படவுள்ள அற்புத கண்டுபிடிப்பு இது. நடைமுறைக்கு வந்தால் சிறுநீரக பாதிப்பால் அவதிப்படும் நோயாளிகளுக்கு ஒரு வரப்பிரசாதமாக விளங்கும் என்பதில் ஐயமில்லை.

விரைவில் நடைமுறைக்கு வரும் என்ற எதிர்பார்ப்பு அனைவருக்கும் உள்ளது. டாக்டர் சுவோராய்க்கு எங்களின் மனமார்ந்த பாராட்டுகள் என்று இந்திய சிறுநீரக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

# மட்டக்களப்பில் மேலும் இரண்டு அதிரடிப்படை முகாம்கள் அகற்றம்

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் மேலும் இரண்டு அதிரடிப்படை முகாம்கள் அகற்றப்பட்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வவுணதீவு மற்றும் ஊத்துமடு பிர தேசங்களில் அமைந்திருந்த விசேட அதிரடிப்படை முகாம்களே இவ்வாறு அகற்றப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

1986ஆம் ஆண்டு முதல் வவுணதீவு பிரதேசத்தில் அமைக்கப்பட்டிருந்த இராணுவ முகாம் 1980களின் பிற்பகுதியில் அமுலில் இருந்த யுத்த நிறுத்த காலத்தில் வாபஸ் பெறப்பட்டிருந்தது. அதன் பின் 1990 களில் போர் ஆரம்பம் தொடக்கம் அங்கு விசேட அதிரடிப் படையினர் நிலை நிறுத்தப்பட்டிருந்தனர்.

இவ்வாறான நிலையில் தற்போது வவுணதீவு விசேட அதிரடிப்படை முகாம் அவ்விடத்திலிருந்து அகற்றப்பட்டு புதுமண்டபத்தடி முகாமுக்கு மாற்றப்படுகின்றது.

இதற்கிடையே ஊத்துமடு பிரதேச இராணுவ முகாம் முற்றாக அகற்றப்பட்டு அங்கிருந்தும் விசேட அதிரடிப்படையினர் வேறு பிரதேசங்களுக்கு வெளியேறிச் செல்கின்றனர். இந்த முகாம் 2007ஆம் ஆண்டில் கிழக்கு மாகாணத்தின் படுவான் கரைப் பிரதேசம் புலிகளிடமிருந்து முற்றாக விடுவிக்கப்பட்ட நிலையில் அமைக் கப்பட்டிருந்தது.

கிழக்கு மாகாணத்தில் நிலை கொண்டிருக்கும் விசேட அதிரடிப்படையினரை வேறு மாவட்டங்களில் புது முகாம்கள் அமைத்து பரவலாக்கும் பாதுகாப்பு அமைச்சின் திட்டத்துக்கேற்பவே மட்டக்களப்பில் அமைந் திருக்கும் விசேட அதிரடிப்படை முகாம்கள் அகற்றப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)

# கடுமையான நெருக்கடிக்கிடையில் போராடும் விக்கிலீக்ஸ் இணையம்

(கொழும்பு)

உலகம் முழுவதும் உள்ள பல்வேறு நாடுகளை பற்றிய இரகசியங்களையும் அந்த நாட்டு தலைவர்களை பற்றிய இரகசியங்களையும் அமெரிக்க தூதரகங்கள் திரட்டி அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தன. இந்த இரகசியங்களையும் விக்கிலீக்ஸ் இணையத்தளம் வெளியிட்டு உலகத்தையே அதிர்ச்சியில் ஆழ்த்தியது.

இதனால் கோபம் அடைந்த அமெரிக்க அரசாங்கம் இந்த இணைத்தள நிறுவநர் மீது கிரிமினல் சட்டத்தின்படியும் உளவு தடுப்பு சட்டத்தின் கீழும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தீர்மானித்துள்ளது.

இந்த நிலையில் தலைமறைவாக இருக்கும் அவரை கைது செய்வதற்கு சர்வதேச பொலிஸ் உதவியை சுவீடன் நாடு நாடி உள்ளது. அவரை கைது செய்வதற்காக சர்வதேச பொலிஸார் பிடியாணை பிறப்பித்தனர். சர்வதேச பொலிஸ் உலக நாடுகளை எச்சரித்துள்ளது.

இந்நிலையில் இணையத்தள சேவை வழங்கும் அமேசன் விக்கிலீக்ஸுடனான தனது ஒப்பந்தத்தை இரத்து செய்துவிட்டது.

விக்கிலீக்ஸ் இணையத்தளம் முடக்கப்பட்டது. இது குறித்து விக்கிலீக்ஸ் டு விட்டரில் வெளியிடப்பட்ட செய்தியில் இணைத் தளத்தை முடக்கினாலும் எங்கள் நிலையில் உறுதியாக இருக்கிறோம்.

நாங்கள் உண்மையை மட்டுமே வெளியிட்டோம். இதனால் யாருக்கும் பயப்படப் போவதில்லை. இந்த சேவையை மேலும் தொடர உள்ளோம் என்று தெரிவித்திருந்தது.

மேலும் இந்த சேவை தொடர நன்கொடைகள் வேண்டுகிறோம் என்றும் அறிவித்திருந்தனர்.

தற்போது நன்கொடைகளைப் பெற விக்கிலீக்ஸ் பயன்படுத்திவந்த கணக்கை பேபால் இரத்து செய்துவிட்டது. இதனால் விக்கிலீக்ஸ் தனது பெரும் வருவாய் ஆதாரத்தை இழந்துள்ளது.

இணையத்தளத்தை தக்கவைக்க விக்கிலீக்ஸ் போராடி வருகிறது. இந்த நிலையில் பேபாலின் இந்த அறிவிப்பு வெளியாகி யுள்ளது.

அமெரிக்காவின் நெருக்கடி காரணமாக தங்களது கணக்கை பேபால் தடை செய்துள்ளதாக டுவிட்டரில் விக்கிலீக்ஸும் உறுதிப்படுத்தியுள்ளது. ஆனாலும் தொடர்ந்து சேவையை தொடர முயற்சித்துவருகிறது. (ஸ்ரீ-2)

# தொற்றுநோய்களை கட்டுப்படுத்த சுகாதார அமைச்சு துரித நடவடிக்கை

(கொழும்பு)

டெங்கு நுளம்பு பரவும் வகையில் சுற்றாடலை சுத்தப்படுத்தாமல் இருந்த அரசு நிறுவனங்களின் தலைவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச் சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுக்கும் அதிகாரிகளுக்கே இந்த அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறான அரச நிறுவனங்களின் பட்டியலை ஜனாதிபதிக்கு கையளிக்கவுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்த வருடத்திற்கான நான்காவது டெங்கு ஒழிப்பு வாரம் கடந்த முதலாம் திகதி முதல் 7ஆம் திகதிவரை நடைமுறையில் உள்ளது. இதன் போது கடந்த நாட்களில் அரச நிறுவனங்கள் மற்றும் பாடசாலைகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது 90 சத வீதமான இடங்கள் நுளம்பு பரவுவதற்கான முறையில் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை வெள்ளம் ஏற்பட்ட பிரதேசங்களில் தொற்று நோய்கள் பரவாமல் தடுப்பதற்கு துரித நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருவதாகவும் சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதன் அடிப்படையில் குறித்த பிரதேசங்களுக்கு சென்றுள்ள பொது சுகாதார பரிசோதகர்களின் ஊடாக இதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுத்துச் செல்வதாக அகில இலங்கை பொது சுகாதார பரிசோதகர் சங்கத் தலைவர் உப்புல் ரோகண தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# நாட்டில் நிலவும் மோசமான காலநிலை புத்தாண்டு வரையில் தொடரும்

## வளிமண்டல திணைக்களம் அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் நிலவி வரும் மோசமான கால நிலை எதிர்வரும் புத்தாண்டு வரையில் தொடரும் என வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

நாட்டின் அநேக பகுதிகளில் குறிப்பாக மாலை வேளையில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன் கடந்த வாரத்தில் ஏற்பட்ட கடும் மழை வெள்ளம் காரணமாக குறைந்தபட்சம் ஐம்பதாயிரம் பேர் இருப்பிடங்களை இழந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கு- கிழக்கு பருவப் பெயர்ச்சி மழை ஆரம்பிக்கும் வரையில் இந்த இடியுடன் கூடிய மழை தொடரும் எனவும் வடக்கு-கிழக்கு மற்றும் ஊவா மாகாணங்களில் இந்த வாரம் முழுவதும் மழையுடன் கூடிய கால நிலை நிலவும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தியாவின் மேற்குப் பகுதியில் ஏற்பட்டுள்ள தாழமுக்க நிலைமையினால் இவ்வாறு மழை பெய்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.


யாழ்ப்பாணக்குடாநாடு, மத்திய மலைநாடு, தென்மாகாணம் ஆகிய பிரதேசங்களில் அதிகளவு மழை வெள்ளத்தினால் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன. (ஸ்ரீ-2)





வடமாகாண கல்வித்திணைக்களத்தின் அனுசரணையுடன் இசுறுபாய கல்வியமைச்சு இணைந்து நடத்திய தரம் 6 தொடக்கம் 11வரையான வகுப்புக்களில் கல்விகற்பிக்கும் ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், விஞ்ஞான உதவிக்கல்விப்பணிப்பாளர் ஆகியோருக்கான விஞ்ஞான பாட செய்முறை நேற்று யாழ்.மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இச்செய்முறையை இசுறுபாய கல்வி அமைச்சின் விஞ்ஞான பாட கல்விப் பணிப்பாளர் எம்.வி. விபுலசேன விளக்குவதையும் செய்முறையில் ஈடுபடுபவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:- என். குமார்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பீற்றர்சன் இரட்டைச்சதம்; இங்கிலாந்து ஆதிக்கம்

(அடிலெய்ட்)

கெவின் பீற்றர்சன் இரட்டைச்சதம் விளாச இங்கிலாந்து அணி நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் 04 விக்கெட்டுக்களையிழந்து 551 ஓட்டங்களை எடுத்தது.

அவுஸ்திரேலிய- இங்கிலாந்து அணிகள் மோதும் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆஷஸ் டெஸ்ட் தொடர் அவுஸ்திரேலியாவில் நடைபெற்று வருகிறது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத் தொடரின் முதலாவது டெஸ்ட் சமநிலையில் முடிபடைந்த நிலையில் இரண்டாவது டெஸ்ட் போட்டி கடந்த மூன்றாம் திகதி அடிலெய்ட் ஓவலில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 245 ஓட்டங்களை எடுத்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் அதன் முதலாவது இன்னிங்ஸில் இரண்டு விக்கெட்டுக்களையிழந்து 317 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் மூன்றாம் நாளான நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணி 351 ஓட்டங்களை எடுத்து மூன்றாவது விக்கெட்டையிழந்தது.

இதில் குக் 269 பந்துகளில் (18 பவுண்டரிகள் உட்பட) 148 ஓட்டங்களை எடுத்து ஹரிஸின் பந்துவீச்சில் ஆட்டமிழந்தார்.

அடுத்துக் களமிறங்கிய கொலின் வூட் நிதானமாகத் துடுப்பெடுத்தாட மறுமுனையில் கெவின் பீற்றர்சன் 158 பந்துகளில் தனது 17 ஆவது டெஸ்ட் சதத்தைப் பூர்த்தி செய்தார்.

இந்த ஜோடியின் சிறப்பான இணைப்பாட்டம் கைகொடுக்க இங்கிலாந்து அணி 400 ஓட்டங்களைக் கடந்தது.

இதில் கொலின் வூட் 70 பந்துகளில் (05 பவுண்டரிகள் உட்பட) 42 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த பெல் சிறப்பான ஆட்டத்தை வழங்கி நம்பிக்கையளிக்க இங்கிலாந்து அணி 500 ஓட்டங்களை எட்டியது.

இதில் கெவின் பீற்றர்சன் 283 பந்துகளில் தனது இரண்டாவது டெஸ்ட் இரட்டைச் சதத்தைப் பெற்று அசத்தினார்.

இந்நிலையில் இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 04 விக்கெட்டுக்களையிழந்து 551 ஓட்டங்களை எடுத்தபோது மழையின் குறுக்கீட்டால் நேற்றைய மூன்றாம் நாளாட்டம் நிறுத்தப்பட்டது.

இதில் கெவின் பீற்றர்சன் 213 ஓட்டங்களுடனும், பெல் 41 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் களத்திலுள்ளனர்.

பந்துவீச்சில் ஹரிஸ் இரண்டு விக்கெட்டுக்களையும், பொல்லிங்கர், வோட்ஷன் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் இங்கிலாந்து அணி முதலாவது இன்னிங்ஸில் 306 ஓட்டங்கள் வித்தியாசத்தில் முன்னிலையிலுள்ள நிலையில் நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும்.

# மூன்றாவது டெஸ்ட் போட்டியும் வெற்றி தோல்வியின்றி முடிபு

## ஐ.சி.சி. தரப்படுத்தலில் இலங்கை பின்னடைவு

(பல்லேகல)

இலங்கை- மேற்கிந்தியத் தீவுகள் அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியும் வெற்றிதோல்வியின்றி முடிபடைய தொடர் சமநிலையானது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி மூன்று டெஸ்ட், ஐந்து ஒருநாள் போட்டிகள், ஒரு இருபது- 20 போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றது.



இதில் முதலிரண்டு டெஸ்ட் போட்டிகளும் வெற்றிதோல்வியின்றி முடிபடைந்த நிலையில் மூன்றாவது மற்றும் கடைசி டெஸ்ட் போட்டி கடந்த முதலாம் திகதி பல்லேகலயில் ஆரம்பமானது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணித்தலைவர் சங்கக்கார களத்தடுப்பைத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியத்தீவுகள் அணி நேற்று முன்தினம் நான்காம் நாள் ஆட்டநேர முடிபில் 08 விக்கெட்டுக்களையிழந்து 303 ஓட்டங்களை எடுத்தது.

இந்நிலையில் ஐந்தாவது மற்றும் கடைசி நாளான நேற்று மழை காரணமாக ஆட்டம் ஆரம்பமாவதில் தாமதமானது.

எனவே நேற்றுப் பிற்பகல் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிபடைந்ததாக அறிவிக்கப்பட்டது.

இப் போட்டி ஆரம்பமானதிலிருந்து சீரற்ற காலநிலை காரணமாக ஒரு இன்னிங்ஸ் மட்டுமே ஆடப்பட்டது.

ஈ.ஆர்.ஐ. கிண்ணத்துக்கான இத் தொடரின் மூன்றாவது டெஸ்ட் போட்டியும் வெற்றிதோல்வியின்றி முடிபடைந்த நிலையில் தொடர் சமநிலையானது.

இதனால் சர்வதேசக் கிரிக்கெட் சபையின் சிறந்த அணிகளுக்கான டெஸ்ட் தரவரிசையில் இலங்கை அணி மூன்றாமிடத்திலிருந்து ஐந்தாமிடத்துக்கு பின் தள்ளப்பட்டுள்ளது.

இவ்விரு அணிகளுக்குமிடையிலான முதலாவது ஒருநாள் போட்டி எதிர்வரும் 09 ஆம் திகதி நடைபெறுகின்றது.

# ஐ.பி.எல். கிரிக்கெட் தொடர்; கொச்சி அணிக்கு அனுமதி

(மும்பை)

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் தொடரில் விளையாட கொச்சி அணிக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஐ.பி.எல். இருபது-20 கிரிக்கெட் தொடர் 2008 ஆம் ஆண்டு அறிமுகமானது. இதில் 08 அணிகள் பங்கேற்றன.

கடந்த ஆண்டு மார்ச் மாதம் நடந்த ஐ.பி.எல். அணிகள் ஏலத்தில் புதிதாக புனே, கொச்சி அணிகள் சேர்க்கப்பட்டன. இதில் புனே அணி இந்திய ரூபாயில் ஆயிரத்து 702 கோடிக்கும், கொச்சி அணி ஆயிரத்து 533 கோடிக்கும் ஏலத்தில் எடுக்கப்பட்டன.

கொச்சி அணிப் பங்குதாரர்கள் இடையே

[illegible]

# சூதாட்ட வீரர்கள் மீது வழக்குத் தொடர்வது உறுதி

## ஐ.சி.சி. அறிவிப்பு

(லண்டன்)

பாகிஸ்தான் வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளது. இவர்கள் மீது வழக்குத் தொடர்வது உறுதி என ஐ.சி.சி. தலைமை அதிகாரி ஹரூண் லாட்கட் தெரிவித்துள்ளார்.

லோட்ஸ் டெஸ்டில் பாகிஸ்தானின் சல்மான் பட், முகமட் ஆசிப், முகமட் ஆமீர் ஆகிய மூன்று வீரர்கள் ஸ்பாட் பிக்ஸிங்கில் ஈடுபட்டது அம்பலமானது. இதையடுத்து இவர்களை சர்வதேச கிரிக்கெட் சபை (ஐ.சி.சி) தற்காலிகமாகத் தடை செய்தது. இதை எதிர்த்து இவர்கள்செய்த மேல் முறையீட்டு மனு மீதான தீர்ப்பு வரும் ஜனவரி மாதம் வெளியாகும் எனத் தெரிகிறது.

இந்நிலையில் சூதாட்டம் குறித்து ஐ.சி.சி. தலைமை அதிகாரி ஹரூண் லாட்கட் கூறுகையில்,

பாகிஸ்தான் வீரர்கள் சூதாட்டத்தில் ஈடுபட்டதற்கு போதுமான ஆதாரங்கள் உள்ளன. இவைகளை கடினமான முயற்சிக்குப்பின் சேகரித்துள்ளோம். இந்த வீரர்கள் மீது வழக்குத் தொடர்வது உறுதி. முடிவில் குற்றம் நிரூபிக்கப்படும் பட்சத்தில் தகுந்த தண்டனை வழங்கப்படும்.

பொதுவாக நாங்கள் எல்லோரையும் சமமாகவே நடத்த விரும்புகிறோம். அதே நேரம் இது போன்ற விடயங்களில் யாருக்கும் கருணை காட்டமாட்டோம் என்றார்.

**வக்கீல் கண்டனம்**

லாட்கட்டின் இந்தக் கருத்துக்கு சல்மான் பட்டின் வக்கீல் கண்டனம் தெரிவித்துள்ளார். இது குறித்து காலித் ரஞ்ஜா கூறுகையில், லார்கட்டின் கருத்து வீரர்களின் அப்பீல் குறித்து விசாரிக்கும் அமைப்பை மிரட்டுவது போல உள்ளது என்றார்.

# முரளிதரனுக்கு ஓய்வு



(கொழும்பு)

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதலிரண்டு ஒருநாள் போட்டிகளிலிருந்து இலங்கை சுழற்பந்துவீச்சாளர் முத்தையா முரளிதரனுக்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள மேற்கிந்தியத் தீவுகள் அணி ஐந்து போட் டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்குபற்றுகிறது.

முதலிரண்டு போட்டிகள் எதிர்வரும் 09,11 ஆம் திகதிகளில் அம்பாந்தோட்டையில் நடக் கிறது. இதில் பங்கேற்கும் 16 பேர் கொண்ட வீரர்களை இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்தது. இதில் அனுபவ சுழல் பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரனுக்கு ஓய்வு அளிக்கப்பட்டுள்ளது. இவருக்குப் பதிலாக அஜந்த மெண்டிஸ், ஹேரத் உள்ளிட்ட சுழற்பந்துவீச்சாளருக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இவர்களைத் தவிர தினேஸ் சாண்டிமல், தம்மிக்கா பிரசாத், திலான் சமரவீரா உள்ளிட்டோரும் தேர்வு செய்யப்பட்டுள்ளனர்.

**இலங்கை அணி:** சங்கக்கார (அணித்தலைவர்), மகேல ஜெயவர்த்தனா, டில்சான், உப்புல் தரங்க, மத்யூஸ், சமரவீர, கப்புக் கெதர, ரான்டிவ், அஜந்த மெண்டிஸ், ஹேரத், லசித் மலிங்க, [illegible] பெர்னான்டோ, சாமர சில்வா, ஜீவன் மெண்டிஸ்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாதிகளை மட்டுமே...

ஒக்ஸ்போர்ட் யூனியனில் உரையாற்றவென ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பிரிட்டன் சென்றிருந்தபோது புலம்பெயர் தமிழ்க் குழுக்களின் எதிர்ப்பலைகள் காரணமாக அவர் நிகழ்த்த விருந்தஉரை யூனியன் ஏற்பாட்டாளர்களால் இரத்துச் செய்யப்பட்டது.அதன்பின்னர்லண்டன் ரைம்ஸ்அவருடன்மேற்கொண்ட நேர்காணலின் போதே அவர்மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

எதிரெதிர் தாக்குதலின்போது ஒன்று அல்லது இரண்டு பொதுமக்கள் தாக்குதலில் சிக்கியிருக்கக்கூடும். என்பதை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி இது குறித்து தாம் கவனம் செலுத்வோம் என்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான யுத்தத்தில்இராணுவ வெற்றி கண்டு 18 மாதங்களின் பின்னர் யுத்தக் குற்றச்சாட்டுகள் மீதான விசாரணைகளை மேற்கொள்ளத்தவறியமைக்காகஇலங்கைகுற்றச்சாட்டுக்கு உள்ளாகியுள்ளது.

இலங்கை இராணுவம் இறுதிக் கட்ட யுத்தத்தின்போது மேற்கொண்ட சிவில் தாக்குதல்களால் சுமார் 20 ஆயிரம் பொதுமக்கள் கொல்லப்பட்டதாக ரைம்ஸ் இவ்வருடம் தகவல் வெளியிட்டிருந்தது.இது தொடர்பில் கேட்கப்பட்டபோது வெறுமையான புன்னகையுடன் நிதானமாக மறுத்தார் ஜனாதிபதி.

அனேகமாக பொது மக்கள் புலிகளாலேயே கொல்லப்பட்டனர்.அவர்களை புலிகள் மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தினர்.அரச கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு அவர்கள் தப்பி வர முயற்சித்தபோது புலிகள் அவர்களை கொலை செய்தார்கள்.

எந்த நாடும் செய்ய இயலாத சாதனையாக நாம் பயங்கரவாதத்தில் இருந்து மீண்டுள்ளோம்.இப்போது நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டியுள்ளது என்றார்.

சீனா அம்பாந்தோட்டை துறைமுகத்தை கட்டியுள்ளது தொடர்பில் கேட்கப்பட்டபோது, அதனால் இப்போதோ எதிர்காலத்திலோ இலங்கையின் எந்தத் துறைமுகமும் சீனாவின் கடற்படைத்தளமாக இருக்காது.

வீடியோக் காட்சிகள் தொடர்பான முழு விடயத்தையும் நான் நிராகரிக்கிறேன். இது போன்றதொரு வீடியோ முன்னர் ஒளிபரப்பாகியுள்ளது. எல்லாம் போலியானவை என்று கூறினார்.

இலங்கை அரசாங்கத்திற்கு எதிரான இரு முக்கிய குற்றச்சாட்டுக்கள் உள்ளன.முன்னாள் நண்பன் இந்நாள் எதிரி.மற்றும் முன்னாள் எதிரி பின்னாள் நண்பன் என்பவைகளே அவையாகும்.

ஒன்று சரத் பொன்சேகா.மற்றையது விநாயகமூர்த்தி முரளிதரன் என்பவர்கள் சம்பந்தப்பட்டதே அவை.

இது குறித்து பதிலளித்தபோது, சரத் பொன்சேகா தொடர்பான விவகாரம் யாவும் சட்ட முறைக்குள் உட்பட்டதெனவும் முரளிதரன் குறித்துக் குறிப்பிடும் போது எவரையும் மன்னிக்க நாம் தயாராக உள்ளோம். அவர் ஜனநாயகப் பாதைக்கு வரமுடியுமானால் அவரைப் பழைய நிலைக்குக் கொண்டுவர வேண்டும் என்றும் கூறினார்.

யுத்தக் குற்றச்சாட்டுக்கள் மீதான முழு அளவிலான விசாரணை ஏன் நடத்தப்படவில்லை என்ற கேள்விக்கு, நாம் இதனை முன்பே செய்துள்ளோம். நாம் ஆணைக்குழுவையும்ஏற்படுத்தியுள்ளோம்என்றுபதிலளித்தார்.

இறுதி யுத்தத்தின்போது இடம்பெயர்ந்த 3 இலட்சம் மக்களில் மீள்குடியேற்றத்தை எதிர்பார்த்து 10 ஆயிரம் பேரே உள்ளனர். சிறுவர் போராளிகள் அனைவரும் விடுவிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவித்த ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, புலிச் சந்தேக நபர்களின் பட்டியலை வெளியிட தனது அரசாங்கம் மறுத்துள்ளதாகவும் அவ்வாறு தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் பட்டியலை ரைம்ஸ் இதழுக்கு காட்டுவதாகவும் ஆனால் அவர்களின் பெயர்களைப் பிரசுரிக்க அனுமதிக்க முடியாதெனவும் குறிப்பிட்டார். (ந-5)


| ஐ | சீரணிச் சந்தி சண்டிலிப்பாய் | இடைப்பிட்டி காரைநகர் | கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம் | அந்தோனியார் கோயிலடி மானிப்பாய் |
|---|---|---|---|---|

டியல் அக்கடமி

தரம் 6 முதல் O/L ,A/L வரை கல்வியாண்டு 2011

❁ ஒழுங்கும் கட்டுப்பாடும் நிறைந்த நிறுவனம்

கணித ஆசானும் நிர்வாகியும் V.N.பத்மநாதன்

ஆரம்பம்: 09.12.2010 வியாழன் 3.30 PM

(அ-1746)


# கொழும்பு புறப்படுவதற்...

லண்டனில் அமைந்துள்ள இலங்கை தூதரகத்துக்குச் சென்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அங்கு ஒரு கூட்டத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்துள்ளார்.

இக் கூட்டத்தில் பிரித்தானியாவுக்கான இலங்கையின் பிரதித் தூதுவர் ஹம்ஸா மற்றும் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸும் கலந்து கொண்டிருந்தனர்.

அதேவேளை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஒக்ஸ்போர்ட் ஒன்றியத்தில் ஆற்றவிருந்த உரை இரத்து செய்யப்பட்டுள்ள நிலையில் அந் நிகழ்ச்சியில் கலந்துகொள்ள இருந்தவர்களை இக் கூட்டத்திற்கு அழைத்து அவர்களை முழுமையாக சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் உள்நுழைய அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அவர்களுள் ஒரு சில தமிழ், முஸ்லிம் நபர்களும் இவ்வாறு சோதனைக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் உள் நுழைய அனுமதிக்கப்பட்டனர்.இக் கூட்டத்தில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சிங்களத்தில் உரையாற்ற முற்பட்டபோது அங்கிருந்த தமிழ் ஊடகவியலாளர் ஒருவர் தமிழ் மொழி பேசுவர்களும் அங்கிருப்பதால் ஆங்கிலத்தில் உரையாற்றும்படி கேட்டுள்ளார்.

இச் சந்தர்ப்பத்தில் அக் கூட்டத்தில் இருந்த சிங்களவர்கள் அடேய் நாங்கள் எல்லோரும் சிங்களவர்கள் என இந்த ஊடகவியலாளரை நோக்கி கத்தியிருக்கின்றனர்.

அதேவேளை இக் கூட்டத்தில் கேள்வி கேட்பதற்கு நேரம் ஒதுக்கப்படவில்லை என்பது தொடர்பிலும் இக் கூட்டம் நடத்தப்பட்ட முறை தொடர்பிலும் கூட்டத்திற்குச் சென்ற தமிழ்,முஸ்லிம் நபர்கள் அதிருப்தி கொண்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டம் முடிபடைந்த பின்னர் அங்கு பார்வையாளர்களாக அனுமதிக்கப்பட்டிருந்த சிங்களவர்களுடன் நின்ற ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை நோக்கி தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்ப்பதற்கு என்ன செய்கிறீர்கள் என ஒருவர் கேட்டபோது தன்னால் முடிந்த அனைத்தையும் தான் செய்வதாக சிங்களத்தில் கூறிவிட்டு அவர் அவ்விடத்தை விட்டு சென்றுவிட்டார்.

அதேவேளை பிரித்தானியாவுக்கான இலங்கையின் தூதுவர் நிஹால் ஜெயசிங்க மீது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடும்கோபத்துடன் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக் கூட்டம் முடிபடைந்த பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கடும் பொலிஸ் பாதுகாப்புடன் அழைத்துச் செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-5)


41ஆம், 31 ஆம் நாள் நினைவஞ்சலி




தோற்றம் 20.01.1951 மறைவு 28.10.2010

அமரர் இரத்தினம் கந்தசாமி

தோற்றம் 20.04.1952 மறைவு 06.11.2010

அமரர் கந்தசாமி அருந்தவம்

எமது விளையாட்டுக் கழக தலைவர் சதீஸ் அவர்களின் அன்புக் குலவிளக்குகள்

மாதமொன்று சென்றதையா – உம்
மறைவை நம்பமுடியவில்லை
கட்டுடல் கலையாத கந்தசாமி ஐயா
பட்டென நம்மை விட்டு சென்றதேனோ?
எங்களுக்கொரு நல்ல நண்பனைத் தந்தீர்கள்
எங்களுக்கொரு அன்பான அண்ணனைத் தந்தீர்கள்
கலங்கி நிற்கும் உம் பிள்ளைகளுடன்
என்றும் நாம் இருப்போம்
ஓம் சாந்தி!

கழுகுகள் விளையாட்டுக் கழகம்,
நெற்கொழு,
வல்வெட்டித்துறை.

(9170)


# விக்கிலீக்...

களுக்குப் பின்னர் இத்தகைய சட்ட நடவடிக்கை எடுப்பதா என்பதையிட்டு இப்போது ஆராயப்படுவதாகவும் தெரியவந்திருக்கின்றது.

விக்கிலீக்ஸ் இறுதியாக கசிய விட்டுள்ள இரகசிய ஆவணங்களில் சுமார் மூவாயிரம் ஆவணங்கள் இலங்கை தொடர்பானவையாகும்.இதில் ஒரு சில ஆவணங்களின் உள்ளடக்கங்கள் மட்டுமே ஐரோப்பிய ஊடகங்களால் கடந்த வாரம் வெளியிட்டு பெரும் புயலை கிளப்பியிருந்தன.

குறிப்பாக தமிழத் தேசியக்கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன்,ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன், தமிழர் ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவர் எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பத்மினி சிதம்பரநாதன் ஆகியோரிடம் தான் நடத்திய பேச்சுக்களின் விபரங்களை இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் பற்றீசியா, வாஷிங்டனில் உள்ள இராஜாங்கத் திணைக்களத்திற்கு அனுப்பி வைத்திருந்தார்.

இத் தகவல்கள் விக்கிலீக்ஸ் இணையத் தளத்தின் மூலமாக வெளியாகியுள்ளதை அடுத்து குறிப்பிட்ட அரசியல் தலைவர்கள் உள்நாட்டு விபரங்கள் தொடர்பாக வெளிநாட்டு இராஜதந்திரி ஒருவருக்கு தகவல்களைக் கொடுத்துள்ளார் என்ற அடிப்படையில் அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுப்பது தொடர்பாகவே அரச தரப்பில் ஆராயப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (ந-5)


வாடகைக்கு

யாழ்.நகரில் ஆஸ்பத்திரி வீதியில் I-ம் மாடியில் நான்கு அறைகளுடன் கூடிய புதிய கட்டடம் வாடகைக்கு உண்டு. தனி வழி ,தனி நீர் வழங்கல் , தனி மின் சாரம் வாகன தரிப்பிட வசதிகள் கொண்டவை.

தொடர்பு : 0773126712

(அ-1744)

புதிய வகுப்புகள் ஆரம்பம்

அனுமதிகள் இன்று முதல்

தரம்: 4 முதல் O/L வரை

GRDE: 6, 7, 8, 9 ENGLISH MEDIUM

யாழ் நகரின் தனித்துவ ஆசிரிய குழாம்

சயன்ஸ் அக்கடமி

அரியாலை. இரு இடங்கள் நல்லூர்.

எம்முடன் இணைந்தோர் உயர்கல்வி பெற்றோரே!

அமைதியான சூழலில் சீரான நேரஒழுங்கில்

அகவை அறுபதில் ஓய்வு பெறும்

திரு. கந்தையா தங்கராசா அவர்கள்

(ஆசிரியர், S.L.T.S.1, B.A., DIP.IN EDU)



முத்தமிழின் தத்துவனே! மும்மொழியில் வித்தகனே!
சொத்தெனவே நற்பணிபுரிந்த நாயகனே! நீவிர்!
தயவான துணையுடன், தக்க நற்பிள்ளைகளும்
மருமக்கள், பேரர்கள் மகிழ்வுடன் கண்டு திருவொடு
பெருமையாய் பல்லாண்டு வாழ்க! ஊழிதோறூழி
நீடூழி வாழ்க!

என வாழ்த்துபவர்கள்;

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
முன்னாள் அதிபருடன் பணிக்கால ஆசிரியர்கள்
[யா/ கொக்குவில் மேற்கு சி.சி.த.க.பாடசாலை]

(அ-1745)

A/L 2010 ? What Next?

USA, UK பல்கலைக்கழகங்களில் Master Degree

SMS your name & course to 772 395 895 & Get Schol.

CIMA-UK, Engineering-USA, BIT

நீங்களும் தகவல்தொழில்நுட்ப, வணிக துறையில் சாதனை படைக்கலாம்.

Free : BCS-UK, IELTS / TOEFL, CISCO-CCNA, Hardware, ICDL



Fast Track

Government Schol.

Closing Date 07.12.2010

MCS Supported By UNDP/JRRP

புலமைப் பரிசிலுக்கும் மேலதிக விபரங்களுக்கும் நேரில்,

324, Palaly Road, Campus Junction, Jaffna.


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.12.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org